TARGETING

# TNPSC

## GROUP-II

## 2023

**16th TEST**

Marks : 300
Time : 3 Hrs






## QUESTION WITH SIMPLIFIED ANSWER

அறிவியல் &
தொழில்நுட்பம்

### வேதியியல்

## MAINS WRITTEN EXAM

- தனிமங்கள் மற்றும் சேர்மங்கள்
- அமிலங்கள், காரங்கள் மற்றும் உப்புகள்
- ஆக்சினேற்றம் மற்றும் ஒடுக்கம்
- கார்பன், நைட்ரஜன் மற்றும் அதன் சேர்மங்கள்
- வேதி உரங்கள், உயிர்க்கொல்லிகள், பூச்சிக்கொல்லிகள்

ARISE AWAKE ACHIEVE

SURESH' IAS ACADEMY

தமிழ் வழி


| THOOTHUKUDI | TIRUNELVELI | RAMANATHAPURAM | MADURAI | CHENNAI |
| --- | --- | --- | --- | --- |
| 0461 - 4000970 | 0462 - 2560123 | 04567 - 355922 | 0452 - 2383777 | 044 - 47665919 |
| 99445 11344 | 98942 41422 | 75503 52916 | 98431 10566 | 97555 52003 |

TEST 16 வெற்றி ஒன்றே இலக்கு

# Answer Key - Tamil

அலகு – 1

**1) கலவைகள் மற்றும் சேர்மங்களுக்கிடையேயான வேறுபாடுகளை பொருத்தமான எடுத்துக்காட்டுகளுடன் எடுத்துரைக்கவும்.**

| வ.எண் | கலவைகள் | சேர்மங்கள் 6 |
|---|---|---|
| 1. | இது ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட பொருட்களாலானது | இது ஒரே ஒரு பொருளாலானது |
| 2. | இதன் பகுதிப் பொருட்கள் எந்தவொரு விகிதாச்சாரத்திலும் இருக்கலாம் | இதன் பகுதிப் பொருட்கள் நிலையான விகிதத்திலேயே இருக்கும். |
| 3. | கலவைகள் அதிலுள்ள பகுதிப் பொருட்களின் பண்புகளை ஒத்துள்ளன. | சேர்மத்தின் பண்பு அதிலுள்ள பகுதிப் பொருட்களின் பண்புகளிலிருந்து வேறுபடுகிறது |
| 4. | இவற்றின் பகுதிப் பொருட்களை இயற்பியல் முறையில் பிரித்தெடுக்க முடியும் | இவற்றின் பகுதிப் பொருட்களை வேதியியல் முறையில் பிரித்தெடுக்க முடியும். |
| 5. | உதாரணம்: மணல் மற்றும் நீர், மணல் மற்றும் இரும்புத் துகள்கள், கான்கிரீட், நீர் மற்றும் எண்ணெய், சாலட், ஆல்கஹால் | உதாரணம் : நீர், கார்பன் டை ஆக்ஸைடு, சிமெண்ட் |

**2) உலோகப் போலிகள் என்றால் என்ன? அதன் பண்புகள் மற்றும் பயன்களைப் பற்றி விளக்குக.**

**உலோகப் போலிகள்** 2

- உலோகப் பண்புகளையும், அலோகப் பண்புகளையும் பெற்றுள்ள தனிமங்கள் உலோகப் போலிகள் எனப்படுகின்றன.
- எடுத்துக்காட்டு : போரான், சிலிக்கான், ஆர்சனிக், ஜெர்மானியம், ஆண்டிமனி, டெல்லூரியம் மற்றும் பொலோனியம்

**உலோகப் போலிகளின் பண்புகள்** 2

- உலோகப் போலிகள் அனைத்தும் அறை வெப்பநிலையில் திண்மங்கள்
- உலோகப் போலிகள் பிற உலோகங்களுடன் சேர்ந்து உலோகக் கலவைகளை ஏற்படுத்துகின்றன.
- சிலிக்கான், ஜெர்மானியம் போன்ற உலோகப் போலிகள் குறிப்பிட்ட சூழ்நிலைகளில் மின்சாரத்தைக் கடத்துகின்றன.
- எனவே, அவை குறைகடத்திகள் என அழைக்கப்படுகின்றன.
- சிலிக்கான் பளபளப்பானது (உலோகப் பண்பு). ஆனால், தகடாக விரியும் பண்பையோ, கம்பியாக நீளும் பண்பையோ பெற்றிருப்பதில்லை.
- இது உலோகங்களை விட குறைந்த அளவே மின்சாரத்தையும், வெப்பத்தையும் கடக்கிறது.
- உலோகப்போலிகளின் இயற்பியல் பண்புகள் அலோகங்களின் பண்புகளை ஒத்திருக்கின்றன. ஆனால் அவற்றின் வேதியியல் பண்புகள் அலோகங்களின் பண்புகளை ஒத்திருக்கின்றன.

**உலோகப் போலிகளின் பயன்கள்** 2

- சிலிக்கான் மின்னணுக் கருவிகளில் பயன்படுகிறது.
- போரான் பட்டாசுத் தொழிற்சாலையிலும், ராக்கெட் எரிபொருளைப் பற்றவைக்கும் பொருளாகவும் பயன்படுகிறது.

**3) பாரீஸ் சாந்து எவ்வாறு தயாரிக்கப்படுகிறது? அதன் பயன்களைக் குறிப்பிடுக.**

**பாரீஸ் சாந்து** 3

- கால்சியம் சல்பேட் ஹெமிஹைட்ரேட் $CaSO_4.H_2O$ (பாரீஸ் சாந்து)
- இது கால்சியம் சல்பேட்டின் ஹெமிஹைட்ரேட்டாகும்.
- இது ஜிப்சத்தை, $CaSO_4.H_2O$, 393K வெப்பநிலையில் சூடுபடுத்தும் போது ஒரு மூலக்கூறு ஜிப்சம் 1 மூலக்கூறு நீரை இழந்து $CaSO_4.2H_2O$எனப்படும் பாரீஸ் சாந்து கிடைக்கிறது.
- பாரீசில் உள்ள மாண்ட மார்ட்டி என்னும் இடத்தில் பாரீஸ் சாந்து தயாரிக்க ஜிப்சம் அதிகமாக பயன்படுத்தப்பட்டதால் இப்பெயர் இதற்கு வழங்கப்பட்டது.

$$2CaSO_4 . 2H_2O(s) \rightarrow 2 CaSO_4 . H_2O + 3H_2O$$

- 393 K க்கு மேல், எவ்வித படிக நீர் மூலக்கூறும் காணப்படுவதில்லை. மேலும், நீரற்ற கால்சியம் சல்பேட் $CaSO_4$ உருவாகிறது.
- இது முற்றும் எரிக்கப்பட்ட சாந்து (dead burnt plaster) என அறியப்படுகிறது.

**பண்புகள்** 1

- இது நீருடன் சேர்ந்து கடினமாகும் பண்பினைப் பெற்றுள்ளது. இதனைச் சேர்க்கும் போது இது நெகிழியைப் போன்ற பொருளாக மாறி 5 முதல் 15 நிமிடங்களில் கடினமான பொருளாக மாறுகிறது.

**பயன்கள்** 2

- கட்டுமானத் தொழிலில் இது அதிக அளவில் பூச்சாக பயன்படுகிறது.

SURESH

- ஒரு உறுப்பில் எலும்பு முறிவு அல்லது சுளுக்கு பாதிக்கப்பட்டுள்ள இடங்களை நகராமல் இருத்தி வைக்க பயன்படுகிறது.
- பற்சீராக்கும் துறை, அணிகலன்கள், சிலைகள் மற்றும் வார்ப்புகள் உருவாக்குவதில் இது பயன்படுகிறது.
- அலங்கார கூரை தயாரிக்கவும் பயன்படுகிறது.
- கரும்பலகையில் எழுதும் பொருள் தயாரிக்கப் பயன்படுகிறது.

**4) இனக்கலப்பாதல் வரையறு? இனக்கலப்பு பற்றிய முக்கிய அம்சங்களைப் பற்றி விவாதிக்க.**

**<u>இனக்கலப்பு</u>** **3**

- இனக்கலப்பு என்பது ஏறக்குறைய சமமான ஆற்றல் கொண்ட அணுவின் ஆர்பிட்டால்கள் ஒன்றுடன் ஒன்று கலந்து சமமான ஆற்றலுடைய, ஒத்த வடிவமுடைய ஆர்பிட்டால்களை தருவதாகும்.
- உருவாகும் சமமான புதிய ஆர்பிட்டால்கள் இனக்கலப்பு ஆர்பிட்டால்கள் எனப்படும்.
- இனக்கலப்பு ஆர்பிட்டால்கள் ஆதார ஆர்பிட்டால்களிலிருந்து முழுவதும் வேறுபட்ட பண்புகளை பெற்றிருக்கின்றன.

**<u>இனக்கலப்பு பற்றிய முக்கிய கருத்துக்கள்</u>** **3**

- இனக்கலப்பில் ஈடுபடும் ஆர்பிட்டால்கள் ஏறக்குறைய சம ஆற்றலைப் பெற்றுள்ளன.
- ஒரே அணுவின் ஆர்பிட்டால்கள் இனக்கலப்பில் ஈடுபடுகின்றன.
- உருவாகும் இனக்கலப்பு ஆர்பிட்டால்களின் எண்ணிக்கையானது இனக்கலப்பில் ஈடுபடும் ஆர்பிட்டால்களின் எண்ணிக்கைக்கு சமமாகும்.
- இனக்கலப்பு ஆர்பிட்டால்கள் ஒரே வடிவமைப்பையும், ஆற்றலையும் பெற்றுள்ளன.
- பிணைப்பு உருவாதலில் ஈடுபடும் இனக்கலப்பு ஆர்பிட்டால் ஓர் எலக்ட்ரானை மட்டுமே பெற்றுள்ளது.
- இனக்கலப்பு ஆர்பிட்டால்களில் உள்ள எலக்ட்ரான் விலக்குவிசை காரணமாக அவை அதிக தொலைவில் உள்ளன.
- அணு ஆர்பிட்டால்கள் நேரடியாக மேற்பொருந்துவதால் சிக்மா ( $\sigma$ ) பிணைப்பு உருவாகிறது.
- அணு ஆர்பிட்டால்கள் பக்கவாட்டில் மேற்பொருந்துவதால் பை ( $\pi$ ) பிணைப்பு உருவாகிறது.

**5) ஹுண்டின் பன்முகத்தன்மை விதியை விவரிக்கவும்.**

**<u>ஹுண்ட் விதி</u>** **4**

- ஆஃபாதத்துவமானது, பல்வேறு ஆர்பிட்டால்களில் எலக்ட்ரான்கள் எவ்வாறு நிரப்பப்படுகின்றன என்பதனை விளக்குகிறது.
- ஆனால் $p_x$, $p_y$ and $p_z$ போன்ற சம ஆற்றலுடைய (degenerate) ஆர்ப்பிட்டால்களில் எலக்ட்ரான்கள் நிரப்பப்படுவது பற்றி அவ்விதியில் ஏதும் குறிப்பிடப்படவில்லை.
- இந்த ஆர்பிட்டால்கள் எவ்வரிசையில் நிரப்பப்பட வேண்டும் என்பது ஹுண்ட் விதி தருகிறது.
- **ஹுண்ட் விதிப்படி,** சம ஆற்றலுடைய ஆர்பிட்டால்களில் எலக்ட்ரான்கள் நிரப்பப்படும்போது, நிரப்பப்படுவதற்கு வாய்ப்புள்ள அனைத்து சம ஆற்றலுடைய ஆர்பிட்டால்களும் ஒற்றை எலக்ட்ரானால் நிரப்பப்பட்ட பின்னரே, எலக்ட்ரான் இரட்டையாதல் (electron pairing) நிகழும்.
- மூன்று p ஆர்பிட்டால்கள், ஐந்து d ஆர்பிட்டால்கள் மற்றும் ஏழு f ஆர்பிட்டால்கள் உள்ளன என நாம் அறிவோம்.
- இந்த ஆர்பிட்டால்களில் முறையே, நான்காவது, ஆறாவது மற்றும் எட்டாவது எலக்ட்ரான்கள் நுழையும் போது மட்டுமே எலக்ட்ரான் இரட்டையாதல் துவங்கும்.
- உதாரணமாக ஆறு எலக்ட்ரான்களைக் கொண்டுள்ள கார்பன் அணுவினைக் கருதுவோம்.
- ஆஃபாதத்துவத்தின்படி, இதன் எல்ட்ரான் அமைப்பு $1s^2$, $2s^2$, $2p^2$. இதனை பின்வருமாறு குறிப்பிடலாம். **2**

| $1s^2$ | $2s^2$ | $2p_x^1$ | $2p_y^1$ | $2p_z^0$ |
|---|---|---|---|---|
| ⇅ | ⇅ | ↑ | ↑ | |

- இந்நிகழ்வில், எலக்ட்ரான் – எலக்ட்ரான் விலக்கு விசையினை குறைத்திட (சிறுமமாக்கிட) ஹுண்ட்விதிப்படி, ஆறாவது எலக்ட்ரானானது, ஐந்தாவது எலக்ட்ரான் இடம் கொண்டுள்ள $p_x$ ஆர்பிட்டாலில் சென்று இரட்டையாகாமல், $p_y$ ஆர்பிட்டாலுக்குச் செல்கிறது.

**6) வேதிச்சேர்மம் கோணத்தில் சோப்பானது செயற்கை அழுக்கு நீக்கியிலிருந்து எவ்வாறு வேறுபடுகிறது?**

**<u>சோப்பு மற்றும் டிடர்ஜெண்ட் வேறுபாடு</u>**

| **சோப்பு** | **டிடர்ஜெண்ட்** **6** |
|---|---|
| இது நீண்ட சங்கிலி அமைப்பை பெற்ற கார்பாக்சிலிக் அமிலங்களின் சோடிய உப்புகள். | இது சல்போனிக் அமிலத்தின் சோடியம் உப்புகள் |
| சோப்பின் அயனி பகுதி $-COO^-Na^+$ | டிடர்ஜெண்டின் அயனிப்பகுதி $-SO_3^-Na^+$ |
| விலங்குகளிடமிருந்து கிடைக்கும் கொழுப்பு மற்றும் தாவரங்களிடமிருந்து கிடைக்கும் எண்ணெய் ஆகியவற்றிலிருந்து சோப்பு தயாரிக்கப்படுகிறது. | பெட்ரோலியத்திலிருந்து (கச்சா எண்ணெய்) கிடைக்கும் ஹைட்ரோ கார்பனிலிருந்து இவை தயாரிக்கப்படுகிறது. |
| கடின நீரில் பயன்படுத்த முடியாது | கடின நீரிலும் சிறப்பாக சலவை செய்யலாம். |
| கடின நீருடன் சேரும்போது (ஸ்கம்) படிவுகளை உருவாக்கும் | கடினநீருடன் சேரும்போது (ஸ்கம்) படிவுகளை உருவாக்காது. |
| குறைவான அளவில் நுரைகளை உருவாக்கும் | அதிகளவில் நுரைகளை உருவாக்கும். |
| உயரிய சிதைவு அடையும் தன்மை பெற்றது. | உயரிய சிதைவு அடையும் தன்மை அற்றது. |

- தற்போது உள்ள டிடர்ஜெண்ட்களில் பரப்பு இழுவிசை குறைப்பு மூலக்கூறுகளோடு மேலும் பல பொருட்கள் சேர்க்கப்படுகின்றன.

அவைகளில் சில கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

- சோடியம் சிலிக்கேட், சலவை இயந்திரங்களில் அரிப்பு ஏற்படாமல் பாதுகாக்க இது சேர்க்கப்படுகிறது.
- ஃப்ளூரெசென்ட் வெண்மை ஏற்றிகள், துணிகள் பளிச்சிடுவதற்கு இது சேர்க்கப்படுகிறது.
- சோடியம் பெர்போரைட் (ஆக்சிஜன் வெளுப்பான்), சலவையின் போது சில வகை கறைகளை நீக்க பயன்படுகிறது.
- சோடியம் சல்பேட், டிடர்ஜெண்ட் துகள் கெட்டி ஆகாமல் தடுக்க இது பயன்படுகிறது.
- நொதிகள், இரத்தம் மற்றும் காய்கறி சாறு போன்ற உயிரியல் பொருட்களில் கறைகளை நீக்க இது சேர்க்கப்படுகிறது.
- சலவை செய்தபின் துணிகளில் நறுமணம் பெறுவதற்காக சில வேதிப்பொருட்கள் சேர்க்கப்படுகின்றன.

**7) துணிகளை சுத்தம் செய்வதற்கு சலவைசோப்பு எவ்வாறு உதவுகிறது?**

**சோப்பு மற்றும் டிடர்ஜெண்ட்** 3

- அழுக்குகளை நீக்கவும் சுத்தப்படுத்துவதற்கும் சோப்பு மற்றும் டிடர்ஜெண்ட்டுகள் பயன்படுகின்றன. தூய நீரை மட்டும் பயன்படுத்தி துணிகள் மற்றும் உடல்களிலுள்ள அழுக்கு மற்றும் எண்ணெய் பொருட்களை அகற்ற முடியாது.
- சோப்பு மற்றும் டிடர்ஜெண்டுகளில் இருக்கும் பரப்பு இழுவிசை குறைப்பிகள், நீர் மூலக்கூறுகளை சுற்றி நின்று, பரப்பு இழுவிசையை குறைக்கின்றன.
- சோப்பு மற்றும் டிடர்ஜெண்டுகள் வெவ்வேறு வேதியியல் இயல்புகளைக் கொண்டது.
- சோப்பு என்பது ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட கொழுப்பு அமிலங்களின் உப்பு.
- இது அழுக்கு நீக்க பயன்படும் ஒரு வேதிச்சேர்மம் அல்லது வேதி சேர்மங்களின் தொகுப்பு ஆகும்
- சில குறிப்பிட்ட சூழ்நிலைகளில் இரண்டு சுத்தப்படுத்தும் செயல்களை செய்கிறது.

**சோப்பின் தூய்மையாக்கல் வினை** 3

- ஒரு சோப்பு மூலக்கூறு வேறுபட்ட இரு வேதிப் பகுதிகளை பெற்றுள்ளன. இப்பகுதிகள் நீருடன் வேறுபட்ட முறையில் வினைபுரிகிறது.
- ஒரு முனை சிறிய தலை போன்ற கார்பாக்சிலேட் தொகுதி (-COONa) கொண்ட முனைவுள்ள பகுதியையும், மறுமுனை பெரிய வால் போன்ற நீளமான ஹைட்ரோ கார்பன் சங்கிலி தொடரையுடைய முனைவற்ற பகுதியையும் பெற்றுள்ளது.
- முனைவுள்ள பகுதி நீர் விரும்பும் பகுதியாக செயல்பட்டு நீருடன் ஒட்டிக் கொள்கிறது.
- முனைவற்ற பகுதி நீரை வெறுக்கும் பகுதியாக செயல்பட்டு ஆடைகளில் உள்ள அழுக்கு மற்றும் எண்ணெய் ஆகியவற்றுடன் ஒட்டிக் கொள்கிறது.
- நீரை வெறுக்கும் பகுதி மாசினை தன்னுள் அடக்கி கொள்கிறது. நீரை விரும்பும் பகுதி மொத்த மூலக்கூறையும் நீரில் கரைய செய்கிறது.
- சோப்பு அல்லது டிடர்ஜெண்ட் நீரில் கரைக்கும்பொழுது சோப்பு மூலக்கூறுகள் ஒன்றாக இணைந்து கொத்துகளாக மீசெல்ஸ் உருவாகிறது.
- இந்த கொத்துகளில் ஹைட்ரோகார்பன் சங்கிலி பகுதியானது, அழுக்கு மற்றும் எண்ணெய் பகுதியோடு ஒட்டிக்கொள்கிறது.
- இவ்வாறாக சோப்பின் முனைவற்ற பகுதி அழுக்கைச் சுற்றிக் கொள்கிறது.
- சோப்பின் கார்பாக்சிலேட், பகுதி, கொத்துகளை நீரில் கரையச் செய்கிறது.
- இவ்வாறாக அழுக்கு சோப்பினால் நீக்கப்படுகிறது.

**8) 2022-ல் வேதியலுக்கான நோபல் பரிசு பெற்றவர்கள் மற்றும் அவர்களது கண்டுபிடிப்புகள் குறித்து விவரி?**

- வேதியலுக்கான நோபல் பரிசு இவ்வாண்டு க்ளிக் மற்றும் பயோ ஆர்த்தோகனல் வேதியியலின் வளர்ச்சிக்காக வழங்கப்பட்டுள்ளது. 6
- இக்கண்டுபிடிப்புகள் வேதியியல் துறை செயல்பாட்டினை ஒரு புதிய சகாப்தத்திற்கு எடுத்துச் சென்றது. மூலக்கூறுகளின் இணைப்பு சிகிச்சைக்காக பயன்படுத்தப்பட்டு வருகிறது.
- வேதியலாளர்கள் தொடர்ந்து மூலக்கூறுகளை இணைக்கும் முயற்சியில் ஈடுபடுகின்றனர். மருத்துவத் துறையில் இவை செல்களில் உள்ள நோய்க்கிருமிகளை அடையாளம் காண்பதற்காக உதவுகிறது.
- வேதியியல் 2022-க்கான நோபல் பரிசை பேர்ரி ஷார்ப்லஸ், மோர்டன் மெல்டல் ஆகியோர் பெற்றனர். இவர்கள் க்ளிக் வேதியலுக்கான அடித்தளத்தையும், புதிய செயல்பாட்டு முறையையும் உருவாக்கினர்.
- இக்கண்டுபிடிப்பு மூலக்கூறு இணைப்பில் ஒரு புதிய சகாப்தத்தை ஏற்படுத்தியது.
- இவர்கள், கரோலின் பெர்டோசி ஆகியோருடன் நோபல் பரிசை பகிர்ந்து கொண்டனர். இவர் புற்றுநோய் சிகிச்சைக்காக பயன்படுத்தப்படும் பயோஆர்த்தோகனல் வினைகளை உருவாக்கி ஒரு புதிய பரிணாமத்திற்கு இட்டுச் சென்றார்.
- க்ளிக் வேதிமுறையின் மூலமாக மூலக்கூறுகளின் இணைப்பு துரிதமாக மேற்கொள்ளப்படுகிறது.
- பெர்டோசி க்ளிக் வேதிமுறை பயன்பாட்டை உயிரினங்களில் புகுத்தினார்.
- ஷார்ப்லஸ் மற்றும் மெல்டலின் கண்டுபிடிப்பில் “செம்பு உலோகம்” வினையூக்கியாக பயன்படுத்தப்படுகிறது.
- உயிரினங்களுக்கு ஆபத்தை விளைவிக்கும் இந்த வினையூக்கி, “க்ளிக் வேதியியலின் கிரீடம்” என்று அறியப்படுகிறது.
- ஆனால் பெர்டோசியின் கண்டுபிடிப்பில் செம்புக்கு பதிலாக மூலக்கூறுகளை இணைப்பதற்காக அல்கைன்கள் பயன்படுத்தப்படுகிறது.

**9) pH அளவு என்றால் என்ன? அன்றாட வாழ்வில் pHன் பங்கு பற்றி எழுதுக**

**pH அளவீடு** 2

- கரைசலை, ஹைட்ரஜன் அயனிகளின் செறிவின் அடிப்படையில் அளவிடுதலே pH அளவீடு எனப்படும்.

- pHஇல் உள்ள pஎன்பது ஜெர்மன் மொழியில் உள்ள பொட்டாஷ் என்ற வார்த்தையைக் குறிக்கிறது. இதன் பொருள் "அதிக ஆற்றல்" என்பதாகும்.
- pHஅளவீட்டில் 0 முதல் 14 வரை அளவிடப்படும். pHமதிப்புகள் ஒரு, கரைசலின் அமிலத்தன்மை, காரத்தன்மை மற்றும் நடுநிலைத் தன்மை ஆகியவற்றை அடையாளம் காண உதவுகின்றன.
- அமிலத்தன்மை கொண்ட கரைசலின் மதிப்பு 7 ஐ விடக் குறைவாக இருக்கும்.
- காரத் தன்மை கொண்ட கரைசலின் மதிப்பு 7 ஐ விட அதிகமாக இருக்கும்.
- நடுநிலைத் தன்மை கொண்ட கரைசலின் மதிப்பு 7-க்குச் சமமாக இருக்கும்

**அன்றாட வாழ்வின் pHன் பங்கு** 4

**தாவரங்களும், விலங்குகளும் pH சார்ந்த உணர்வுள்ளவையா**

- நமது உடலானது 7.0 முதல் 7.8 வரை உள்ள pH எல்லை சார்ந்து வேலை செய்கிறது.
- உயிரினங்கள் ஒரு குறுகிய pH எல்லைக்குள் மட்டுமே உயிர் வாழ இயலும்.
- நம் உடலில் உள்ள திரவங்கள் வெவ்வேறு pH மதிப்புகளைக் கொண்டவை.
- எடுத்துக்காட்டாக மனித ரத்தத்தின் pH மதிப்பு 7.35லிருந்து 7.45 ஆகும்.
- இந்த மதிப்பிலிருந்து குறைந்தாலோ அல்லது அதிகரித்தாலோ, அது நோயை உண்டாக்கும்.
- இரத்தத்திற்கான சிறந்த pH 7.4 ஆகும்.

**மனித செரிமான மண்டலத்தில் pH மதிப்பு**

- நமது இரைப்பை ஹைட்ரோகுளோரிக் அமிலத்தை சுரக்கிறது என்பது ஒரு வியப்பூட்டும் செய்தியாகும்.
- இந்த அமிலம் இரைப்பையை பாதிக்காமல் உணவைச் செரிக்க உதவுகிறது.
- சரியான செரிமானம் இல்லாதபோது இரைப்பையானது கூடுதலான அமிலத்தைச் சுரந்து வலியையும், எரிச்சலையும், ஏற்படுத்துகிறது.
- இரைப்பையில் உள்ள திரவத்தின் தோராயமான pH மதிப்பு 2.0 ஆகும்.

**pH மாற்றம் - பற்சிதைவுக்குக் காரணம்**

- மனித உமிழ்நீரின் pH மதிப்பு 6.5-7.5 வரை உள்ளது.
- நமது பற்களின் மேற்பரப்பு படலமானது கால்சியம் பாஸ்பேட் என்ற மிகக் கடினமான பொருளினால் ஆனது.
- ஏனெனில் உமிழ்நீரின் pH 5.5 க்கும் கீழே குறையும்பொழுது பற்களின் மேற்பரப்பு படலம் (எனாமல்) பாதிக்கப்படுகிறது.
- இது பற்சிதைவு எனப்படுகிறது.
- பொதுவாக நாம் பயன்படுத்தப்படும் பற்பசைகள் காரத்தன்மை கொண்டவை. இவை கூடுதல் அமிலத்தன்மையை நடுநிலையாக்கம் செய்து பற்சிதைவைத் தடுக்கின்றன.

**மண்ணின் pH**

- விவசாயத்திற்கு மண்ணின் pH மிக முக்கியத்துவம் வாய்ந்தது.
- சிட்ரிக் அமிலம் கொண்ட பழங்கள் சற்று காரத்தன்மை உள்ள மண்ணிலும், நெல் அமிலத்தன்மை கொண்ட மண்ணிலும், கரும்பு நடுநிலைத்தன்மை கொண்ட மண்ணிலும் வளரும்.

**மழை நீரின் pH**

- மழை நீரின் pH மதிப்பு ஏறக்குறைய 7 ஆகும். இது, மழை நீர் நடுநிலைத்தன்மையானது மற்றும் தூய்மையானது என்பதைக் குறிக்கிறது.
- வளிமண்டலக் காற்று சல்பர் டை ஆக்சைடு, நைட்ரஜன் ஆக்சைடுகள் ஆகிய வாயுக்களால் மாசுபடும் பொழுது அவை மழைநீரில் கரைந்து pH மதிப்பை 7ஐ விடக் குறையச் செய்கின்றன.
- இவ்வாறு மழைநீரின் pH 7ஐ விட குறையும் பொழுது அம்மழை அமிலமழை எனப்படுகிறது.
- இந்த அமிலமழை நீர் ஆறுகளில் சேரும் பொழுது அவற்றின் pHஐ குறைக்கின்றன.
- இதனால் நீர்வாழ் உயிரினங்களின் வாழ்வு பாதிக்கப்படுகிறது.

**10) விளக்குக.**

**a) ஆக்சிஜனேற்றம்**

**b) ஒடுக்கம்**

**c) ஆக்சிஜனேற்ற ஒடுக்க வினைகள்**

**a) ஆக்சிஜனேற்றம்** 2

- ஒரு வேதிவினையில் ஆக்ஸிஜன் சேர்க்கப்படுதலோ, ஹைட்ரஜன் நீக்கப்படுதலோ அல்லது எலக்ட்ரான்கள் நீக்கப்படுதலோ நிகழும் போது அந்த வினை ஆக்ஸிஜனேற்றம் எனப்படுகிறது.

$2Mg + O_2 \rightarrow 2MgO$(ஆக்ஸிஜன் சேர்க்கப்படுதல்)

$CaH_2 \rightarrow Ca + H_2$ (ஹைட்ரஜன் நீக்கப்படுதல்)

$Fe^{2+} \rightarrow Fe^{3+} + e^-$ (எலக்ட்ரான் நீக்கப்படுதல்)

**b) ஒடுக்கம்** 2

- ஒரு வேதிவினையில் ஹைட்ரஜன் சேர்க்கப்படுதலோ, ஆக்ஸிஜன் நீக்கப்படுதலோ அல்லது எலக்ட்ரான் ஏற்கப்படுதலோ நிகழும் போது அந்த வினை ஒடுக்கம் எனப்படுகிறது.

$2Na + H_2 \rightarrow 2NaH$ (ஹைட்ரஜன் சேர்க்கப்படுதல்)

$CuO + H_2 \rightarrow Cu + H_2O$ (ஆக்ஸிஜன் நீக்கப்படுதல்)

$Fe^{3+} + e^- \rightarrow Fe^{2+}$ (எலக்ட்ரான் சேர்க்கப்படுதல்)

**c) ஆக்சிஜனேற்ற ஒடுக்க வினைகள்** 2

- பொதுவாக, ஒரு வினையில் ஆக்ஸிஜனேற்றமும் ஒடுக்கமும் ஒரே நேரத்தில் நிகழ்கின்றன.
- ஒரு வினைபடு பொருள் ஆக்ஸிஜனேற்றம் அடையும் போது மற்றொன்று ஒடுக்கமடைகிறது.
- எனவே இவ்வகையான வினைகள் ஆக்ஸிஜனேற்ற ஒடுக்க வினைகள் எனப்படுகின்றன.

$2PbO + C \rightarrow 2Pb + CO_2$

$Zn + CuSO_4 \rightarrow Cu + ZnSO_4$

**11) எதிர் - ஆக்சிஜனேற்றிகள் பற்றி சிறுகுறிப்பை உதாரணங்களுடன் தருக?**

**எதிர் ஆக்சிஜனேற்றிகள்:** 6

- எதிர் ஆக்சிஜனேற்றிகள் என்பவை உணவுப் பொருட்கள் ஆக்சிஜனேற்றமடைந்து ஊசிப்போதலை தடுக்கும் சேர்மங்களாகும்.

- கொழுப்பு மற்றும் எண்ணெயை கொண்டுள்ள உணவுகள் எளிதில் ஆக்சிஜனேற்றமடைந்து ஊசிப்போகின்றன.
- கொழுப்பு மற்றும் எண்ணெய்களின் ஆக்சிஜனேற்றத்தை தடுக்கும் பொருட்டு, உணவில் BHT (பியுட்டைல் ஹைட்ராக்ஸி டொலுயீன்), BHA (பியுட்டைல் ஹைட்ராக்ஸி அனிசோல்) ஆகிய வேதிப்பொருட்கள் உணவுக்கூட்டுப் பொருட்களாக சேர்க்கப்படுகின்றன.
- இவை பொதுவாக எதிர் ஆக்சிஜனேற்றிகள் என்றழைக்கப்படுகின்றன.

**எடுத்துக்காட்டுகள்**

- எதிர் ஆக்சிஜனேற்றிகள் இதய வால்வு தொடர்பான வியாதிகள், புற்றுநோய், கண்ணில் புரை ஆகியவற்றிலிருந்து பாதுகாப்பு அளிப்பதோடு வயதாவதால் ஏற்படும் பாதிப்பையும் குறைக்கிறது
- மிக முக்கியமான எதிர் ஏற்றிகள் விட்டமின் –சி , விட்டமின் –இ, – கரோட்டின் ஆகியவை.
- எண்ணெய்கள் ஆக்சிஜனேற்றம் அடைவதால் உருவாக்கப்படும் தனி உறுப்புகளுடன், இச்சேர்மங்கள் வினைப்பட்டு ஆக்சிஜனேற்றம் அடைவதால் உணவு ஆக்சிஜனேற்றம் அடையும் சங்கிலி வினையானது நிறுத்தப்படுகிறது.
- சல்பர் டையாக்சைடும், சல்பைட்டுகளும் உணவு கூட்டுப் பொருட்களாக பயன்படுத்தப்படுகின்றன
- இவை எதிர் நுண்ணுயிரிகளாகவும் எதிர் ஆக்சிஜனேற்றிகளாகவும் மற்றும் நொதி தடுப்பான்களாகவும் செயல்புரிகின்றன.

**12) பின்வருவனவற்றைப் பற்றி சிறுகுறிப்பு வரைக.**

**a) ஏன் ஆப்பிள் மற்றும் சில காய்கறிகள் வெட்டப்படும் போது நிறம் மாறுகிறது?**

**b) ஒளிச்சேர்க்கை எதிர்வினை?**

**a) ஏன் ஆப்பிள் மற்றும் சில காய்கறிகள் வெட்டப்படும் போது நிறம் மாறுகிறது? 3**

- நறுக்கிய ஆப்பிள்கள் மற்றும் காய்கறிகள் பழுப்பு நிறமாதல்
- ஆப்பிள்களும், வேறு சில பழங்களும் நறுக்கி வைத்த பிறகு காற்றில் உள்ள ஆக்சிஜனுடன் ஏற்படும் வேதிவினையால் பழுப்பு நிறமடைகின்றன.
- இந்நிகழ்வு பழுப்பாதல் எனப்படும்.
- ஆப்பிள், பழங்கள் மற்றும் காய்கறிகளின் செல்கள் பாலிபீனால் ஆக்சிடேஸ் அல்லது டைரோசினேஸ் என்ற என்சைமைக் கொண்டுள்ளன.
- இவை ஆக்சிஜடன் தொடர்புகொள்ளும்பொழுது பழங்களிலுள்ள பீனாலிக் சேர்மங்களை மெலனின் (அ) நொதியால் பழுப்பாகுதல் எனப்படும் பழுப்பு நிறமிகளாக மாறச் செய்கின்றன.
- இத்தகைய நொதியால் பழுப்பாகுதல் என்பது வாழைப்பழம், அவகோடா, பேரிக்காய், உருளை போன்றவற்றிலும் நிகழ்கிறது.

**b) ஒளிச்சேர்க்கை எதிர்வினை 3**

- ஒளிச்சேர்க்கை எதிர்வினை
- ஒளியானது சிதைவு வினைகளை நிகழ்த்தும் மற்றொரு வகை ஆற்றல் ஆகும்.
- எடுத்துக்காட்டு: சில்வர் புரோமைடு மீது ஒளி படும்பொழுது, அது சிதைவுற்று சில்வர் உலோகத்தையும், புரோமின் வாயுவையும் தருகிறது.
- ஒளியானது இச்சிதைவை நிகழ்த்துவதால் இவ்வினை **ஒளிச்சிதைவு** எனப்படும்.

$$2AgBr(s) \xrightarrow{\text{ஒளி}} 2Ag(s) + Br_2(g)$$

- இங்கு மஞ்சள் நிற சில்வர் புரோமைடு சாம்பல் நிற சில்வர் உலோகமாக மாறுகிறது.
- இதுவும் சேர்மத்திலிருந்து தனிமம் – தனிமம் என்ற சிதைவுறுதல் வகைக்கு எடுத்துக்காட்டாகும்.

**13) a) ஹேலோ ஆல்கேன்களின் பயன்களைக் குறிப்பிடுக.**

**b) ஆல்கஹாலின் பயன்களை குறிப்பிடுக.** Answer

**a) ஹேலோ ஆல்கேன்களின் பயன்களைக் குறிப்பிடுக. 3**

**ஹோலோஆல்கேன்கள்**

- ஆல்கேன்களின் மோனோஹேலோ பெறுதிகள் ஹேலோ ஆல்கேன்கள் என அழைக்கப்படுகின்றன.
- ஹேலோ ஆல்கேன்கள் R - X, என்ற பொதுவான வாய்ப்பாட்டினால் குறிக்கப்படுகின்றன.
- இங்கு ($C_nH_{2n+1}$) என்பது ஆல்கைல் தொகுதிகளையும்
- X என்பது (X=F, Cl, Br அல்லது I) ஹாலஜன் அணுவினையும் குறிப்பிடுகின்றது.

**ஹேலோ ஆல்கேன்களின் பயன்கள்**

**குளோரோஃபார்ம்:**

- மருந்தாக்க தொழிற்சாலைகளில் கரைப்பானாகப் பயன்படுகிறது.
- பூச்சிக்கொல்லிகள் தயாரிப்பில் பயன்படுகிறது.
- உணர்வு நீக்கும் மருந்துப் பொருளாக பயன்படுகிறது.
- உள்ளுறுப்பு மாதிரிகளை பாதுகாக்கும் பொருளாகவும் பயன்படுகிறது.

**அயடோஃபார்ம்:**

- காயங்களுக்கு புரை தடுப்பானாகப் பயன்படுகிறது.

**கார்பன் டெட்ரோ குளோரைடு:**

- உலர் சலவை காரணியாக பயன்படுகிறது.
- எண்ணெய், கொழுப்பு மற்றும் மெழுகு ஆகியவற்றிற்கு கரைப்பானாகப் பயன்படுகிறது.
- ஆவி நிலையில் ($CCl_4$) உள்ள ஆனது தீப்பற்றி எரியாத தன்மையுடையது, எண்ணெய் அல்லது பெட்ரோல் தீயை அணைக்க தீத்தடுப்பானாகப் பயன்படுகிறது.

**b) ஆல்கஹாலின் பயன்களைக் குறிப்பிடுக.**

**ஆல்கஹால்களின் பயன்கள் 3**

**1. மெத்தனாலின் பயன்கள்**

- பெயிண்டுகள், வார்னிஷ்கள், ஷெல்லாக், பசை, சிமெண்ட் போன்றவற்றிற்கு மெத்தனால் கரைப்பானாகப் பயன்படுகிறது.
- சாயங்கள், மருந்துப்பொருட்கள், வாசனைதிரவியங்கள் மற்றும் பார்மால்டிஹைடு ஆகியன தயாரிப்பில் பயன்படுகிறது.
- கார்ரேடியேட்டர்களில் உறைவைத் தடுக்க பயன்படுகிறது.

- மெத்தனால் நச்சுத்தன்மை உடையது. இதைத் தனியே உட்கொண்டால் கண்பார்வை இழக்க நேரிடும். மேலும், உயிரை இழக்கவும் நேரிடும்.
- 5% மெத்தனால் உள்ள எத்தனால் மெத்திலேற்றம் செய்த அல்லது சுய தன்மை இழந்த ஸ்பிரிட் என்றழைக்கப்படுகிறது.
- மெத்தனால் பெட்ரோலுடன் வாகன எரிபொருளாகப் பயன்படுகிறது.

**2. எத்தனாலின் பயன்கள்**

- ஈத்தைல் ஆல்கஹால் அதிகமாகப் பயன்படும் கரிமச் சேர்மங்களில் ஒன்றாகும்.
- அது குடிக்கும் நீர்மமாக ஆல்கஹாலிலும் தொழிற்சாலையில் கரைப்பானாகவும் மருந்துகள் தயாரிப்பிலும் படிகமாக்கும் முறையில் சிறந்த கரைப்பானாகவும், தாவர பொருள்களைப் பிரித்தெடுப்பதிலும் பயன்படுகிறது.
- எத்தனால் பெயின்டுகள் மற்றும் வார்னிஷ் தயாரிப்பில் பயன்படுகிறது.
- மேலும் ஈதர், குளோரோபார்ம், அயடோபார்ம், சாயங்கள், ஊடுருவும் சோப்புகள் ஆகியனவற்றின் தயாரிப்பில் பயன்படுகிறது.
- திறன்மிகு ஆல்கஹால் என்ற பெயரில் ஆகாய விமானங்களில் எரிபொருளாகப் பெட்ரோலுக்கு மாற்றாக பயன்படுகிறது.
- உயிர்பொருள் மாதிரிகளுக்கு பதப்படுத்தும் பொருளாகப் பயன்படுகிறது.

**3. எத்திலீன் கிளைக்காலின் பயன்கள்**

- தானியங்கி இயந்திரங்களின் ரேடியேட்டர்களில் உறை எதிர்பொருளாகப் பயன்படுகிறது.
- TNG உடன் சேர்த்து இதன் நைட்ரேட் வெடி பொருளாகப் பயன்படுகிறது.

**4. கிளிசராலின் பயன்கள்**

- திண்பண்டங்கள் மற்றும் பானங்கள் தயாரிப்பில் இனிப்பு சுவையூட்டியாக கிளிசரால் பயன்படுகிறது.
- அழகு சாதனப் பொருட்கள் மற்றும் ஒளி ஊடுருவும் சோப்புகள் தயாரிப்பில் இது பயன்படுகிறது.
- மை மற்றும் மை உறிஞ்சும் முத்திரை திண்டு ஆகியன தயாரிப்பிலும் கடிகாரங்களில் உயவுப் பொருளாகவும் பயன்படுகிறது.
- டைனமைட், கார்டைட் போன்ற வெடிபொருட்கள் தயாரிப்பில் இது சைனா களிமண்ணுடன் கலந்து பயன்படுத்தப்படுகிறது.

**14) கரோனா தொற்று காலத்தில் பாதுகாப்புக்காகப் பயன்படுத்தப்பட்ட இரசாயனக் கூறுகளை பட்டியலிடுக?**
**ஐசோப்ரோபில் ஆல்கஹால் - கிருமி நாசினியாகப் பயன்படுத்தப்பட்டது.** 6

- எத்தனால் - ஆல்கஹால் அடிப்படையிலான கை சுத்திகரிப்பான்களுக்கு, அமெரிக்க உணவு மற்றும் மருந்து நிர்வாகம் (FDA) 60 முதல் 95% எத்தனால் அல்லது ஐசோப்ரோபனாலின் செறிவை பரிந்துரைக்கிறது.
- டெட்டால் (குளோராக்சிலெனால்), சவ்லான் (செட்ரிமைடு/ குளோரெக்சிடின்) மற்றும் டிசிபி (ட்ரைக்ளோரோபீனால்).
- ஹைட்ரஜன் பெராக்சைடு – முகமூடிகளை சுத்தம் செய்ய பயன்படுத்தப்படுகிறது
- சோடியம் ஹைபோகுளோரைட் (வெண்மையாக)
- குவாட்டர்னரி அம்மோனியம் கலவைகள் (QACs)
- சோப்புகள் மற்றும் சவர்க்காரம் – அவை சர்பாக்டான்ட் மூலக்கூறுகளைக் கொண்டிருக்கின்றன, இவை அடிப்படையில் நீண்டசங்கிலி கொழுப்பு அமிலத்தின் சோடியம் உப்புகள் அவை: (உதாரணமாக $C_{17}H_{35}COONa$, சோடியம் ஸ்டீரட்)
- கை சுத்திகரிப்பான் பின்வரும் கூறுகளை கொண்டது:
- எத்தில் ஆல்கஹால் அல்லது ஐசோப்ரோபனால்
- தண்ணீர்
- கிளிசரால்
- ஹைட்ரஜன் பெராக்சைடு

**15) நெகிழியால் ஏற்படும் மாசுபாட்டைத் தடுப்பதில் மாணவர்களின் பங்கை விளக்குக.** 2

- மாணவர்களாகிய நீங்கள் நெகிழி பற்றிய உங்களது அறிவியல் அறிவை, உங்களது பெற்றோர்,உறவினர் மற்றும் நண்பர்களுடன் பகிர்ந்து கொண்டு, நெகிழி பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தலாம்.
- ரெசின் குறியீட்டை அடையாளம் காண்பதன் மூலம் தீமையான நெகிழிகளை எவ்வாறு தடுப்பது என்பதை அவர்களுக்கு கற்பிக்கலாம்.
- புதிய விதிகள் பற்றியும், ஒருமுறை மட்டுமே பயன்படுத்தப்படக்கூடிய நெகிழிகளை எவ்வாறு தடுக்கலாம் என்பது பற்றியும் அவர்களுக்கு எடுத்துக் கூறலாம்.

**உங்கள் அன்றாட வாழ்வில் நடைமுறைகள்** 4

- நெகிழிகளை வீசி எறிவதன் மூலம் சுற்றுப்புறத்தை மாசுபடுத்தாதீர்கள்.
- உங்களுடைய பள்ளியிலுள்ள செயல்திட்டங்களுக்கு தெர்மகோலைப் (ரெசின் குறியீடு 6) பயன்படுத்தாதீர்கள்.
- ஒரு முறை மட்டுமே பயன்படுத்தப்படக் கூடிய அல்லது உபயோகித்தபின் தூக்கியெறியப்பட வேண்டிய நெகிழிப் பொருள்களாலான பைகள், குவளைகள், தெர்மகோலால் ஆன தட்டுக்கள், குவளைகள் மற்றும் உறிஞ்சு குழாய்கள் ஆகியவற்றைப் பயன்படுத்தாதீர்கள்.
- நெகிழிகளை எரிக்காதீர்கள். ஏனெனில் அதனால் வெளியிடப்படும் நச்சுக் காற்றானது, நமது உடலுக்கு தீங்கு விளைவிப்பதோடு பருவநிலை மாற்றத்தையும் ஏற்படுத்தும்.
- PVC-நெகிழியை எரிப்பதன் மூலம் வெளியாகும் டையாக்சீன் என்ற வேதிப்பொருளானது மனிதர்களுக்கு அதிகக் கேடு விளைவிப்பதாகும்.
- நெகிழிப் பைகளில் அடைக்கப்பட்ட சூடான உணவுப் பொருள்களை உண்ணாதீர்கள்.
- நெகிழிப் பொருள்களை தனித்தனியே பிரித்து, மறு சுழற்சி செய்யப்படும்படி, சுத்தம் செய்யும் பணியாளர்களிடம் வழங்க வேண்டும்.
- ரெசின் குறியீட்டை அடையாளம் காண்பது மற்றும் பயன்படுத்துவதைத் தடுப்பது பற்றி ஒரு நாளைக்கு ஒரு நபருக்காவது விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும். (ரெசின் குறியீடு #3 PVC #6 PS and #7 ABS/PC).

**16) DDT பற்றி விளக்குக. அதன் பயன்களைக் குறிப்பிடுக.**
**DDT (P, P [1] டைகுளோரோடைபினைல் ட்ரை-குளோரோ ஈத்தேன்)** 3

- 1873ல் முதல் குளோரினேற்றம் செய்யப்பட்ட கரிம பூச்சிக் கொல்லியான DDT தயாரிக்கப்பட்டது.

SURESH

- 1939ல் பால் முல்லர் எனும் வேதியியலாளர் DDTன் பூச்சிக் கொல்லும் தன்மையினைக் கண்டறிந்தார்.
- இக் கண்டுபிடிப்பிற்காக 1948ஆம் ஆண்டிற்கான மருத்துவம் மற்றும் உடற்கூறியலுக்கான நோபல் பரிசு இவருக்கு வழங்கப்பட்டது.
- அடர் முன்னிலையில், குளோரோ பென்சீனை குளோராலுடன் (ட்ரைகுளோரோ அசிட்டால்டிஹைடு) வெப்பப்படுத்தி DDT தயாரிக்கப்படுகிறது.




**பயன்கள்** 3

- மலேரியா மற்றும் மஞ்சள் காய்ச்சல் போன்ற நோய்களுக்கு காரணமான சில பூச்சிகளை கட்டுப்படுத்த DDT பயன்படுகிறது.
- சில பூச்சிகளை கட்டுப்படுத்த விவசாய பண்ணைகளில் பயன்படுத்தப்படுகிறது.
- கட்டுமானத் தொழிலில் பூச்சிக் கட்டுப்படுத்தியாகப் பயன்படுகிறது.
- இது அதிக நச்சுத்தன்மையினைப் பெற்றிருப்பதனால் வீட்டில், ஈக்கள் மற்றும் கொசுக்களை கெல்வதற்கு பயன்படுகிறது.

**17) கலப்பு உரங்களைப் பற்றி சிறுகுறிப்பு வரைக?**

**கலப்பு உரங்கள்:** 6

- கலப்பு உரங்களில் இரண்டு அல்லது மூன்று முதன்மை தாவர ஊட்டச்சத்துக்கள் உள்ளன, அவற்றில் இரண்டு முதன்மை ஊட்டச்சத்துக்கள் வேதிகலவையாக உள்ளன.
- இந்த உரங்கள் பொதுவாக சிறுமணி வடிவில் உற்பத்தி செய்யப்படுகின்றன.
- எ.கா. டை அம்மோனியம் பாஸ்பேட் (DAP), நைட்ரோபாஸ்பேட் மற்றும் அம்மோனியம் பாஸ்பேட் (NPK)
- இதில் இரண்டு முதன்மை ஊட்டச்சத்துக்கள் மட்டுமே இருந்தால், அது முழுமையற்ற கலப்பு உரம் என்று அழைக்கப்படுகிறது.
- 3 சத்துக்கள் இருந்தால் அவை முழுமையானதாகக் கருதப்படுகிறது.
- இது 100 கிலோ உரத்தில் 30 கிலோவுக்கு மேல் தாவர ஊட்டசத்துக்களின் உயர் உள்ளடக்கத்தைக் கொண்டுள்ளது, இது உயர் பகுப்பாய்வு உரம் என்று அழைக்கப்படுகிறது.
- அவை சீரான தானிய அளவு மற்றும் நல்ல உடல் அமைப்பு ஆகியவற்றைக் கொண்டுள்ளன.
- தனிப்பட்ட உரங்களை விட இவை மலிவானவை.

**18) களைகொல்லிகள் எவ்வாறு வகைப் படுத்தப்படுகின்றன? ஒவ்வொன்றிற்கும் ஓர் உதாரணம் தருக?**

**களைக்கொல்லிகள்** 3

- களைக்கொல்லிகள் தேவையற்ற தாவரங்களை கொல்வதற்கான கலவை ஆகும்.
- களைக்கொல்லிகள் இரண்டு வகையாகப் பிரிக்கப்படுகின்றன. அவை

1. தேர்ந்தெடுக்கப்பட்ட களைக்கொல்லிகள்
2. தேர்ந்தெடுக்கப்படாத களைக்கொல்லிகள்

**1. தேர்ந்தெடுக்கப்படாத களைக்கொல்லிகள் 1.5**

- தாவரங்களை அழிக்கப் பயன்படுத்தப்படும் சோடியம் குளோரேட், சோடியம் அர்சனேட் மற்றும்
- சில எண்ணெய் வகைகள் தேர்ந்தெடுக்கப்படாத களைக்கொல்லிகளாக அறியப்படுகின்றன.

**2. தேர்ந்தெடுக்கப்பட்ட களைக்கொல்லிகள் 1.5**

- குறிப்பிடத்தக்க தாவரங்களை அழிப்பதற்கான தேர்ந்தெடுக்கப்பட்ட களைக்கொல்லிகள் பயன்படுத்தப்படுகின்றன.
- பொதுவாக, களைகளை அகற்ற இரண்டு வகையான களைக்கொல்லிகள் பயன்படுத்தப்படுகின்றன. அவை 2, 4 D (2,4 டைகுளோரோ பெனாக்சி அசிட்டிக் அமிலம்) மற்றும் 2, 4, 5 – T (2, 4, 5 ட்ரைகுளோரோ பெனாக்சி அசிட்டிக் அமிலம்) மற்றும் அதன் எஸ்டர்கள்
- இந்தக் கலவை அகன்ற இலைகளைக் கொண்ட தாவரங்களை மட்டுமே நீக்குகிறது.
- குறுகிய அளவிலான இலைகளைக் கொண்ட தாவரங்களின்மீது எவ்வித தாக்கத்தையும் ஏற்படுத்துவதில்லை.
- பொதுவாக கோதுமை மற்றும் நெல் தாவரங்களுடன் வளரும் களைகளைக் கொல்வதற்காக பரவலாக பயன்படுத்தப்படுகின்றன.
- இந்தக் களைக்கொல்லியின் அமைப்பு கீழே கொடுக்கப்பட்டுள்ளன.




- மற்ற முக்கியமான களைக்கொல்லிகளாவன, ட்ரைகுளோரோ அசிட்டிக் அமிலம், அட்ரசைன், பிக்ளோரம், ப்ரோப்பசைன் மற்றும் 23,6 ட்ரைகுளோரோ பென்சாயிக் அமிலம்

**அலகு - 2**

**1) ஐசோடோப்புகள், ஐசோபார்கள் மற்றும் ஐசோடோன்களைப் பற்றி பொருத்தமான எடுத்துக்காட்டுடன் சிறுகுறிப்பு வரைக.**

**ஐசோடோப்புகள்** 4

- இயற்கையில், சில தனிமங்களின் அணுக்கள் ஒரே அணு எண்ணையும் வெவ்வேறு நிறை எண்ணையும் பெற்றிருப்பது அடையாளம் காணப்பட்டுள்ளது.
- எடுத்துக்காட்டாக, ஹைட்ரஜன் அணுவின் மூன்று விதமான அணுக்கள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.




புரோட்டியம் ${}^{1}_{1}H$ டியூட்டிரியம் ${}^{2}_{1}H$ டிரிட்டியம் ${}^{3}_{1}H$

- இம்மூன்று அணுக்களின் அணு எண் 1, ஆனால் நிறை எண் முறையே 1, 2 மற்றும் 3 ஆகும். இவை ஐசோடோப்புகள் என்று அழைக்கப்படுகின்றன.
- மேலும் சில எடுத்துக்காட்டுகள் (i) கார்பன் $_{6}C^{12}$, $_{6}C^{13}$ , (ii) குளோரின் $_{17}Cl^{35}$, $_{17}Cl^{37}$
- இந்த எடுத்துக்காட்டுகளின் அடிப்படையில் ஐசோடோப்பு என்பது, ஒத்த அணு எண்ணையும், வேறுபட்ட நிறை எண்ணையும் கொண்ட ஒரு தனிமத்தின் வெவ்வேறு அணுக்கள் எனப்படுகிறது.
- இவை இருவகைப்படும் : நிலைப்புத்தன்மை உடையவை மற்றும் நிலைப்புத் தன்மையற்றவை.
- ஐசோடோப்புகளின் நிலையற்ற தன்மைக்குக் காரணம் அவற்றின் அணுக்கருவிலுள்ள கூடுதல் நியூட்ரான்களாகும்.
- இவ்வகை ஐசோடோப்புகள் கதிரியக்கத் தன்மையைப் பெற்றிருப்பதால், அவை கதிரியக்க ஐசோடோப்புகள் என அழைக்கப்படுகின்றன.
- எடுத்துக்காட்டாக, அணுக்கரு உலையின் மூலமாகிய யுரேனியம்-235 மற்றும் கதிர்வீச்சு சிகிச்சையில் பயன்படுத்தப்படும் கோபால்ட்-60 ஆகியவை கதிரியக்க ஐசோடோப்புகள் ஆகும்.

**ஐசோபார்கள்** 4

- கால்சியம் (அணு எண் 20) மற்றும் ஆர்கான் (அணு எண் 18) ஆகியவற்றைக் கருதுவோம்.
- இவற்றில் வெவ்வேறு எண்ணிக்கையில் புரோட்டான்கள் மற்றும் எலக்ட்ரான்கள் உள்ளன.
- ஆனால், இவ்விரண்டு தனிமங்களின் நிறை எண் 40 ஆகும். ஆகையால், இவற்றின் நியூக்ளியான் எண்ணும் ஒத்த அளவினைப் பெற்றுள்ளது.



ஆர்கான் $^{40}_{18}Ar$



கால்சியம் $^{40}_{20}Ca$

- இவை ஐசோபார்கள் எனப்படும்.
- இவ்வாறாக ஒத்த நிறை எண்களையும் வேறுபட்ட அணு எண்களையும் கொண்ட வெவ்வேறு தனிமங்களின் அணுக்கள் ஐசோபார்கள் எனப்படும்.

**ஐசோடோன்கள்** 4

- போரானிலுள்ள நியூட்ரான்களின் எண்ணிக்கை = 11 - 5 = 6
- கார்பனிலுள்ள நியூட்ரான்களின் எண்ணிக்கை = 12 - 6 = 6



போரான் $^{11}_{5}B$



கார்பன் $^{12}_{6}C$

- மேற்கண்ட தனிமங்களான போரான், கார்பன் ஆகியவை ஒத்த எண்ணிக்கையில் நியூட்ரான்களைப் பெற்றுள்ளன. ஆனால் புரோட்டான் எண்ணிக்கை வேறுபடுவதால் அவற்றின் அணு எண்களும் வேறுபடுகின்றன.
- இவ்வாறாக ஒத்த நியூட்ரான் எண்ணிக்கை கொண்ட வெவ்வேறு தனிமங்களின் அணுக்கள் ஐசோடான்கள் எனப்படும்.

**2) தனிமங்களின் ஆவர்த்தன அட்டவணையில் தொடர்கள் மற்றும் தொகுதிகளின் சிறப்பம்சங்களைப் பற்றி விரிவாக விளக்குக.**

**தொடர்களின் சிறப்பம்சங்கள்** 6

- தனிமங்களின் கிடைமட்ட வரிசைகள் தொடர்களாகும். ஆவர்த்தன அட்டவணையில் மொத்தம் 7 தொடர்கள் உள்ளன.
- முதலாம் தொடர் (அணு எண் 1 மற்றும் 2) இத்தொடர் மிகச்சிறிய தொடராகும். இதில் ஹைட்ரஜன் மற்றும் ஹீலியம் எனும் 2 தனிமங்களே உள்ளன.
- இரண்டாம் தொடர் (அணு எண் 3லிருந்து 10 வரை) இது சிறிய தொடராகும். இதில் 'Li'யிலிருந்து 'Ne' வரை 8 தனிமங்கள் உள்ளன.
- மூன்றாம் தொடர் இதுவும் ஒரு சிறிய தொடராகும். (அணு எண் 11 லிருந்து 18 வரை) இதில் 'Na' யிலிருந்து 'Ar' வரை 8 தனிமங்கள் உள்ளன.
- நான்காம் தொடர் (அணு எண் 19 லிருந்து 36 வரை) இது ஒரு நீண்ட தொடராகும். இதில் "K"யிலிருந்து "Kr"வரை, 18 தனிமங்கள் உள்ளன. இவற்றில் 8 பிரதிநிதித்துவ தனிமங்களும், 10 இடைநிலைத் தனிமங்களும் உள்ளன.
- ஐந்தாம் தொடர் (அணு எண் 37 லிருந்து, 54 வரை) இதுவும் ஒரு நீண்ட தொடராகும். இதில் Rb யிலிருந்து Xeவரை 18 தனிமங்கள் உள்ளன. இவற்ஷல் 8 பிரதிநிதித்துவ தனிமங்களும், 10 இடைநிலைத் தனிமங்களும் உள்ளன.
- ஆறாம் தொடர் (அணு எண் 55 லிருந்து 86 வரை) இது மிக நீண்ட தொடராகும். இதில் 'Cs'லிருந்து, Rnவரை 32 தனிமங்கள் உள்ளன. இவற்றுள் 8 பிரதிநிதித்துவ தனிமங்கள், 10 இடைநிலைத் தனிமங்கள் மற்றும் 14 உள் இடைநிலைத் தனிமங்கள் என ஆகும்.
- ஏழாம் தொடர் (அணு எண் 87லிருந்து, 118 வரை) ஆறாம் தொடரைப் போல, இதுவும் 32 தனிமங்கள் கொண்டது. சமீபத்தில், நான்கு தனிமங்கள் அட்டவணையில் (IUPAC) ஆல் உட்படுத்தப்பட்டன.

**தொகுதிகளின் சிறப்பம்சங்கள்** 6

| தொகுதி எண் | குடும்பம் |
|---|---|
| 1 | கார உலோகங்கள் |
| 2 | காரமண் உலோகங்கள் |
| 3-12 | இடைநிலை உலோகங்கள் |
| 13 | போரான் குடும்பம் |
| 14 | கார்பன் குடும்பம் |
| 15 | நைட்ரஜன் குடும்பம் |
| 16 | ஆக்ஸிஜன் குடும்பம் (அ) சால்கோஜன் குடும்பம் |
| 17 | ஹேலஜன்கள் |
| 18 | மந்த வாயுக்கள் |

- ஆவர்த்தன அட்டவணையில் மேலிருந்து கீழாக வரிசைப்படுத்தப்பட்ட தனிமங்கள், தொகுதிகள் எனப்படும். அட்டவணையில் மொத்தம் 18 தொகுதிகள் உள்ளன.
- தனிமங்களின் பொதுவான சிறப்பியல்புகளை வைத்து வெவ்வேறு குடும்பங்களாகத் தொகுக்கப்பட்டுள்ளன.
- தொகுதி 3-ன் அங்கமாகத் திகழும், லாந்தனைடு மற்றும் ஆக்டினைடுகள் உள் இடைநிலைத் தனிமங்கள் என அழைக்கப்படும்.
- 18வது தொகுதியைத் தவிர, மற்ற தொகுதிகளில் உள்ள தனிமங்களின் வெளிக்கூட்டில், ஒத்த எண்ணிக்கை உள்ள எலக்ட்ரான்களும், ஒத்த இணைதிறனும் பெற்றிருக்கும்
- எடுத்துக்காட்டாக, தொகுதி 1-ல் உள்ள தனிமங்கள் வெளி ஆற்றல் மட்டத்தில் ஒரு எலக்ட்ரான் மட்டும் ($1S^2$) பெற்றிருப்பதால், கார உலோகத் தனிமங்களின் இணைதிறன் 1 ஆகும்.
- ஒத்த தொகுதியில் உள்ள தனிமங்கள் ஒத்த எலக்ட்ரான் அமைப்புகளைப் பெற்று, ஒத்த வேதிப்பண்புகளோடு திகழும்.
- இயல் பண்புகளான, உருகுநிலை, கொதிநிலை மற்றும் அடர்த்தி ஆகியன சீராக மாறுபடும்
- 18ஆவது தொகுதித் தனிமங்கள், நிலையான எலக்ட்ரான் அமைப்பை வெளிக்கூட்டில் பெற்றிருப்பதால், வினையுறா தன்மையைப் பெற்றிருக்கும்.

**3) உலோக அரிமானம் பற்றி விளக்குக. அதன் வகைகள் மற்றும் அரிமானத்தைத் தடுக்கும் முறைகளை குறிப்பிடுக.**

**அரிமானம்** 4

- ஈரப்பதத்தின் முன்னிலையில், ஆக்ஸிஜனால் உலோகங்கள் ஆக்ஸிஜனேற்றம் செய்யப்படுகின்றன. இந்த ஆக்ஸிஜனேற்ற ஒடுக்க செயல்முறைகளால் உலோகங்கள் சீர்குலையும் நிகழ்வானது அரிமானம் என்றழைக்கப்படுகிறது.
- வேதிவினைகள் அல்லது மின் வேதி வினைகள் மூலம் சுற்றுச்சூழலோடு வினைபுரிந்து படிப்படியாக நடக்கும் உலோகத்தின் சிதைவே, உலோக அரிமானம் ஆகும்.
- இது ஒரு இயற்கை நிகழ்வு. இதில் உலோகமானது, ஆக்சைடு, ஹைட்ராக்சைடு அல்லது சல்பைடாக மாறி தன் உலோகத் தன்மையை இழக்கிறது.
- இரும்பு அரிக்கப்படுவதால் கட்டிடங்கள், பாலங்கள் போன்றவை சேதமடைகின்றன. எனவே, துருப்பிடித்தல் நிகழ்விலுள்ள வேதியியல் மற்றும் அதனை எவ்வாறு தடுப்பது என்பதை அறிந்து கொள்ளுதல் ஆகியன மிக முக்கியமானவைகளாகும்.
- துரு என்பது நீரேறிய ஃபெரிக் ஆக்சைடு ($Fe_2O_3.XH_2O$) அழைக்கப்படும்
- துருப்பிடித்தல் ஆனது, இரும்பின் புறப்பரப்பில், செம்பழுப்பு நிற நீரேறிய ஃபெரிக் ஆக்சைடை உருவாக்குகின்றது.

**உலோக அரிமானத்தின் வகைகள்** 4

**1. உலர் அரிமானம் (அல்லது) வேதிமுறை அரிமானம்**

- ஈரப்பதம் இல்லா நிலையிலும், நடைபெறும் அரிமானச் செயல் உலர் அரிமானம் ஆகும்.
- இந்நிகழ்வில் அரிக்கும் திரவங்கள் அல்லது வாயுக்களான $O_2$,$N_2$,$SO_2$, $H_2S$ ஆகியவை அதிக வெப்பநிலையில் உலோகத்தின் மேல் வேதிவினைபுரிந்து மாற்றம் நடைபெறுகின்றது.
- இவை அனைத்திலும் $O_2$ வானது வேதியியல் முறைப்படி அதிக அளவில் வினைபுரியும் வாயுவாக செயல்படுகிறது.

**2. ஈரநிலை அரிமானம் (அல்லது) மின்வேதியியல் நிலை அரிமானம்**

- ஈரப்பதத்தால் நடைபெறும் அரிமான நிகழ்வு, ஈரநிலை அரிமானம் ஆகும்.
- உலோகமானது, நீருடன் அல்லது உப்புக் கரைசலுடன் அல்லது அமில, காரங்களுடன் மின் வேதிவினை புரிந்து அரிமானத்தை உருவாக்கும்.

**அரிமானத்தைத் தடுக்கும் முறைகள்** 4

1. உலோக பரப்புகளின் மீது வர்ணம் பூசுதல்
2. உலோகக் கலவையாக்கல்

- உலோகங்களை ஒன்றோடொன்று கலந்து கலவையாக்கல் மூலம், அரிமானத்தை தடுக்கலாம். எ.கா. துருப்பிடிக்காத இரும்பு. Feமற்றும் Crசேர்ந்த உலோக கலவை.

3. புறப்பரப்பை பூசுதல்

- உலோகத்தின் மீது பாதுகாப்புக் கலவை பூசுதல் அரிமானத்தை தடுக்கும் இதன் வகைகளாவன :

**அ. நாகமுலாம் பூசுதல்**

- இரும்பின் மீது துத்தநாக மின் முலாம் பூசுவதற்கு நாகமுலாம் பூசுதல் என்று பெயர்.
- ஜிங்க் போன்ற மற்ற உலோகங்களைக் கொண்டு முலாம் பூசுதல். ஜிங்க் உலோகமானது
- இரும்பை விட வலிமை மிகுந்த ஒடுக்கியாகும்.எனவே, இது இரும்பை விட எளிதில் துருப்பிடித்துவிடும் அதாவது, இரும்பிற்கு பதிலாக ஜிங்க் ஆக்ஸிஜனேற்றமடைகிறது.

**ஆ. மின்முலாம் பூசுதல்**

- ஒரு உலோகத்தை மற்றொரு உலோகத்தின் மேல், மின்சாரத்தின் மூலம் பூசுதல் மின்முலாம் பூசுதல் ஆகும்.

**இ. ஆனோட்டாக்கல்**

- உலோகத்தின் புறப்பரப்பை, மின் வேதிவினைகளின் மூலம், அரிமான எதிர்புள்ளதாய் மாற்றும் நிகழ்வு ஆனோடாக்கல் ஆகும்.
- அலுமினியம் இந்த முறைக்கு பயன்படுகிறது.

**ஈ. கேத்தோடு பாதுகாப்பு**

- மின்முலாம் பூசுதலைப் போலல்லாமல், இந்த தொழில்நுட்ப உத்தியில் பாதுகாக்கப்பட வேண்டிய உலோகம் முழுவதும் பாதுகாப்பு உலோகத்தை பூசவேண்டிய அவசியமில்லை.
- மாறாக Mg அல்லது ஜிங்க் போன்ற இரும்பை விட எளிதில் அரிமானமடையும் உலோகங்களை தன்னிழப்பு நேர்மின்முனையாக (sacrificial anode) பயன்படுத்த முடியும். இரும்பு எதிர்மின்முனையாக செயலாற்றுகிறது.
- எனவே இரும்பு பாதுகாக்கப்படுகிறது. ஆனால் Mg அல்லது Zn அரித்தலுக்கு உள்ளாகின்றன.

**3. செயலுறுத்தல்**

- உலோகமானது, அடர் $HNO_3$ போன்ற வலிமைமிகு ஆக்ஸிஜனேற்ற காரணிகளுடன் வினைபுரிய அனுமதிக்கப்படுகின்றன.
- இதனால், உலோக புறப்பரப்பின மீது ஒரு பாதுகாப்பு அடுக்கு உருவாக்கப்படுகிறது.

4) a) **ஹோல்ம்ஸ் முன்னறிவிப்பானை விவரிக்கவும்.**
b) **ஃப்ளூரினின் மாறுபட்ட தன்மையைப் பற்றி விளக்குக.**
c) **கண்ணாடியை அரிக்கும் தன்மையைப் பற்றி விவரிக்கவும்.**

**a) ஹோல்ம்ஸ் முன்னறிவிப்பானை விவரிக்கவும்.**

**ஹோல்ம்ஸ் முன்னறிவிப்பான்:** 4

- துளையிடப்பட்ட பெட்டியினுள் கால்சியம் பாஸ்பைடு மற்றும் கால்சியம் கார்பைடு நிரப்பி கடலில் எறியப்படுகிறது.
- நீர் பெட்டியினுள் துளை வழியாக நுழைந்து கால்சியம் கார்பைடு மற்றும் கால்சியம் பாஸ்பைடுடன் வினைபுரிந்து அசிட்டிலினையும் பாஸ்பீனையும் தருகிறது.
- பாஸ்பீன் காற்றுடன் உடனடியாக எரிந்து அசிட்டிலினையும் எரியச்செய்கிறது,
- சிவப்பு நிறச் சுவாலையுடன் பாஸ்பீன் எரிவதால் உண்டாகும், பெரும் புகையும் சேர்ந்துகொள்கிறது.
- இது கடலில் உள்ள கப்பல்களுக்கு வழி காட்டுவதற்காக பயன்படுகிறது.

$$Ca_3P_2 + 6H_2O \rightarrow 2PH_3\uparrow + 3Ca(OH)_2$$
$$CaC_2 + 2H_2O \rightarrow C_2H_2\uparrow + Ca(OH)_2$$

**b) ஃப்ளூரினின் மாறுபட்ட தன்மையைப் பற்றி விளக்குக.** 4

**ஃப்ளூரினின் மாறுபட்ட தன்மை**

- ஃப்ளூரின் அதிக வினைபுரியும் திறன் உடையது. ஏனெனில் F-F பிணைப்பை முறிக்க குறைவான அளவு ஆற்றலே தேவை.
- நீர்த்த காரங்களுடன் வினைபுரியும் போது $OF_2$ வையும், அடர் காரங்களுடன் வினைபுரியும் போது $O_2$யையும் வெளியேற்றுகிறது. அதே சூழ்நிலையில் மற்ற ஹேலஜன்கள் ஹைப்போ ஹேலைட்டுகளையும், ஹேலேட்டுகளையும் தருகின்றன.
- ஹைட்ரஜன் மீதுள்ள அதிக நாட்டத்தினால் எளிதில் HF சேர்மத்தை உருவாக்குகிறது. ஹைட்ரஜன் பிணைப்பின் மூலம் அதிக எண்ணிக்கையில் HF மூலக்கூறுகள் ஒன்று சேர்ந்து உள்ளன.
- எனவே HFஅமிலம் ஒரு வீரியம் குறைந்த அமிலம், ஆனால் மற்ற ஹைட்ரோஹோலிக் அமிலங்கள் வீரியம் மிக்கவை.
- ...........H - F.........H - F .............H - F.
- உலோகங்களுடன் இது இரண்டு வகையான உப்புக்களைத் தருவதிலிருந்து, மற்ற ஹேலஜன்களிலிருந்து மாறுபடுகிறது. சான்று: NaF மற்றும் $NaHF_2$.
- HF ன் உறுப்புகள் மற்ற ஹேலோ அமிலங்களின் உப்புகளிலிருந்து வேறுபடுகிறது. AgF நீரில் கரையும் மற்ற AgX நீரில் கரைவதில்லை.
- எலக்ட்ரான் கவர் தன்மை அதிகமாக இருப்பதால் இது எதிர் (-) ஆக்ஸிஜனேற்ற நிலையை மட்டும் கொண்டுள்ளது. மற்ற ஹேலஜன்கள் எதிர் மற்றும் நேர் ஆக்ஸிஜனேற்ற நிலைகளைக் கொண்டுள்ளன.
- HFகண்ணாடியை அரிக்கும் தன்மை உடையது, ஆனால் மற்ற ஹைட்ரஜன் ஹேலைடுகள் கண்ணாடியை அரிப்பதில்லை.
- ஃப்ளூரின் அணுவின் வெளிக்கூட்டில் d ஆர்பிட்டால்கள் இல்லாததால் இது பாலி ஹாலைடுகளை உருவாக்குவதில்லை.
- எனவே $É_3^-$, $Br_3^-$, $Cl_3^-$ அயனிகள் உள்ளன. ஆனால் $F_3^-$ அயனி இல்லை.

**c) கண்ணாடியை அரிக்கும் தன்மையைப் பற்றி விவரிக்கவும்** 4

**கண்ணாடியை அரிக்கும் தன்மை**

- தொழிற்சாலையில், ஃப்ளூரஸ்பார் $(CaF_2)$ஐ லெட் பாத்திரத்தில் அடர் சல்ஃபியூரிக் அமிலத்துடன் சூடுபடுத்தும் பொழுது HF கிடைக்கிறது.
- $CaF_2 + H_2SO_4 \rightarrow CaSO_4 + 2HF.$
- HFவாலை வடிக்கப்பட்டு, அவற்றின் ஆவிகள் நீரால் குளிர்விக்கப்பட்டு, லெட் கொள்கலத்தில் சேகரிக்கப்படுகிறது.
- இவ்வாறாக கிடைக்கப்பெற்ற நீர்ம HF மெழுகு தடவிய பாட்டில்களில் பாதுகாக்கப்படுகிறது.
- இதை கண்ணாடி பாட்டில்களிலோ அல்லது சிலிகா பாட்டில்களிலோ பாதுகாக்க முடியாது.
- ஏனெனில் இது சிலிகா மற்றும் சிலிகேட்டுடன் வினைபுரியும்.

$$Na_2SiO_3 + 6HF \rightarrow Na_2SiF_6 + 3H_2O$$
$$SiO_2 + 4HF \rightarrow SiF_4 + 2H_2O$$

- சிலிகா மற்றும் சிலிகேட்டின் மீது HF-ன் செயல் கண்ணாடியை அரித்தலுக்குப் பயன்படுகிறது.
- கண்ணாடி முதலில் மெழுகால் பூசப்படுகிறது. எந்த வடிவம் வேண்டுமோ அதனை மெழுகு பரப்பின் மீது வரைந்து, HFஆவி அதன் மீது படும்படி வைக்க வேண்டும், பிறகு டர்பன்டைன் கொண்டு மெழுகை கழுவ வேண்டும்.
- இப்பொழுது கண்ணாடியில் வரைந்த வடிவம் தெரிவதைக் காணலாம்.

5) a) **பெட்ரோலியம் ஆராய்ந்து எடுக்கும் வெவ்வேறு முறைகள் யாவை?**
b) **பச்சை வேதியியலை பயன்படுத்தி ஆற்றல் நுகர்வை எவ்வாறு குறைப்பாய்?**

**a) பெட்ரோலியம் ஆராய்ந்து எடுக்கும் வெவ்வேறு முறைகள் யாவை?**

**பெட்ரோலியம்** 2

- பெட்ரோலியம் என்ற சொல் பாறை எனப் பொருள்படும் பெட்ரா மற்றும் எண்ணெய் எனப் பொருள்படும் ஓலியம் என்ற இலத்தீன் மொழிச் சொற்களிலிருந்து பெறப்பட்டது.
- இது பழங்காலத்தில் கடலில் வாழ்ந்த உயிரினங்கள் இறந்து அழுகும் பொழுது உருவான ஒரு படிம எரிபொருளாகும்.

- பெட்ரோலியம், பூமியில் காணப்படும் பல்வேறு திட, திரவ வாயு நிலைகளில் காணப்படும் ஹைட்ரோகார்பன்களின் கலவையாகும்.

**கச்சா எண்ணையை சுத்திகரித்தல்** 1

- எண்ணெய்க் கிணறுகளிலிருந்து கிடைக்கும் அடர்ந்த கருமைநிற வழுவழுப்பான தூய்மையற்ற பெட்ரோலியமானது நீர், திண்மத் துகள்கள், மீத்தேன், ஈத்தேன் போன்ற வாயுக்கள் ஆகியவற்றை மாசுபடுத்திக் கொண்டுள்ளது.
- பல்வேறு பயன்பாட்டுக்கு உகந்ததாக மாற்றுவதற்கு பெட்ரோலியம் அதன் பகுதிப்பொருட்களாக பிரிக்கப்பட வேண்டும்.
- பயன்மிக்க உப விளைபொருட்களை பெட்ரோலியத்திலிருந்து பிரித்தெடுக்கவும் தேவையற்ற மாசுக்களை நீக்கவும் செயல்படுத்தப்படும் முறை சுத்திகரிப்பு எனப்படும்.
- இச்செயல்பாட்டில் உள்ள படிநிலைகள் கீழே தரப்பட்டுள்ளன.

**நீரைப் பிரித்தெடுத்தல்** 1

- எண்ணெய்க் கிணறுகளிலிருந்து பெறப்படும் கச்சா எண்ணெய் உப்பு நீரையும் சேர்ந்தே பெற்றிருக்கும்.
- எனவே முதல் படியாக நீரானது கச்சா எண்ணெயிலிருந்து பிரித்தெடுக்கப்படுகிறது.

**சல்பர் சேர்மங்களைப் பிரித்தெடுத்தல்**

- கச்சா எண்ணெயில் உள்ள தீங்கு விளைவிக்கும் சல்பர் சேர்மங்கள் மாசுக்களாக உள்ளன.
- இந்நிலையில் இம்மாசுக்கள் வெளியேற்றப்படுகின்றன.

**பின்னக்காய்ச்சி வடித்தல்** 2

- பெட்ரோலியம் என்பது பெட்ரோலிய வாயு, பெட்ரோல், டீசல், மண்ணெண்ணெய் உயவு எண்ணெய், பாரபின் மெழுகு ஆகியவற்றை கொண்ட ஒரு கலவையாகும்.
- இந்தப் பகுதிப்பொருட்களை பின்னக் காய்ச்சி வடித்தல் கலன்களில் பின்னக்காய்ச்சி வடித்தல் மூலம் பிரிக்கப்படுகின்றன.
- வெவ்வேறு கொதிநிலைகளை உடைய திரவங்கள் அடங்கிய கலவையை வெப்பப்படுத்தி தனித்தனியாகப் பிரித்து பின்பு குளிர்வித்தலை பின்னக்காய்ச்சி வடித்தல் என்கிறோம்.
- தூய்மையற்ற பெட்ரோலியம் முதலில் 400°C ஒரு உலையில் வெப்பப்படுத்தப்படுகிறது.
- கச்சா எண்ணெய் ஆவி உலையின் மேற்பகுதியை வந்தடையும்பொழுது பல்வேறு பகுதிகளாக அவற்றின் கொதிநிலையின் அடிப்படையில் பிரிகின்றன.
- பயன்தரும் பல பொருட்கள் பெட்ரோலியத்திலிருந்தும் இயற்கை வாயுவிலிருந்தும் கிடைக்கின்றன.
- இவை ‘பெட்ரோகெமிக்கல்ஸ்’ எனப்படுகின்றன.
- இப்பொருட்கள் டிடர்ஜெண்டுகள், செயற்கை இழைகள் மற்றும் பாலித்தீன் போன்ற மனிதனால் உருவாக்கப்பட்ட பிளாஸ்டிக்குகள் தயாரிக்கப் பயன்படுகின்றன.
- இயற்கை வாயுவிலிருந்து கிடைக்கும் ஹைட்ரஜன், உரங்கள் தயாரிக்க பயன்படும்.
- இது வணிகரீதியாக முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதி பெட்ரோலியத்தை நாம் ‘கருப்புத்தங்கம்’ என்கிறோம்.

**b) பச்சை வேதியியலை பயன்படுத்தி ஆற்றல் செலவழித்தலை எவ்வாறு குறைப்பாய்?**

**பசுமை வேதியியல்** 2

- பசுமை வேதியியல் என்பது, அபாயகரமான பொருள்களின் பயன்பாடு அல்லது உருவாக்கத்தைகுறைக்கும் அல்லது நீக்கும் வகையில், விளைபொருள்கள் மற்றும் செயல்முறைகள் ஆகியவற்றை திட்டமிடுதலை ஊக்குவிக்கும் தத்துவம் ஆகும்.
- இதற்கென சூழல்நட்புச் சேர்மங்களை உற்பத்தி செய்யும் முறைகளை உருவாக்க அறிவியலாளர்கள் முயன்று வருகின்றனர்.
- பின்வரும் எடுத்துக்காட்டுகளிலிருந்து, மரபுவழி மற்றும் பசுமைவழி ஆகிய இரண்டு வழிமுறைகளில் ஸ்டைரீன் தயாரிக்கும் வினைகளை நோக்குவதன்மூலம் இதனை தெளிவாக புரிந்து கொள்ள முடியும்.

**மரபுவழி** 1

- இந்த மரபுவழி முறை இரண்டு படிகளில் நிகழ்கிறது.
- புற்றுநோய் உண்டாக்கக்கூடிய பென்சீன், எத்திலீனுடன் வினைபட்டு எத்தில் பென்சீனை தருகிறது.
- பின்னர் எத்தில் பென்சீன் ஆனது $Fe_2O_3$ / $Al_2O_3$ ஐ பயன்படுத்தி ஹைட்ரஜன் நீக்கம் செய்யப்பட்டு ஸ்டைரீன் கிடைக்கிறது.

**பசுமைவழி** 1

- புற்றுநோய் உண்டாக்கக்கூடிய பென்சீனை தவிர்ப்பதற்காக, விலைமலிந்த மற்றும் சூழலுக்கு பாதுகாப்பான சைலீன்களை கொண்டு பசுமை வழியில் வினை ஆரம்பிக்கப்படுகிறது.

**அன்றாட வாழ்வில் பசுமை வேதியியல்** 2

- நம் அன்றாட வாழ்வில், பசுமை வேதியியலின் ஒரு சில பங்களிப்புகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

**1. துணிகளின் உலர்சலவை**

- உலர்சலவை மூலம் துணிகளை வெளுத்தலில் பயன்படுத்தப்படும் டெட்ராகுளோரோ எத்திலீன் நிலத்தடி நீரை மாசடையச் செய்கிறது. மேலும் இது புற்றுநோய் உண்டாக்கும் காரணியாகும்.
- டெட்ராகுளோரோ எத்திலீனுக்கு மாற்றாக, திரவமாக்கப்பட்ட, $CO_2$ ஐ தகுந்த டிடர்ஜெண்ட் உடன் சேர்த்து பயன்படுத்தப்படுகிறது.
- திரவமாக்கப்பட்ட $CO_2$ ஆனது நிலத்தடி நீருக்கு தீங்கு விளைவிப்பதில்லை.
- இப்போதெல்லாம் சலவை கூடங்களில் துணிகளை வெளுக்க $H_2O_2$ பயன்படுத்தப்படுகிறது. இதனால் சிறந்த பலன் கிடைக்கிறது. மேலும் குறைந்தளவு நீர் மட்டுமே பயன்படுத்தப்படுகிறது.

**2. காகிதத்தை வெளுத்தல்**

- வழக்கமாக வெளுக்கும் முறையானது குளோரினை பயன்படுத்தி நிகழ்த்தப்பட்டது,
- இப்போதெல்லாம், காகிதங்களை வெளுக்க, வினையூக்கி முன்னிலையில் $H_2O_2$ஐ பயன்படுத்த முடியும்.

**3. வேதிப்பொருள்களை தொகுத்தல்**

- தற்போது, அசிட்டால்டிஹைடு ஆனது, வணிகரீதியாக, நீர்ம ஊடகத்தில், ஈத்தினை அயனி வினையூக்கி

முன்னிலையில் ஒருபடியில் ஆக்சிஜனேற்றம் செய்து பெறப்படுகிது. இம்முறையில் 90% அளவு விளைபொருள் கிடைக்கிறது.

- $CH_2 = CH_2 + O \xrightarrow[Pd(II)/Cu(II)]{\text{வினையூக்கி}} CH_3CHO$

  அசிட்டால்டிஹைடு

4. பெட்ரோலுக்கு பதிலாக, வாகனங்களில் மெத்தனால் எரிபொருளாக பயன்படுத்தப்படுகிறது.
5. வேம்பு சார்ந்த பூச்சிக்கொல்லிகள் தொகுக்கப்பட்டுள்ளன, இவை குளோரினேற்றம் செய்யப்பட்ட ஹைட்ரோகார்பன்களைவிட மிக அதிக பாதுகாப்பானவை.

- ஒவ்வொரு தனிமனிதனுக்கும், மாசுபடுதலை தடுத்து நம் சூழலை மேம்படுத்துவதில் முக்கிய பங்கு உண்டு.
- சூழல் பாதுகாப்பிற்கு நாமே பொறுப்பு.
- நாம் நமது சூழலை பாதுகாத்து, அடுத்த சந்ததியினருக்கு சுத்தமான பூமியை பரிசளிப்போம்.

**6) நடுநிலையாக்கல் வினை என்றால் என்ன? நாம் அன்றாட வாழ்வில் நடைபெறும் நடுநிலையாக்கல் வினைகளின் முக்கியத்துவத்தை பட்டியலிடுக.**

**<u>நடுநிலையாக்கல் வினை</u>** **3**

- வேறுபட்ட வேதிப்பண்புகளைக் கொண்டுள்ள இரண்டு வேதிப்பொருள்கள் ஒரு வேதிவினையின் மூலம் நடுநிலை அடையும் நிகழ்வு நடுநிலையாக்கல் எனப்படும்.
- எனவே, நடுநிலையாக்கல் என்பது அமிலமும் காரமும் வினைபுரிந்து உப்பையும் நீரையும் உருவாக்கும் வினை ஆகும்.
- நடுநிலையாக்கல் வினையை கீழ்க்காணுமாறு குறிப்பிடலாம்.

  அமிலம் + காரம் → உப்பு + நீர்
- இந்த வினையில் ஹைட்ரோ குளோரிக் அமிலமானது $H^+$மற்றும் Cl அயனிகளையும், சோடியம் ஹைட்ராக்சைடானது $Na^+$ மற்றும் $OH^-$அயனிகளையும் தருகின்றது.
- இந்த அயனிகள் இணைந்து சோடியம் குளோரைடு (NaCl)உப்பு மற்றும் நீர் ஆகியவை உருவாகின்றன.
- இதைப்போலவே, பிற அமிலங்களும் காரங்களுடன் வினைபுரிந்து உப்புகளைத் தருகின்றன.
- நடுநிலையாக்கல் வினைமூலம் உருவாகும் சில உப்புகள் அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளன.

**<u>நடுநிலையாக்கல் வினைமூலம் உருவாகும் உப்புகள்</u>** **3**

| அமிலம் | காரம் | உப்பு |
|---|---|---|
| ஹைட்ரோகுளோரிக் அமிலம், HCl | சோடியம் ஹைட்ராக்சைடு, NaOH | சோடியம் குளோரைடு, NaCl |
| சல்பியூரிக் அமிலம், $H_2SO_4$ | சோடியம் ஹைட்ராக்சைடு, NaOH | சோடியம் சல்பேட், $Na_2SO_4$ |
| நைட்ரிக் அமிலம், $HNO_3$ | சோடியம் ஹைட்ராக்சைடு, NaOH | சோடியம் நைட்ரேட், $NaNO_3$ |
| அசிட்டிக் அமிலம், $CH_3COOH$ | சோடியம் ஹைட்ராக்சைடு, NaOH | சோடியம் அசிட்டேட், $CH_3COONa$ |

**<u>நம் அன்றாட வாழ்வில் நடைபெறும் நடுநிலையாக்கல் வினை</u>** **6**

- அமிலங்களையும், காரங்களையும் சமநிலைப்படுத்துவது நமது ஆரோக்கியத்திற்கும் சுற்றுச்சூழலுக்கும் அவசியமாகும்.
- நமது அன்றாட வாழ்வில் பல்வேறு நடுநிலையாக்கல் வினைகளைப் பார்க்கின்றோம்.
- அவற்றில் சில வினைகளின் முக்கியத்துவத்தைப் பற்றி இங்கு கற்போம்.

**<u>தேனீ கொட்டுதல்</u>**

- நம்மை சிவப்பு எறும்பு கடிக்கும்பொழுது அல்லது தேனீ கொட்டும்பொழுது ஃபார்மிக் அமிலமானது தோலினுள் உட்செலுத்தப்படுகிறது.
- இந்த அமிலமானது எரிச்சல் உணர்வினையும் வலியினையும் உண்டாக்குகிறது.
- வலி மற்றும் எரிச்சல் உணர்வுள்ள இடத்தில் கால்சியம் ஹைட்ராக்சைடை (வீடுகளில் பயன்படுத்தப்படும் நீற்றுச் சுண்ணாம்பு) தேய்த்து ஃபார்மிக் அமிலம் நடுநிலையாக்கப்படுகிறது.

**<u>குளவி கொட்டுதல்</u>**

- குளவி கொட்டும்பொழுது, எரிச்சல் போன்ற உணர்வினையும், வலியினையும் நாம் உணர்கிறோம்.
- இது குளவியால் நமது உடலில் செலுத்தப்படும் அல்கலி என்ற காரப்பொருளின் மூலம் ஏற்படுகிறது.
- இந்த காரத்தன்மையை நடுநிலையாக்க நாம் அமிலத்தன்மை கொண்ட வினிகரைப் பயன்படுத்துகிறோம்.

**<u>பற்சிதைவு</u>**

- பொதுவாக ஒரு நாளைக்கு இரண்டு முறை நாம் பல் துலக்க வேண்டும் என மருத்துவர்கள் அறிவுறுத்துகின்றனர்.
- ஏனெனில், நம் வாயில் இருக்கும் பாக்டீரியாக்கள் பற்களுக்கு இடைப்பட்ட இடைவெளிகளில் சிக்கியுள்ள உணவுத் துகள்களைச் சிதைத்து அதன் மூலம் அமிலத்தை உருவாக்குகின்றன. இது பற்சிதைவுக்கு வழி வகுக்கிறது.
- இதனைத் தடுக்க நாம் அமிலத்தை நடுநிலையாக்க வேண்டும்.
- வலிமை குறைந்த காரங்களைக் கொண்ட பற்பொடி அல்லது பற்பசையைக் கொண்டு பல் துலக்கும்போது அமிலமானது நடுநிலையாக்கப்படுகிறது.
- இதனால், பற்கள் வலுவாகவும், ஆரோக்கியமாகவும் இருக்கும்.

**<u>அமிலத்தன்மை</u>**

- நமது உடலில் கல்லீரல், பித்தப்பை மற்றும் கணையம் ஆகியவற்றால் சுரக்கப்படும் நொதிகளும்வயிற்றில் சுரக்கும் ஹைட்ரோகுளோரிக் அமிலமும் சேர்ந்து உணவுப் பொருள்களின் செரிமானத்திற்கு உதவுகின்றன.

- சில நேரங்களில் நம் வயிற்றில் சுரக்கும் ஹைட்ரோகுளோரிக் அமிலம் அதிகப்படியாக சுரப்பதால் உணவுக்குழாய் மற்றும் மார்புப் பகுதிகளில் எரிச்சல் உணர்வினை நாம் உணர்கிறோம்.
- இது மீண்டும் மீண்டும் ஏற்பட்டால் வயிறு மற்றும் உணவுக்குழாய்களில் புண் உருவாகி, பாதிப்பு மேலும் அதிகரிக்கிறது.
- இதனை நடுநிலையாக்க வலிமை குறைந்த காரங்களான மெக்னீசியம் ஹைட்ராக்சைடு மற்றும்அலுமினியம் ஹைட்ராக்சைடு போன்றவற்றின் கலவை அமில நீக்கியாகப் பயன்படுகிறது.
- இதன் விளைவாக அமிலத்தன்மை நீக்கப்படுகிறது.

**வேளாண்மை**

- அதிக அமிலத்தன்மையுடைய மண் தாவர வளர்ச்சிக்கு ஏற்றதல்ல.
- எனவே, இதனைச் சரிசெய்வதற்கு விவசாயிகள் சுண்ணாம்பு (CaO), சுண்ணாம்புக் கற்கள் ($CaCO_3$), அல்லது மரக்கட்டைகளை எரிப்பதால் கிடைக்கும் சாம்பல் ஆகியவற்றை மண்ணில் சேர்க்கின்றனர். இது மண்ணின் காரத் தன்மையை நடுநிலையாக்குகிறது.

**தொழில்துறை**

- தொழிற்சாலைகளிலிருந்து வெளியேற்றப்படும் கழிவுகளில் சல்பியூரிக் அமிலம் உள்ளது.
- ஆறுகள் மற்றும் நீரோடைகளின் வழியாக கழிவுகளை வெளியேற்றும் முன் அவற்றுடன் சுண்ணாம்பு சேர்க்கப்படுகிறது.
- இதேபோல், மின் உற்பத்தி நிலையங்களில் மின்சாரம் தயாரிப்பதற்கு நிலக்கரி போன்ற புதைபடிவ எரிபொருள்கள் எரிக்கப்படுகின்றன. அவை எரியும்போது சல்பர் டை ஆக்சைடு உருவாகிறது.
- எனவே, இந்த அமிலத்தன்மை மிக்க வாயு மின் நிலையங்களில் சுண்ணாம்புத்தூள் அல்லது சுண்ணாம்புக் கற்களைக் கொண்டு நடுநிலையாக்கப்படுகிறது. இவ்வாறு, சல்பர் டை ஆக்சைடால் ஏற்படும் காற்று மாசுபாடு தடுக்கப்படுகிறது.

**7) ஆக்சிஜனேற்ற எண்-ஐ வரையறு. ஆக்சிஜனேற்ற எண்ணை தீர்மானிப்பதில் அதன் கணக்கீடுகளை பட்டியலிடுக.**

**ஆக்ஸிஜனேற்ற எண்** 4

- ஒரு வேதிவினையின் போது ஒரு தனிமத்திலுள்ள அணுவானது இழக்கின்ற அல்லது ஏற்கின்ற எலக்ட்ரான்களின் எண்ணிக்கையே அவ்வணுவின் ஆக்சிஜனேற்ற எண் எனப்படும்.
- ஆக்ஸிஜனேற்ற எண் என்பதை ஆக்ஸிஜனேற்ற நிலை எனவும் அழைக்கிறோம்.
- ஒரு அணுவானது எலக்ட்ரானை இழப்பதால் நேர் ஆக்சிஜனேற்ற எண்ணையும், எலக்ட்ரானை ஏற்பதால் எதிர் ஆக்சிஜனேற்ற எண்ணையும் பெறுகிறது.
- அது எலக்ட்ரானை ஏற்கவோ அல்லது இழக்கவோ இல்லையெனில் அதன் ஆக்ஸிஜனேற்ற எண் பூஜ்யம்.
- ஒரு மூலக்கூறில் உள்ள அனைத்து அணுக்களின் ஆக்ஸிஜனேற்ற எண்களின் கூடுதல் பூஜ்யமாகும்.
- அயனிகளைப் பொறுத்த வரையில் இக்கூடுதல் மதிப்பு அயனிகளின் மீதுள்ள நிகர மின்சுமைக்குச் சமம்.
- சேர்மங்களில் அதிக எலக்ட்ரான் கவர் தன்மை உள்ள அணு எதிர் ஆக்ஸிஜனேற்ற எண்ணையும், குறைந்த எலக்ட்ரான் கவர் தன்மை கொண்ட அணு நேர் ஆக்ஸிஜனேற்ற எண்ணையும் பெறும்.

**எடுத்துக்காட்டு:** 2

- KBr மூலக்கூறில் உள்ள K அணு +1 ஆக்ஸிஜனேற்றம் எண்ணையும், Br அணு -1 ஆக்ஸிஜனேற்ற எண்ணையும் பெறுகிறது.
- $NH_3$ மூலக்கூறில் உள்ள Nன் ஆக்ஸிஜனேற்ற எண் - 3-H ன் ஆக்ஸிஜனேற்ற எண் +1 (உலோக ஹைட்ரைடுகள் தவிர)
- பெரும்பாலான சேர்மங்களில் ஆக்ஸிஜனின் ஆக்ஸினேற்ற எண் -2

**ஆக்ஸிஜனேற்ற எண்ணை நிர்ணயித்தல் - கணக்கீடுகள்:** 6

- ஒரு நடுநிலையான மின்சுமையற்ற மூலக்கூறின் ஆக்ஸிஜனேற்ற எண் பூஜ்ஜியமாகும்.

**விளக்கம்: 1**

**$H_2O$ல் உள்ள H மற்றும் O ன் ஆக்ஸிஜனேற்ற எண்**

- H - ன் ஆக்ஸிஜனேற்ற எண் = +1 எனவும்,
  O-ன் ஆக்ஸிஜனேற்ற எண் =-2 எனவும் கொள்வோம்.
  $H_2O$ல் $2 \times (+1) + 1 \times (-2) = 0(+2) + (-2) = 0$
  எனவே, H-ன் ஆ.எண்: +1, O ன் ஆ. எண்: -2

**விளக்கம்: 2**

**$H_2SO_4$ல் உள்ள S ன் ஆக்ஸிஜனேற்ற எண்**

- H-ன் ஆக்ஸிஜனேற்ற எண் = +1
- O-ன் ஆக்ஸிஜனேற்ற எண் = -2
- S-ன் ஆக்ஸிஜனேற்ற எண் = × என்க
- எனவே, $H_2SO_4$ -ல் $2 \times (+1) + x + 4 \times (-2) = 0(+2) + x + (-8) = 0x = +6$
  ∴ S ன்ஆக்ஸிஜனேற்ற எண் = +6

**விளக்கம்: 3**

**$K_2Cr_2O_7$-ல் உள்ள Cr ன் ஆக்ஸிஜனேற்ற எண்**

- K ன் ஆக்ஸிஜனேற்ற எண் = +1
- O ன் ஆக்ஸிஜனேற்ற எண் = -2
- Cr ன் ஆக்ஸிஜனேற்ற எண் = X என்க
- எனவே, $K_2Cr_2O_7$ -ல் $2 \times (+1) + 2 \times x + 7 \times (-2) = 0(+2) + 2x + (-14) = 02x = +12$
  ∴ Cr ன் ஆக்ஸிஜனேற்ற எண் = + 6

**விளக்கம் : 4**

**$FeSO_4$-ல் உள்ள Fe ன் ஆக்ஸிஜனேற்ற எண்**

- O- ன் ஆக்ஸிஜனேற்ற எண் = -2
- S- ன் ஆக்ஸிஜனேற்ற எண் = +6
- Fe-ன் ஆக்ஸிஜனேற்ற எண் = X என்க.
- எனவே, $FeSO_4$ -ல் $x + 1 \times (+6) + 4 \times (-2) = 0x + (+6) + (-8) = 0x = +2$
  ∴ Fe ன்ஆக்ஸிஜனேற்ற எண் = +2

**8) புற வேற்றுமை வடிவத்துவம் என்றால் என்ன? கார்பனின் புறவேற்றுமை வடிவங்களைப் பற்றி விளக்குக?**

**புற வேற்றுமை வடிவத்துவம்** 3

- ஒரே தனிமத்தின் ஒன்றுக்கு மேற்பட்ட வடிவங்கள் அவற்றின், இயற்பியல் பண்புகளில் வேறுபட்டும்,

வேதியியல் பண்புகளில் ஒன்றுபட்டும் இருக்கும் தன்மையே புறவேற்றுமை வடிவத்துவம் ஆகும்.

- இந்த வேறுபட்ட வடிவங்கள் புறவேற்றுமை வடிவங்கள் எனப்படுகின்றன.
- தனிமங்கள் புறவேற்றுமை வடிவங்களைக் கொண்டிருப்பதற்கான முக்கியக் காரணம் அவற்றின் தோற்றம் அல்லது தயாரிக்கும் முறையாகும்.

**கார்பனின் புறவேற்றுமை வடிவங்கள்**

- கார்பன் பல்வேறு புறவேற்றுமை வடிவங்களில் காணப்படுகிறது.
- கிராஃபைட் மற்றும் வைரம் ஆகியன பொதுவாக காணப்படும் புறவேற்றுமை வடிவங்களாகும்.
- கிராஃபீன், ஃபுல்லரீன்கள் மற்றும் கார்பன் நானோ குழாய்கள் ஆகியன முக்கியமான புறவேற்றுமை வடிவங்களாகும்.

**கிராஃபைட்** 2

கிராஃபைட்




- கிராஃபைட், சாதாரண வெப்ப அழுத்த நிலையில், அதிக நிலைப்புத் தன்மை கொண்ட கார்பனின் புறவேற்றுமை வடிவமாகும்.
- இது மிருதுவானது மற்றும் மின்சாரத்தை கடத்துகிறது.
- இது கார்பன் அணுக்களால் ஆன இருபரிமாண, தட்டையான, தாள் போன்ற அமைப்புகளால் உருவாக்கப்பட்டுள்ளது.
- ஒவ்வொரு தாளும் $sp^2$இனக்கலப்படைந்த கார்பன் அணுக்களால் உருவான அறுங்கோண வலையாகும். இதில் C-Cபிணைப்பு நீளம் 1.41 , இது பென்சீனில் காணப்படும் C-C பிணைப்பு நீளத்தை ( 1.40 ) ஒத்துள்ளது.
- ஒவ்வொரு கார்பன் அணுவும், தன் இணைதிறன் கூட்டிலுள்ள நான்கு எலக்ட்ரான்களில் மூன்றைப் பயன்படுத்தி சுற்றியுள்ள மற்ற மூன்று கார்பன் அணுக்களுடன் மூன்று பிணைப்புகளை உருவாக்குகின்றன.
- இனக்கலப்பில் ஈடுபடாத Pஆர்பிட்டாலில் உள்ள நான்காவது எலக்ட்ரான் பிணைப்பை உருவாக்குகிறது.
- இந்த எலக்ட்ரான்கள் முழுத்தாள் அமைப்பின் மீது உள்ளடங்காதத் தன்மையை பெற்றுள்ளன, இதுவே இதன் மின்கடத்துத் திறனுக்கு காரணமாக அமைகிறது.
- அடுத்தடுத்த கார்பன் தாள்கள் வலிமை குறைந்த வாண்டர் வால்ஸ் விசைகளால் ஒருங்கே இருத்தி வைக்கப்பட்டுள்ளன.
- அடுத்தடுத்த தாள்களுக்கு இடைப்பட்ட தூரம் 3.40 .
- இந்த அடுக்ககள் வலிமை குறைந்த விசை மூலம் இணைக்கப்பட்டுள்ளதால் இவை வைரத்தை விட மென்மையானவை.
- கிராஃபைட் தனித்து அல்லது எண்ணெய்களுடன் கலந்து உயவுப்பொருளாக பயன்படுத்தப்படுகிறது.

**வைரம்** 2

வைரம்




- கிராஃபைட் போலல்லாமல் வைரம் மிகக்கடினமானது.
- வைரத்திலுள்ள கார்பன் அணுக்கள் $sp^3$ இனக்கலப்பிலுள்ளன, மேலும் ஒவ்வொரு கார்பன் அணுவும் அதனைச் சுற்றியுள்ள நான்கு வெவ்வேறு கார்பன் அணுக்களுடன் 1.54 பிணைப்பு நீளமுள்ள C-C ஒற்றை பிணைப்புகளால் பிணைக்கப்பட்டுள்ளன.
- இதனால், படத்தில் காட்டியவாறு ஒவ்வொரு கார்பனைச் சுற்றியும், நான்முகி அமைப்பானது படிகம் முழுவதும் விரிந்து பரவி காணப்படுகிறது.
- கார்பனின் நான்கு இணைதிற எலக்ட்ரான்களும் பிணைப்பில் ஈடுபட்டுள்ளன. தனி எலக்ட்ரான்கள் ஏதுமில்லாததால் மின்கடத்தும் திறனைப் பெற்றிருக்கவில்லை.
- மிகக்கடினமான படிகமாக இருப்பதால், கடினமான கருவிகளை கூர்மையாக்கவும், கண்ணாடிகளை வெட்டவும், துளைப்பான்கள் செய்யவும், பாறைகளைத் துளையிடவும் பயன்படுத்தப்படுகிறது.

**ஃபுல்லரீன்** 2

ஃபுல்லரீன்



- ஃபுல்லரீன்கள் புதியதாக தொகுக்கப்பட்ட கார்பனின் புறவேற்றுமை வடிவங்களாகும்.
- கிராஃபைட் மற்றும் வைரத்தைப் போல அல்லாமல் இந்த புறவேற்றுமை வடிவங்களானவை $C_{32}$, $C_{50}$, $C_{60}$, $C_{70}$, $C_{76}$ etc,. போன்ற தனித்த மூலக்கூறுகளாக உள்ளன.
- இந்த மூலக்கூறுகள் படத்தில் காட்டியுள்ளவாறு கூண்டு வடிவ அமைப்புகளை கொண்டுள்ளன.
- $C_{60}$ மூலக்கூறுகள் கால்பந்து போன்ற அமைப்பை பெற்றுள்ளன.
- அமெரிக்க கட்டட வடிவமைப்பாளர் பக்மின்ஸ்டர் ஃபுல்லர் என்பவரின் நினைவாக பக்மின்ஸ்டர் ஃபுல்லரீன் என்று இது அழைக்கப்படுகிறது.
- ஏனென்றால் இதன் அமைப்பு பன்னாட்டு கண்காட்சிகளுக்கான ஃபுல்லர் என்பவர் வடிவமைத்த குவிந்த மாடம் போன்ற குமிழ் கட்டடங்களின் கட்டமைப்பை ஒத்துள்ளது.
- இது பக்கி பந்து என்றும் அழைக்கப்படுகிறது. மிகப் பெரிய ஃபுல்லரீன் குடும்பங்கள் பல உள்ளன. அவை $C_{20}$ முதல் $C_{540}$ வரை காணப்படுகின்றன.

**கார்பன் நானோ குழாய்கள்** 2

**கார்பன் நானோகுழாய்கள்**



- கார்பன் நானோகுழாய்கள் என்பவை புதியதாக கண்டறியப்பட்ட புறவேற்றுமை வடிவங்களாகும்,இவை கிராஃபைட் போன்ற குழாய் அமைப்பையும், ஃபுல்லரின் முனைகளையும் கொண்டுள்ளன.
- அச்சின் வழியாக இந்த நானோகுழாய்கள், எஃகைவிட அதிக வலிமை கொண்டவைகளாக உள்ளன.
- மேலும் மின்சாரத்தை கடத்துகின்றன.
- இவை நானோ மின்னணுவியல், வினைவேகமாற்றம், பலபடிகள் மற்றும் மருந்துகள் உருவாக்கம் ஆகியவற்றில் பயன்படுகின்றன.

**கிராஃபீன்** 1

**கிராஃபீன்**



- கிராஃபீன் என்பது கார்பனின் மற்றொரு புறவேற்றுமை வடிவமாகும்.
- இது, $sp^2$ இனக்கலப்படைந்த கார்பன் அணுக்களால் ஒற்றைத்தளத் தாள் வடிவமைப்பை பெற்றுள்ளது.
- கார்பன் அணுக்கள் தேன்கூடு போன்ற படிக அமைப்பில் நெருக்கமாக பொதிக்கப்பட்டுள்ளன.

**9) நைட்ரஜனை நிலைப்படுத்தல் பற்றி விரிவாக விளக்குக.**

**நைட்ரஜன் நிலைநிறுத்தம்** 4

- காற்று, மண் மற்றும் உயிரினங்களின் வழியாக நைட்ரஜன் தனிம நிலையிலோ அல்லது சேர்மமாகவோ தொடர்ந்து சுழற்சியில் உள்ளது.
- எவ்வாறு இயற்கையில் கார்பன் சுழற்சி உள்ளதோ அது போலவே நைட்ரஜன் சுழற்சியும் உள்ளது.
- இது தாவரங்களின் முறையான வளர்ச்சிக்கு அவசியமாகிறது.
- காற்றில் உள்ள தனிம நைட்ரஜனை தாவரங்கள் நேரடியாகப் பயன்படுத்த இயலாது.
- அவற்றிற்கு நீரில் கரையும் நைட்ரஜன் சேர்மங்கள் தேவைப்படுகின்றன.
- எனவே, தங்களுக்கு நைட்ரேட்டுகளை வழங்கக்கூடிய பல்வேறு செயல்முறைகளை தாவரங்கள் சார்ந்துள்ளன.
- இவ்வாறு காற்றில் உள்ள நைட்ரஜனை நைட்ரஜன் சேர்மங்களாக மாற்றும் முறை **நைட்ரஜன் நிலைநிறுத்தம்** எனப்படும்.
- இயற்கையிலேயே நைட்ரஜன் நிலைநிறுத்தப்படுவதோடு மட்டுமின்றி செயற்கையாகவும் நைட்ரஜனை நிலை நிறுத்த இயலும்.




- நைட்ரஜன் நிலைப்படுத்தல் முறைகள் அல்லது வளிமண்டல நைட்ரஜனை, சேர்மநிலைக்கு மாற்றும் முறைகள்.

**அம்மோனியா தயாரித்தல் (ஹேபர் முறை)** 3

- 1 : 3 என்ற விகிதத்தில் உள்ள நைட்ரஜன் மற்றும் ஹைட்ரஜன் கலவையை உயர் அழுத்தத்தில் (200-900atm),770kவெப்பநிலையில், தூள் இரும்பு வினைவேக மாற்றியின் மீது செலுத்தியும் மாலிப்டினம் வினைவேக மாற்றி ஊக்கியின் மூலம் தயாரிக்கலாம்.

$$N_2 + 3H_2 \rightleftharpoons 2NH_3$$

**இயற்கையில் நடைபெறும் நைட்ரஜன் நிலை நிறுத்தம்**

- வளிமண்டலத்தில, மின்சார குழப்பம் தோன்றி வளிமண்டல நைட்ரஜனும், ஆக்ஸிஜனும் இணைந்து

நைட்ரிக் ஆக்சைடாக மாறுகிறது. பின்னர் மேலும் ஆக்ஸிஜனேற்றத்திற்கு உட்பட்டு நைட்ரஜன் டை ஆக்சைடாக மாறுகிறது.

- பின்னர், நைட்ரஜன் டை ஆக்சைடு மழை நீரில், அதிக அளவு ஆக்ஸிஜனில் கரைந்து நைட்ரிக் அமிலமாக மாறுகிறது, பின்னர், மழைநீரால் கழுவப்பட்டு புவியின் பரப்புக்கு வந்து சேர்ந்து, மணலில் காரங்களுடன் வினை புரிந்து நைட்ரேட்டுகளைத் தருகிறது.
- இதனையும் தவிர, பட்டாணி, பீன்ஸ் போன்ற தாவரங்களில் காணப்படும் ஒரு சில பாக்டீரியாக்கள் நைட்ரஜனை, நைட்ரஜன் சேர்மங்களாக மாற்றுகிறது, இவ்வாறு மாற்றம் பெற்ற நைட்ரஜன் சேர்மங்கள் நேரடியாக தாவரங்களை உறிஞ்சப்படுகின்றன.

**<u>நைட்ரஜன் சுழற்சி</u>** **3**

- வளிமண்டலம், மண், கடல் மற்றும் உயிர்வாழ், பொருட்களுக்கிடையே நைட்ரஜன் மாறுதல் தொடர்ச்சியாக மாற்றம் அடைகிறது.
- வளி மண்டலத்தில் காணும் நைட்ரஜன் தாவரங்கள், மற்றும் மிருகங்களுக்கும், பயன்தரும் விளைபொருட்களாக அம்மோனியா, நைட்ரிக் அமிலங்களாக செல்கிறது.
- இருப்பினும் குறிப்பிட்ட அளவு சதவீத நைட்ரஜன் வளிமண்டலத்திலேயே மாற்றம் அடையாமல் காணப்படுகிறது. ஏனெனில் சேர்ந்த நிலையில் உண்டான நைட்ரஜன் மீண்டும் வளிமண்டலத்திற்குத் திரும்பச் செல்வதே காரணமாகும்.
- இவ்வாறு ஏற்படும் சுழற்சி நைட்ரஜன் சுழற்சி என அறியப்படுகிறது.




**<u>நைட்ரஜன் சேர்மங்களின் பயன்கள்</u>** **2**

- நீர்ம அம்மோனியா ஒரு கரைப்பானாக பயன்படுகிறது.
- பனிக்கட்டி தயாரிக்கும் கருவிகளில் அம்மோனியா, குளிர்விப்பானாக பயன்படுகிறது.
- செயற்கைப்பட்டு, யூரியா, உரங்கள், சலவை சோடா ஆகியவை தயாரிப்புகளுக்கு அம்மோனியா பயன்படுகிறது.
- நைட்ரஸ் ஆக்சைடு மற்றும் ஆக்சிஜன் கலவை, பல் மருத்துவத்தில் சிறிய அளவு அறுவைச் சிகிச்சை செய்வதில், மயக்க மருந்தாக பயன்படுகிறது.
- அசோ-சாயங்கள் தயாரிக்கவும் நைட்ரஸ் அமிலம் பயன்படுகிறது.
- உரங்கள் TNT,GTN போன்ற வெடிப் பொருட்கள் பெருமளவிற்கு தயாரிப்பதற்கு நைட்ரிக் அமிலம் பயன்படுகிறது.
- கோல்ட் மற்றும் சில்வர் உலோகங்களை தூயதாக்க நைட்ரிக் அமிலம் பயன்படுகிறது.
- கறைபடா எஃகு தயாரிக்கவும் நைட்ரிக் அமிலம் பயன்படுகிறது.
- வாசனைத் திரவியங்கள், செயற்கை பட்டு மற்றும் மருந்துகள் தயாரிக்கவும் நைட்ரிக் அமிலம் பயன்படுகிறது.
- நீர்ம நைட்ரஜன் ஒரு குளிர்விப்பானாக பயன்படுகிறது.

**10) பின்வருவனவற்றை விளக்குக.**

**a) கிராபீன் மற்றும் அதன் பயன்பாடுகள்**

**b) சங்கிலி தொடராக்கம் மற்றும் நான்முகப் பிணைப்பு**

**<u>a) கிராபீன் மற்றும் அதன் பயன்பாடுகள்</u>**

**<u>கிராஃபீன்</u>** **3**

- கிராஃபீன் என்பது தற்போது புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ள கார்பனின் புறவேற்றுமை வடிவமாகும்.
- இதில் தேனீயின் கூட்டைப் போல அறுங்கோண வளைய வடிவில் கார்பன் அணுக்கள் ஒரே பரப்பில் அமைக்கப்பட்டுள்ளன.
- கிராஃபீன் தான் உலகில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள தடிமன் குறைவான சேர்மமாகும்.
- இதன் தடிமன் ஒரு அணு அளவு மட்டுமே உள்ளது.
- இதுதான் உலகிலேயே மிகவும் லேசான சேர்மமாகும் ஒரு சதுர அடியின் எடை 0.77 மில்லி கிராம் மட்டுமே.
- மேலும், கண்டுபிடிக்கப்பட்ட சேர்மங்களிலேயே மிகவும் வலிமையான சேர்மமும் இதுவே ஆகும்.
- எஃகு இரும்பைக் காட்டிலும் 100 - 300 மடங்கு வலிமையானது.
- அறை வெப்ப நிலையில் இது ஒரு மிகச் சிறந்த வெப்பக் கடத்தி ஆகும்.
- கிராபீனை 0.335 நானோமீட்டர் இடைவெளியில் ஒன்றின் மீது ஒன்றாக அடுக்கும்போது கிராஃபைட் கிடைக்கிறது.
- கிராஃபைட்டில் உள்ள கிராஃபீன் அடுக்குகள் வலிமை குறைந்த வாண்டர் வால்ஸ் விசை மூலம் பிணைக்கப்பட்டுள்ளன.

**<u>பயன்பாடுகள்</u>** **3**

- மற்ற பொருட்களின் வலிமையை அதிகரிக்க பயன்படுகிறது.
- கிராபீன் - மேம்படுத்தப்பட்ட கலப்பு பொருட்கள் விண்வெளி, கட்டிட பொருட்கள், மொபைல் சாதனங்கள் மற்றும் பல பயன்பாடுகளில் உதவுகிறது.
- வெப்ப மூழ்கிகள் (அதிகமான அல்லது தேவையற்ற வெப்பத்தை உறிஞ்சுவதற்கான ஒரு சாதனம் அல்லது பொருள்) போன்ற வெப்பபரப்பு தீர்வுகளை உருவாக்க பயன்படுகிறது.

- பேட்டரிகள் மற்றும் சூப்பர் மின்தேக்கிகளில் பயன்படுத்தப்படுகிறது.
- எரிபொருள் செல்களை அதிகரிக்க பயன்படுகிறது.
- உயிருள்ள திசுக்களில் பொருத்தப்படும் "உயிரி" சாதனங்களில் ஒருங்கிணைக்கப்படுகிறது.
- புதிய, இலகுரக மற்றும் நெகிழ்வான சோலார் பேனல்களை உருவாக்கப் பயன்படுகிறது.
- மிகவும் திறமையான, வெளிப்படையான, மெல்லிய, நெகிழ்வான மற்றும் மலிவான மின் கடத்திகள் உற்பத்தியில் பயன்படுத்தப்படுகிறது.
- அரிப்பு எதிர்ப்பு பூச்சுகள் மற்றும் வண்ணப்பூச்சுகள், திறமையான மற்றும் துல்லியமான சென்சார்கள், வேகமான மற்றும் திறமையான மின்னணுவியல், நெகிழ்வான காட்சிகள், வேகமான டினஎ வரிசைமுறை, மருந்து விநியோகம் மற்றும் பல.

**b) <u>சங்கிலி தொடராக்கம் மற்றும் நான்முகப் பிணைப்பு</u>**

**<u>சங்கிலித் தொடராக்கம்</u>** **3**

- சங்கிலித் தொடராக்கம் என்பது ஒரு தனிமம் அதே தனிமத்துடனோ அல்லது மற்ற தனிமங்களுடனோ நான்முக இணைதிறன் மூலம் இணைந்து திறந்த சங்கிலிச் சேர்மங்களையோ அல்லது மூடிய சங்கிலிச் சேர்மங்களையோ உருவாக்குவதாகும்.
- சங்கிலித் தொடராக்கம் மூலம் மிக நீண்ட சங்கிலிகளை உடைய சேர்மங்களை உருவாக்கக்கூடிய ஒரு முக்கியமான தனிமம் கார்பனாகும்.
- கார்பன் அணுவே சுய சகப்பிணைப்பை உண்டாக்கும் தன்மையில் மிக உயர்ந்து இருக்கிறது. (எ.கா) கார்பனின் சுய சகப்பிணைப்பு ஆற்றல் மிக அதிகம்.

| C-C | Si-Si | N-N | P-P | O-O | S-S |
|---|---|---|---|---|---|
| 85 | 54 | 39 | 50 | 35 | 54 |

- பிணைப்பு ஆற்றல் குறையும்போது பிணைப்பின் நிலைத்தன்மை மற்றும் வலிமை குறைகிறது. அதனால் சுய சகப்பிணைப்பை உண்டாக்கும் திறன் கீழ்கண்ட வரிசையில் அமைகிறது.
- கார்பன் அணுக்கள் அவற்றுடன் மீண்டும் மீண்டும் சகப்பிணைப்பின் மூலமாக இணைந்து நீண்ட சங்கிலி, கிளைச் சங்கிலி மற்றும் வளையச் சங்கிலிகளை உருவாக்குகின்றன.
- கார்பனின் இந்த சங்கிலித் தொடராக்கப் பண்புதான் உலகில் இவ்வளவு கார்பன் சேர்மங்கள் உருவாகக் காரணமாக உள்ளது.
- எனவே, கரிம வேதியியல் என்பது சங்கிலித் தொடராக்கத்தின் மூலம் பிணைக்கப்பட்ட கார்பன் சேர்மங்களைப் பற்றியதாகும்.
- எடுத்துக்காட்டாக, சர்க்கரையும் செல்லுலோஸும் நூற்றுக் கணக்கான கார்பன் அணுக்களால் ஆன சங்கிலிகளைக் கொண்டுள்ளன.
- நாம் அன்றாடம் அதிகம் பயன்படுத்தும் நெகிழியும் கூட சங்கிலிப் பிணைப்பைக் கொண்ட கார்பனின் பெரிய மூலக்கூறாகும்.



கிளைச் சங்கிலி



நீள் சங்கிலி



வளையச் சங்கிலி

**<u>நான்முகப் பிணைப்பு</u>** **3**

- கார்பனின் மற்றொரு முக்கியமான தன்மை நான்முக இணைதிறன் ஆகும். கார்பனின் எலக்ட்ரான் அமைப்பு 2, 4 (இதன் அணு எண் 6) ஆகும்.
- இதன் வெளிக்கூட்டில் நான்கு எலக்ட்ரான்கள் காணப்படுகின்றன. எண்ம விதியின்படி கார்பன் தன் அருகிலுள்ள மந்த வாயுவான நியானின் எலக்ட்ரான் அமைப்பை அடைவதற்கு நான்கு எலக்ட்ரான்கள் அதற்குத் தேவை.
- எனவே, எண்ம நிலையை அடைவதற்காக, கார்பன் தன்னுடைய நான்கு எலக்ட்ரான்களையும் மற்ற தனிமங்களின் எலக்ட்ரான்களுடன் பகிர்ந்து கொள்ளும் தன்மை உடையது.
- இதுவே, நான்முகப் பிணைப்பு என அழைக்கப்படுகிறது. எனவே கார்பன் மற்ற தனிமங்களுடன் நான்கு சகப்பிணைப்புகளை உண்டாக்குகின்றது.
- எடுத்துக்காட்டாக, மீத்தேனில், கார்பனானது நான்கு ஹைட்ரஜன் அணுக்களுடன் இணைந்து நான்கு சகப்பிணைப்புகளை உருவாக்கும், எனவே நான்முக பிணைப்பைக் கொண்டுள்ளது.



**11) வேளாண் வேதியியல் என்றால் என்ன? அதன் இலக்குகள் மற்றும் பயன்பாடுகளை விளக்குக?**

**<u>வேளாண் வேதியியல்</u>** **4**

- வேளாண் வேதியியல் என்பது வேளாண் உற்பத்தி, உணவு தயாரித்தல் மற்றும் சுற்றுச்சூழலைக் கண்காணித்து, அதனைப் பாதுகாத்தல் ஆகிய செயல்களுக்கு வேதியியல் மற்றும் உயிர் – வேதியியல் அறிவைப் பயன்படுத்துவதாகும்.
- இது தாவரங்கள், விலங்குகள், பாக்டீரியா மற்றும் சுற்றுச்சூழல் ஆகியவற்றிற்கு இடையேயான அறிவியல் தொடர்பு பற்றி விளக்குகிறது.
- இன்றைய உலக மக்கள் தொகையில் 40 சதவீதம் பேர் வேளாண்மைத் தொழிலில் ஈடுபடுகின்றனர்.
- இதுவே உலகின் மிகப்பெரிய தனிப்பட்ட வேலை வாய்ப்பு ஆகும்.

**அ. வேளாண் வேதியியலின் இலக்குகள் :** 4

- இந்திய வேதியியல் மற்றும் உயிர் – வேதியியல் ஆய்வாளர்கள் தங்கள் அறிவைப் பயன்படுத்தி, வேளாண்துறையில் செயற்கை உரங்கள், மரபணு மாற்றப்பட்ட விதைகள் போன்றவற்றைப் புகுத்தினர்.
- போதுமான ஊட்டச்சத்துள்ள உணவை நிலையான வழியில் மக்களுக்கு வழங்கி நமது சுற்றுச்சூழல் மற்றும் சூழ்நிலை மண்டலத்தை பொறுப்புடன் காப்பதே இதன் நோக்கமாகும்.
- விவசாய உற்பத்தியில் ஏற்படும் பிரச்சனைகள் மற்றும் சவால்களை அடிப்படையாகக் கொண்டு வேளாண் வேதியியலானது கீழ்க்காண்பனவற்றை அடைவதற்கு முயல்கிறது. அவையாவன :
- பயிர் மகசூல் மற்றும் கால்நடைகளை அதிகரித்தல்.
- உணவுத் தரத்தினை மேம்படுத்துதல்.
- உணவு உற்பத்திக்கான செலவினைக் குறைத்தல்.

**ஆ. வேளாண் வேதியியலின் பயன்பாடுகள்** 4

- வேளாண் பொருட்களின் விளைச்சலை அதிகரிக்கவும், நோய்களிலிருந்து பயிர்களைப் பாதுகாக்கவும், வேளாண்மைச் செயல்பாட்டை எளிமையாக நடைமுறைப்படுத்துவதற்கும் வேதியியல் கொள்கைகள் மற்றும் வேதிவினைகள் பயன்படுத்தப்படுகின்றன.

**மண் பரிசோதனை**

- பயிர்நிலங்கள் வெவ்வேறு வகையான pHஅளவைக் கொண்ட மண்வகைகளைக் கொண்டுள்ளன. பயிர்களைத் தேர்வு செய்வதற்கும், மண்ணின் தன்மையை மாற்றுவதற்கும் ஒரு மண்ணின் pH தன்மையானது கருத்தில் கொள்ளப்பட வேண்டும்.
- மண்பரிசோதனை மூலம் மண்ணின் pH மதிப்பு, அதன் அமைப்பு மற்றும் அதிலுள்ள இடைவெளி ஆகியவற்றைத் தீர்மானிக்க முடியும்.

**வேதியியல் உரங்கள்**

- தாவர வளர்ச்சிக்குத் தேவையான நுண் ஊட்டச்சத்து மற்றும் பெரும ஊட்டச்சத்துக்களை வழங்குவதற்காக நிலத்தில் சேர்க்கப்படும் கூட்டுப்பொருள்களே உரங்கள் ஆகும்.
- வேதியியல் சேர்மங்களான அம்மோனியம் நைட்ரேட், கால்சியம் பாஸ்பேட், யூரியா, மற்றும் NPK (நைட்ரஜன், பாஸ்பரஸ், பொட்டாசியம்) ஆகியவை ஒரு சில உரங்களாகும்.
- மண்ணின் இயல்பைப் பொறுத்து, இந்த உரங்கள் தனித்தனியாகவோ அல்லது கலவைகளாகவோ பயன்படுத்தப்படுகின்றன.

**பூச்சிக்கொல்லிகள்**

- பயிர்களில் பூச்சி மற்றும் புழுக்களால் ஏற்படும் பாதிப்புகளைத் தீர்க்க பூச்சிக்கொல்லி மருந்துகள் பயன்படுகின்றன.
- குளோரினேற்றமடைந்த ஹைட்ரோகார்பன், கரிம பாஸ்பேட் மற்றும் கார்பமேட் ஆகியவை பூச்சிக் கொல்லிகளாக பயன்படுத்தப்படுகின்றன.

12) **பூச்சிக்கொல்லிகள் பயன்படுத்தப்படும் பல்வேறு முறைகளை விவரி?**

**பூச்சிக்கொல்லிகளை பயன்படுத்தும் பொதுவான முறைகள்** 2

- பூச்சிக்கொல்லிகள் பெரும்பாலும் மெழுகு மற்றும் எண்ணெய் அல்லது தூள் நிலையிலேயே பயன்படுத்தப்படுகிறது.
- இவை அளவற்ற முறையில் பயன்படுத்த முடியாது.
- குறிப்பிட்ட வகையில் கலவைகள் உருவாக்கப்பட்டு பயன்படுத்த வேண்டும்.
- சில பொதுவான முறைகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

**தூசிகள்** 2

- பூச்சிக்கொல்லிகள் குறிப்பிட்ட தூளுடன் கலக்கப்பட்டு பயிர்களின் மீது காய்ந்த முறையில் தெளிக்கப்படுகிறது.
- தாவரத்தின் ஈரமானப் பகுதிகளில் தெளிக்கப்படும் உரம் ஒட்டிக்கொள்கிறது.
- தாவரம் ஈரமான பனிப்பொழிவுடன் இருக்கும்போதே உரங்கள் அதிகாலைப்பொழுது தெளிக்கப்படுகின்றன.
- பொதுவாக பயன்படுத்தும் பூச்சிக்கொல்லிகளாவன 5% அல்லது 10% தன்மையுடன் உள்ள DDTமற்றும் DHCஆகிய பூச்சிக்கொல்லிகள் அதிகாலைப் பொழுதில் தாவரங்களின் மீது தெளிக்கப்படுகிறது.

**துகள்கள் அல்லது மணிகள்** 2

- காலநிலை அமைதியாக இருக்கும்பட்சத்தில் இது பயன்படுத்த உகந்த பூச்சிக்கொல்லி அல்ல.
- காற்றினால் தூசுகள் அதிக தூரம் கடத்திச் செல்லப்படுகின்றன.
- இந்தத் தருணங்களில் துகள்களாகப் பூச்சிக்கொல்லிகள் தெளிக்கப்படுவதே சரியான முறையாகும்.
- துகள்கள் தாவரங்களின் மீது தெளிக்கப்பட்ட பிறகு அதிலுள்ள ஈரத்தின்மூலம் நச்சுத்தன்மையானது வெளிப்படுகிறது.
- துகள்களில் உள்ள 4% அலுமினியம் பாஸ்பேட் வெளிப்பட்டு செயல்புரிகிறது.
- சந்தையில் இது கார்பரில் என்று அறியப்படுகிறது.

**ஈரமான தூள்கள்** 2

- நீருடனான ஒரு நீர்த்த வடிவில் இந்தப் பூச்சிகள் தூள்களாகப் பயன்படுத்தப்படுகின்றன.
- DDT மற்றும் BHC போன்ற பூச்சிக்கொல்லிகளில் 50% நீரும், 50% பூச்சிக்கொல்லியும் இடம்பெற்றுள்ளன.
- தூசுகள் மற்றும் துகள்களை ஒப்பிடுகையில் இவை அதிக திறன்வாய்ந்தவையாக கருதப்படுகிறது.

**குழம்பு வகையிலான பூச்சிக்கொல்லிகள்** 2

- பெரும்பாலான செயற்கை கரிமப் பூச்சிக்கொல்லிகள் நீரில் கரையாமல் கரிமக் கரைப்பான்கள் பயன்படுத்தி கரைக்கப்படுகின்றன.
- இந்தக்கலவை பூச்சிக்கொல்லிகள் மற்றும் கரிமக் கரைப்பான்களை பயன்படுத்தி சோப்பினில் பயன்படுத்தப்படும் குழம்பு வினையூக்கி போல உருவாக்கப்படுகிறது.
- நீருடன் வினைபுரிந்து ஒரு தெளிவான குழம்பினை உருவாக்குகிறது.
- தாவரங்களின் மீது தெளிக்கப்பட்டபிறகு நீர் உடனடியாக காய்ந்து நச்சுப்பொருள் தாவரத்தின்மீது படிகிறது.
- பூச்சிக்கொல்லி தெளித்தலில் இது சிறந்த முறையாகக் கருதப்படுகிறது.

**புகைத்தல்** 2

- பூச்சிக்கொல்லிப் பொருட்களை வாயு நிலையில் பயன்படுத்துவதே புகைத்தல் என்று அழைக்கப்படுகிறது.

- அறை வெப்பநிலையில் துகள்களாக உள்ள திட பூச்சிக்கொல்லியானது ஆவியாவதை புகைத்தல் என்று அழைக்கிறோம்.
- பொதுவாக இவை தோட்ட வளர்ப்பில் மற்றும் தோட்டக்கலையில் அதிகமாக பயன்படுத்தப்படும் முறையாகும்.
- பதப்படுத்தப்பட்ட மண்ணானது நெகிழித்தாள்கள் மூலம் மூடப்பட்டு குறுகிய நாட்களுக்குப் பாதுகாக்கப்படுகிறது.
- தானியக்கிடங்களில் சேமித்து வைக்கப்பட்டிருக்கும் தானியங்களின் உள்ள பூச்சிகளை அகற்றுவதற்கு பயன்படுத்தப்படும் சிறந்த முறை இதுவாகும்.

**அலகு - 3**

**1) தாது என்றால் என்ன? தாதுவின் பிரித்தெடுக்கும் முறைகளை விளக்குக.**

**தாது** 1.5

- எக்கனிமத்திலிருந்து உலோகமானது எளிதில், சிக்கனமாக, பெரிய அளவில் பிரித்தெடுக்க முடிகிறதோ அதுவே தாகு எனப்படும்.
- **உதாரணமாக:** களிமண்ணும், $(Al_2O_3 . 2\ SiO_2 . 2\ H_2O)$ பாக்சைட்டும்
- $(Al_2O_3 . 2 . H_2O)$ அலுமினியத்தின் கனிமங்களாகும், ஆனால் பாக்சைட்டிலிருந்து அலுமினியம் இலாபகரமாக பிரித்தெடுக்க முடிவதால், பாக்சைட்டானது அலுமினியத்தின் தாது என்றும் களிமண் அதன் கனிமம் என்றும் அழைக்கப்படும்.

**தாதுக்களை பிரித்தெடுக்கும் முறைகள்** 1.5

- தாதுக்களின் இயல்பைப் பொறுத்து, அவற்றிலிருந்து உலோகத்தைப் பிரித்தெடுக்கும் முறையானது நான்கு வகைப்படும்.

| ஆக்சைடு தாது | கார்பனேட் தாது | ஹேலைடு தாது | சல்பைடு தாது |
|---|---|---|---|
| பாக்சைட் $(Al_2O_3.2H_2O)$ | மார்பிள் $(CaCO_3)$ | கிரையோலைட் $(Na_3AlF_6)$ | கலீனா (PbS) |
| குப்ரைட் $(Cu_2O)$ | மாக்னசைட் $(MgCO_3)$ | ஃப்ளூர்ஸ்பார் $(CaF_2)$ | இரும்பு பைரைட் $(FeS_2)$ |
| ஹேமடைட் $(Fe_2O_3)$ | சிட்ரைட் $(FeCO_3)$ | பாறை உப்பு (NaCl) | ஜிங்க்ப்ளண்ட் (ZnS) |

**அட்டவணையில் உலோகங்களின் வெவ்வேறு தாதுக்கள் பட்டியலிடப்பட்டுள்ளது.**

- நன்கு தூளாக்கப்பட்ட தாதுக்களை அடர்ப்பிக்கும் முறைகள் கீழ்கண்டவாறு அமைகின்றன.

**1. புவியீர்ப்பு முறையில் பிரித்தல்**

**தத்துவம்** 3

- தாதுகளுக்கும், தாதுக் கூளங்களுக்கும், இடையில் உள்ள அடர்த்தி வேறுபாடு இம்முறையின் அடிப்படையாகும், ஆக்சைடு தாதுக்கள் இம்முறையினால் தூய்மையாக்கப்படுகின்றன. எ,கா, ஹேமடைட் $(Fe_2O_3)$ (இரும்பின் தாது)
- குறிப்பு: தாதுவானது அதில் கலந்துள்ள மாசுக்களைவிட கனமானதாக (அடர்த்தி மிகுந்ததாக) இருக்கும்போது இப்பிரித்தெடுத்தல் முறை பயன்படுகிறது.

**முறை:**

- நன்கு தூளாக்கப்பட்ட தாது, அதிர்வடையும் சாய் தளத்தின்மேல் கொட்டப்படும். பிறகு நீர் அதன் மேல் பீய்ச்சி அடிக்கப்படும்.
- இதனால், அடர்த்தி மிகு தாது தூள்கள் கீழே தங்கி விட லேசான தாதுக்கூளங்கள், தண்ணீரால் கழுவி நீக்கப்படுகின்றன.

**2. காந்த முறை பிரிப்பு**

**தத்துவம்** 3

- தாதுக்களின் காந்தத்தன்மை, பிரித்தலின் அடிப்படையாக அமைகிறது. தாதுவோ அல்லது தாதுக்கூளமோ காந்தத் தன்மை பெற்றிருப்பின், இம்முறை செயல்படுத்தப்படும், எ.கா. டின்ஸ்டோன் $(SnO_2)$ வெள்ளீயத்தின் தாது.

**முறை**




- நன்கு தூளாக்கப்பட்ட தாதுவானது இரண்டு உலோக உருளைகளுக்கு ஊடே செல்லும் இயங்கு பெல்டின் மூலம் கொட்டப்படுகின்றது, இவ்உருளைகளில் ஒன்று காந்தத் தன்மையுடன்இருப்பதால், காந்தத் துகள்கள், காந்த தன்மையுள்ள உருளையால் ஈர்க்கப்பட்டு காந்த தன்மையற்ற துகள்கள் தொலைவில் செறிந்து பிரிக்கப்படும்.

**3. நுரைமிதப்பு முறை**

**தத்துவம்:** 3

- பைன் ஆயிலின் மூலம் தாதுக்களையும், நீரின் மூலம் தாதுக்கூளங்களையும் எந்த அளவிற்கு எளிதில் ஈரப்பதம் ஏற்ற முடியுமோ, அதுவே, இம்முறையின் தத்துவமாகும்
- லேசான தாதுக்களான சல்பைடு தாதுக்கள், இம்முறையில் அடர்பிக்கப்படுகின்றன. எ.கா. ஜிங்க் ப்ளண்ட் ZnS

- **குஷ்ப்பு:** தாதுவானது அதில் கலந்துள்ள மாசுக்களைவிட இலேசானதாக (அடர்த்தி குறைவாக) இருக்கும்போது இப்பிரித்தெடுத்தல் முறை பயன்படுகிறது.



சல்பைடு தாதுத்துகளை அடர்பிக்கும் முறை

முறை: 2

- நன்கு தூளாக்கப்பட்ட தாதுவானது எண்ணெயும்,. நீரும் கொண்ட ஒரு பெரிய தொட்டியில் இடப்பட்டு, அவற்றின் மேல் நன்கு அழுத்தப்பட்ட காற்று செலுத்தப்படுகின்றது தாதுவானது எண்ணெயின் மூலம் ஈரப்படுத்தப்பட்டு நுரைவடிவில் தாதுக் கூளத்திலிருந்து பிரிக்கப்படுகின்றது.
- தாதுவானது லேசாக உள்ளதால் அது நுரை வடிவில் வெளிப்பரப்பிற்கு வந்துவிடும், மாசுக்கள் அடியில் தங்கிவிடும், எ.கா. ஜிங்க் ப்ளன்ட் (Zns).

**4. வேதிமுறை:** 1

- மிக தூய நிலையில் உள்ள தாதுக்களை அடர்பிப்பதற்கு இம்முறை பயன்படுத்தப்படுகிறது.
- தாதுவானது தகுந்த வேதிப்பொருளுடன் வினைபுரிய செய்து கரையச் செய்வதன் மூலம், கரையாத மாசுக்கள் வடிகட்டலின் மூலம் பிரித்தெடுக்கப்படுகின்றன. வடிநீர் தகுந்த வேதிப்பொருளுடன் சேர்க்கப்பட்டு, வினைபுரிந்து தாது வீழ்படிவாக மாறுகின்றது, எ.கா. பாக்சைட் $Al_2O_3H_2O$ (அலுமினியத்தின் முக்கிய தாது).

**2) உலோகக் கலவைகளை வரையறுத்து கலவைக்கான காரணத்தைக் குறிப்பிடவும். உலோகக் கலவைகளின் வகைகள் மற்றும் நன்மைகளை குறிப்பிடுக?**

**உலோகக் கலவைகள்** 4

- இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட உலோகங்கள் அல்லது உலோகங்களும், அலோகங்களும் சேர்ந்த ஒரு படித்தான கலவையே உலோகக் கலவை ஆகும்.
- உலோகக் கலவையின் பண்புகள், அதன் உள் அடங்கிய உலோகத்தின் பண்புகளிலிருந்து மாறுபடும். தூய தங்கம் மிக மென்மையான உலோகம். அதோடு சிறிதளவு காப்பரைச் சேர்க்கும்போது, வலிமையும், பயன்பாடும் அதிகரிக்கின்றது.

**உலோகக்கலவை உருவாக்குவதற்கான காரணங்கள்**

- நிறம் மற்றும் வடிவங்களை மாற்றியமைக்க
- வேதிப்பண்புகளை மாற்றியமைக்க
- உருகு நிலையைக் குறைக்க
- கடின தன்மை மற்றும் இழுவிசையை அதிகரிக்க
- மின்தடையை அதிகரிக்க

**உலோகக் கலவைகளை உருவாக்கும் முறைகள்** 3

- **உலோகங்களை உருக்கிச் சேர்த்தல்:** எ.கா ஜிங்க் மற்றும் காப்பரை உருக்கிச் சேர்த்தல் மூலம் பித்தளை உருவாகிறது
- **நன்கு பகுக்கப்பட்ட உலோகங்களை அழுத்தி சேர்த்தல்:** எ.கா மர உலோகம் இது காரீயம், வெள்ளீயம், பிஸ்மத், மற்றும் காட்மியம் தூள் போன்றவற்றை உருக்கிச் சேர்த்த கலவையாகும்.

**திடகரைசல்களான உலோகக்கலவை**

- உலோகக் கலவையை திடக்கரைசல் என்று கூறலாம். இதில், செறிவு நிறைந்துள்ள உலோகம் கரைப்பான் ஆகும். மற்ற உலோகங்கள் கரைபொருள் எனப்படும்.
- எ.கா. பித்தளை என்ற உலோகக் கரைசலில் ஜிங்க் என்பது கரைபொருள்: காப்பர் என்பது கரைப்பான் ஆகும்.

**உலோகக் கலவைகளின் வகைகள்** 4

- இரும்பின் பங்கைப் பொறுத்து உலோகக் கலவையை இரண்டாகப் பிரிக்கலாம்.

**ஃபெரஸ் உலோகக்கலவை:**

- இதில் இரும்பு முக்கியப் பங்களிக்கிறது. எ.கா: துருப்பிடிக்காத இரும்பு, நிக்கல் இரும்பு கலவை.

**ஃபெரஸ் இல்லா உலோகக் கலவை:**

- இதில் இரும்பின் முக்கிய பங்களிப்பு இல்லை. எ.கா அலுமினியக் கலவை, காப்பர் கலவை.

| **காப்பர் கலவை (இரும்பு அற்றது)** | |
|---|---|
| **கலவைகள்** | **பயன்கள்** |
| பித்தளை (Cu, Zn) | மின் இணைப்புகள், பதக்கங்கள், அலங்காரப் பொருட்கள், கடின உபகரணங்கள். |
| வெண்கலம் (Cu, Sn) | சிலைகள், நாணயங்கள், அழைப்பு மணிகள் |
| **அலுமினியக் கலவை (இரும்பு அற்றது)** | |
| **கலவைகள்** | **பயன்கள்** |
| டியுராலுமின் (Al, Mg, Mn, Cu) | விமானத்தின் பகுதிகள், ப்ரஷர் குக்கர்கள் |
| மெக்னீசியம்(Al, Mg) | விமானத்தின் பகுதிகள், அறிவியல் உபகரணங்கள் |
| **இரும்புக் கலவைகள்** | |
| **கலவைகள்** | **பயன்கள்** |
| துருப்பிடிக்காத இரும்பு (Fe,C, Ni,Cr) | பாத்திரங்கள் வெட்டும் கருவிகள், வாகன உதிரிபாகங்கள் |
| நிக்கல் இரும்பு(Fe,C,Ni) | கம்பிகள் விமானத்தின் உதிரிப் பாகங்கள், உந்திகள் |

**நன்மைகள்** 4

- இவை விரைவில் துருப்பிடிப்பதும், அரித்துப் போவதும் இல்லை. அப்படியே அரித்தாலும் சிறிதளவே சேதமடையும்.
- இவை தூய உலோகத்தை விட கடினமாகவும் வலிமையானதாகவும் இருக்கும். எ.கா: தங்கள் செம்போடு கலக்கப்படும் போது தூய தங்கத்தை விட வலிமையானதாக இருக்கும்.
- இவை தூய உலோகத்தை விட கடத்தும் தன்மை குறைந்தவை. எ.கா: செம்பு அதன் உலோகக் கலவைகளாகிய பித்தளை மற்றும் வெண்கலத்தை விட நன்கு வெப்பம் மற்றும் மின்சாரத்தைக் கடத்தும்.
- சிலவற்றின் உருகு நிலை தூய உலோகத்தின் உருகு நிலையை விட குறைவு. எ.கா: பற்றாசு என்பது ஈயம் மற்றும் வெள்ளீயத்தின் கலவை. இதன் உருகு நிலை குறைவு.
- இரசக்கலவை என்பது பாதரசத்துடன், உலோகம் சேர்ந்த கலவையாகும்.
- எலக்ட்ரான்களுக்கும், நேர்மின்சுமை கொண்ட உலோக அயனிகளுக்கும் இடைப்பட்ட நிலைமின் கவர்ச்சி விசையால், விளையும் உலோகப் பிணைப்பின் மூலம் இக்கலவைகள் உருவாகின்றன.
- எ.கா சில்வர் டின் ரசக்கலவை. இது பற்குழிகள் அடைக்கப் பயன்படுகிறது.

**3) ஜிங்கின் முக்கியமான மூன்று தாதுக்களை கூறுக. ஜிங்க் பிளெண்ட் என்னும் தாதுவிலிருந்து ஜிங்க் எப்படி பிரித்தெடுக்கப்படுகிறது. ஜிங்க் கார்பனேட்டின் முக்கியத்துவம் பற்றி எழுதுக.**

**தோற்றம் மற்றும் ஜிங்க் பிரித்தெடுத்தலின் தத்துவங்கள்**

**ஜிங்க்** 2

- பழங்காலத்தில் உலோகக் கலவையான Zn மற்றும் Cu ஏறத்தாழ பித்தலை போலவே உள்ளதாகக் கருதி அதன் இயைபை அறியாமலேயே பயன்படுத்தப்பட்டு வந்தது.
- முற்காலத்தில் இருந்து ஜிங்க் நம் நாட்டில் பழக்கத்தில்இருந்தது. ஆயுர்வேதத்தில் இது யஷ்தா என அழைக்கப்பட்டது.
- பொதுவாக ஜாஸ்ட் என அழைக்கப்படுகிறது.

**தோற்றம்**

- இது வினைபுரியும் திறன் அதிகமுள்ள உலோகமாதலால் தனித்த நிலையில் கிடைப்பதில்லை.
- இருப்பினும், சேர்மங்களாக பெருவாரியான இடங்களில் காணப்படுகிறது.

**தாதுக்கள்** 1

- இதன் முக்கிய தாதுக்களாவன

1. ஜிங்க் பிளன்ட், ZnS
2. காலமைன், $ZnCO_3$
3. ஜிங்சைட், ZnO

- ஜிங்க்-ன் முக்கியத் தாது ஜிங்க் பிளண்ட். இந்தத் தாது இந்தியாவில் ராஜஸ்தானில் உள்ள உதய்பூர் அருகிலுள்ள ஜாவார் சுரங்கத்தில் கிடைக்கிறது.

**ஜிங்க் பிளண்டிலிருந்து ஜிங்கை பிரித்தெடுத்தல்** 1

- ஜிங்க் பிளண்டிலிருந்து பிரித்தெடுத்தல் பின்வரும் படிகளில் நிகழ்கிறது.

1. அடர்ப்பித்தல்

- தூள் செய்யப்பட்ட தாது நுரை மிதப்பு முறையில் அடர்ப்பிக்கப்படுகிறது.

2. வறுத்தல்

- அடர்பிக்கப்பட்ட தாதுவை சுமார் 1200 கெல்வின் வெப்பநிலையில் அதிக அளவு காற்றைச் செலுத்தி வறுக்கப்படுகிறது.

$$2ZnS + 3O_2 \xrightarrow{\Delta} 2ZnO + 2SO_2$$

3. ஒடுக்கம்

- ஜிங்க் ஆக்சைடு கல்கரியுடன் சேர்ந்து தீக்களிமண்ணால் செய்யப்பட்ட குப்பி போன்ற குழாய்களில் எடுத்துக்கொண்டு 1673 கெல்வின் வெப்பநிலைக்கு வெப்பப்படுத்த ZnO ஆனது ஜிங்க் உலோகமாக ஒடுக்கப்படுகிறது.
- $ZnO + C \xrightarrow{1673K} Zn + CO$

**தூய்மையாக்கல்** 3

- மின்னாற் தூய்மையாக்கல் மூலம் ஜிங்க் தூய்மையாக்கப்படுகிறது.
- மாசு கலந்த ஜிங்க் நேர்மின்வாயாகவும், தூய ஜிங்க் தகட்டினை எதிர்மின் வாயாகவும் கொண்டு நீர்த்த சல்பியூரிக் அமிலம், ஜிங்க் சல்பேட் சேர்ந்த கரைசலை மின் பகுளியாக எடுத்துக் கொண்டு மின்சாரத்தை செலுத்தும்போது நேர்மின்வாய் கரைந்து மிகத் தூய்மை வாய்ந்த ஜிங்க்எதிர்மின்வாயில் படிகிறது.

**பண்புகள்** 1

**இயற்பியல் பண்புகள்**

- நீலங்கலந்த வெண்மைநிற உலோகம்
- வெப்பம் மற்றும் மின்சாரத்தைக் கடத்தும்
- இதைக் கம்பியாக நீட்டலாம் மற்றும் தகடாக அடிக்கலாம்.

**வேதிப்பண்புகள்** 2

**காற்றுடன் வினை**

- 773 கெல்வின் வெப்பநிலையில் காற்றில் எரிந்து வெண்மையான பஞ்சு போன்ற ஜிங்க் ஆக்சைடு உருவாகி பிறகு இழை போன்று மாறுகிறது. இது பிளாசபர் உல் எனப்படுகிறது.

$$2Zn + O_2 \xrightarrow{773K} 2ZnO$$

**நீருடன் வினை**

- தூய ஜிங்க் நீருடன் வினைபுரிவதில்லை. ஆனால் மாசு கலந்த ஜிங்க் நீராவியை சிதைத்து ஹைட்ரஜனை வெளியேற்றுகிறது.

$$Zn + H_2O \text{ (நீராவி)} \rightarrow ZnO + H_2$$

**நீர்த்த அமிலங்களுடன் வினை** 3

- தூய ஜிங்க் நீர்த்த அமிலங்களுடன் பாதிக்கப்படுவதில்லை.

SURESH

- இருப்பினும் தூய்மையற்ற ஜிங்க் நீர்த்த அமிலங்களுடன் வினைபுரிந்து ஹைட்ரஜனை வெளிவிடுகிறது.

$Zn + 2HCl \rightarrow ZnCl_2 + H_2$

$Zn + H_2SO_4 \rightarrow ZnSO_4 + H_2$

**அடர் $H_2SO_4$ உடன் வினை**

- அடர் $H_2SO_4$ உடன் ஜிங்க் வினைபுரிந்து $ZnSO_4$ தருகிறது.

$Zn + 2H_2SO_4 \rightarrow ZnSO_4 + SO_2 + 2H_2O$

**அடர் $HNO_3$ உடன் வினை**

- ஜிங்க் அடர் நைட்ரிக் அமிலத்துடன் வேறுபட்ட செறிவில் வினைபுரிந்து வேறுபட்ட விளைபொருள்களைத் தருகிறது.

$4Zn + 10\ HNO_3\ (dil) \rightarrow 4Zn(NO_3)_2 + N_2O$ (நைட்ரஸ் ஆக்சைடு) $+ 5H_2O$

$4\ Zn + 10\ HNO_3\ (very\ dilute) \rightarrow 4\ Zn\ (NO_3)_2 + NH_4NO_3 + 3H_2O$ (அம்மோனியம் நைட்ரேட்)

**காரங்களுடன் வினை**

- ஜிங்க் அடர் NaOH கரைசலுடன் வினைபுரிந்து கரையக்கூடிய ஜிங்கேட் அயனியை உண்டாக்குகிறது.

$Zn + 2NaOH + 2H_2O \rightarrow Na_2ZnO_2 + H_2O$

சோடியம் ஜிங்கேட்

**ஜிங்க்-ன் பயன்கள்**

- அயர்ன் தகடுகளை கால்வனைஸ் செய்யப் பயன்படுகிறது.
- சயனைடு முறையில் கோல்டு மற்றும் சில்வர் பிரித்தெடுத்தலில் பயன்படுகிறது.
- ஜிங்க் தகடுகள் மற்றும் தண்டுகள், உலர் மின்கலம் மற்றும் பேட்டரிகளில் பயன்படுகிறது.
- ஜிங்க் துகள்கள் ஆய்வகத்தில் ஒடுக்கும் காரணியாகப் பயன்படுகிறது.

**ஜிங்க் கார்பனேட்டின் ($ZnCO_3$) முக்கியத்துவம்** 2

- இது இயற்கையில் காலமைன் என்ற பொருளாகக் கிடைக்கிறது.
- தோல் நோயைக் குணப்படுத்தும் களிம்புகளில் பயன்படுகிறது.
- அழகுப்பொருட்கள் தயாரித்தலில் பயன்படுகிறது.
- இரப்பர் தொழிற்சாலையில் நிறமியாகப் பயன்படுகிறது.

4) **a) பொது அயனி விளைவை எடுத்துக்காட்டுடன் விளக்குக.**

**b) தாங்கல் கரைசலை எடுத்துக்காட்டுடன் விளக்குக**

**c) ஹென்டர்சன்-ஹேசல்பாக் சமன்பாடு பற்றி விவாதிக்கவும்.**

**a) பொது அயனி விளைவை எடுத்துக்காட்டுடன் விளக்குக.** 5

**பொது அயனி விளைவு**

- ஒரு வலிமை குறைந்த அமிலத்தின் உப்பை, அதே அமிலத்துடன் சேர்க்கும்போது, அந்த அமிலத்தின் பிரிகைவீதம் மேலும் குறைகிறது.
- எடுத்துக்காட்டாக, அசிட்டிக் அமில கரைசலுடன் சோடியம் அசிட்டேட்டை சேர்க்கும்போது, ஏற்கனவே குறைந்தளவு பிரிகையடைந்துள்ள அசிட்டிக் அமிலத்தின் பிரிகை வீதமானது மேலும் குறைக்கப்படுகிறது.
- இந்நேர்வில், $CH_3COOH$ மற்றும் $CH_3COONa$ ஆகிய இரண்டும் $CH_3COO^-$ எனும் பொது அயனியை பெற்றுள்ளன.
- அசிட்டிக் அமிலம் ஒரு வலிமை குறைந்த அமிலமாகும். இது நீர்க்கரைசலில் முழுமையாக பிரிகையடைவதில்லை. எனவே, பின்வரும் சமநிலை உருவாகிறது.

$CH_3COOH(aq) \rightleftharpoons H^+(aq) + CH_3COO^-(aq)$

- எனினும், சேர்க்கப்பட்ட சோடியம் அசிட்டேட் உப்பானது முழுமையாக பிரிகையடைந்து $Na^+$ மற்றும் $CH_3COO^-$ அயனிகளை உருவாக்குகின்றன.
- எனவே, ஒட்டுமொத்த $CH_3COO^-$ அயனிச் செறிவு அதிகரிக்கிறது. மேலும், அமில பிரிகையடைதல் சமநிலை பாதிக்கப்படுகிறது.
- லீ சாட்லியர் கொள்கைப்படி, சமநிலையில் உள்ள ஒரு அமைப்பின்மீது ஏதேனும் ஒரு பாதிப்பினை ஏற்படுத்தும்போது, அந்த சமநிலை அமைப்பானது தன்னைத்தானே சரிசெய்து கொண்டு பாதிப்பின் விளைவை பூஜ்ஜியமாக்கிக் கொள்ளும் என்பது நாமறிந்ததே.
- எனவே, சமநிலையை பராமரிக்கும் பொருட்டு, அதிகப்படியாக உள்ள $CH_3COO^-$ அயனிகள் $H^+$ அயனிகளுடன் இணைந்து அதிக அயனியுறா தன்மைகொண்ட $CH_3COOH$ ஆக மாறுகிறது. சமநிலையானது இடதுபுறமாக நகருகிறது, $CH_3COOH$ அமிலத்தின் பிரிகையாதல் குறைக்கப்படுகிறது.
- அதாவது, வலிமை குறைந்த மின்பகுளியுடன், ஒரு பொது அயனியை கொண்டுள்ள உப்பை ($CH_3COONa$) சேர்க்கும்போது அந்த வலிமை குறைந்த மின்பகுளியின் ($CH_3COOH$)பிரிகையடைதல் குறைகிறது.
- இது பொது அயனி விளைவு என்றழைக்கப்படுகிறது.

**b) தாங்கல் கரைசலை எடுத்துக்காட்டுடன் விளக்குக.**

**தாங்கல் கரைசல்** 5

- நமது உடலிலுள்ள இரத்தம், பலவிதமான அமில-கார செல்வினைகளுக்கு நடுவிலும் தன்னுடைய pH மதிப்பை மாறாமல் பாரமரிக்கிறது.
- அத்தகைய வினைகளில் ஹைட்ரோனியம் அயனிச் செறிவை மாறாமல் பராமரிப்பது தாங்கல் செயல்முறையின் காரணமே.
- தாங்கல் கரைசல் என்பது, ஒரு வலிமை குறைந்த அமிலம் மற்றும் அதன் இணைகாரம் (அல்லது) ஒரு வலிமை குறைந்த காரம் மற்றும் இணைஅமிலம் ஆகியவற்றைக் கொண்டுள்ள கரைசல் கலவையாகும்.
- இந்த தாங்கல் கரைசலானது, சிறிதளவு அமிலம் அல்லது காரம் சேர்ப்பதினால் உருவாகும் தீவிர pH மாற்றத்தை தடுக்கிறது. மேலும், இந்த திறனானது தாங்கல் செயல்முறை என்றழைக்கப்படுகிறது.
- கார்பானிக் அமிலம் ($H_2CO_3$)மற்றும் அதன் இணை காரம் $HCO_3$ ஆகியவற்றை கொண்ட தாங்கல் கரைசல் நம் இரத்தத்தில் காணப்படுகிறது.
- இரண்டு வகையான தாங்கல் கரைசல்கள் உள்ளன.

**அமில தாங்கல் கரைசல்:**

- ஒரு வலிமை குறைந்த அமிலம் மற்றும் அதன் உப்பு கரைந்துள்ள கரைசல். எடுத்துக்காட்டு : அசிட்டிக் அமிலம் மற்றும் சோடியம் அசிட்டேட் ஆகியவை கரைந்துள்ள கரைசல்.

**காரத் தாங்கல் கரைசல்**

- ஒரு வலிமை குறைந்த காரம் மற்றும் அதன் உப்பு கரைந்துள்ள கரைசல். எடுத்துக்காட்டு :
- $NH_4OH$ மற்றும் $NH_4Cl$ ஆகியவை கரைந்துள்ள கரைசல்.

**c) ஹெண்டர்சன்–ஹேசல்பால்ச் சமன்பாடு பற்றி விவாதிக்கவும்.** 5

- ஒரு அமில தாங்கல் கரைசலின் pH ஆனது வலிமை குறைந்த அமிலத்தின் பிரிகை மாறிலி $K_a$ மற்றும், அமிலம் மேலும் அதன் உப்பின் செறிவுகளிலிருந்து கணக்கிடலாம்.
- வலிமை குறைந்த அமிலம், HA வின் பிரிகைக்கான சமன்பாடு பின்வருமாறு,

$HA \rightleftharpoons H^+ + A^-$ மற்றும்

$$K_a = \frac{[H^+][A^-]}{[HA]} \text{ or } [H^+] = \frac{[HA]K_a}{[A^-]} \quad \text{.................(1)}$$

- வலிமை குறைந்த அமிலம் குறைந்த அளவே பிரிகையடைகிறது. அதன் பிரிகை வீதமானது $A^-$ அயனியைத் தரும் ( பொது அயனி விளைவு) ($Na^+ A^-$) உப்பை சேர்ப்பதால் மேலும் குறைகிறது.
- இதன் விளைவாக, பிரிகையடையாத அமிலத்தின் சமநிலைச் செறிவானது அமிலத்தின் தொடக்கச் செறிவிற்கு சமமாகும்.
- $[A^-]$ன் சமநிலை செறிவானது உப்பின் தொடக்கச் செறிவிற்கு சமமாகும்.
- எனவே சமன்பாடு (1) ஐப் பின்வருமாறு எழுதலாம்.

$$[H^+] = K_a \times \frac{\text{அமிலம்}}{\text{காரம்}} \quad \text{................(2)}$$

- அதாவது [அமிலம்] என்பது சேர்க்கப்பட்ட அமிலத்தின் தொடக்கச் செறிவு மற்றும் [உப்பு] என்பது பயன்படுத்தப்படும் உப்பின் செறிவு ஆகும்.
- சமன்பாடு (2)ன் இருபுறமும் எதிர்க்குறி மடக்கை எடுக்க
- $-\log[H^+] = -\log k_a - \log \frac{\text{அமிலம்}}{\text{உப்பு}}$ ................ (3)
- $-\log[H^+]$= pH மற்றும் $-\log k_a = pk_a$ எனில் (3)
- $pH = pk_a - \log \frac{\text{அமிலம்}}{\text{உப்பு}} = pk_a + \log \frac{\text{உப்பு}}{\text{அமிலம்}}$
- எனவே, $pH = pk_a + \log \frac{\text{உப்பு}}{\text{அமிலம்}}$
- இந்த தொடர்பானது ஹெண்டர்சன்–ஹேசல்பால்ச் சமன்பாடு அல்லது ஹெண்டர்சன் சமன்பாடு எனப்படும்.
- இதேபோல், காரதாங்கல் கரைசலுக்கு ஹெண்டர்சன் சமன்பாட்டை வருவிக்கலாம்.

$$pOH = pK_b + \log \frac{[\text{உப்பு}]}{[\text{காரம்}]}$$

**5) அமிலம், காரம் மற்றும் உப்பு – வரையறு மற்றும் அதன் பயன்களை பட்டியலிடுக?**

**அமிலங்கள்** 3

- அமிலம் என்ற சொல்லானது புளிப்பு எனப் பொருள்படும். ‘அசிடஸ்’ என்ற இலத்தீன் மொழிச்சொல்லில் இருந்து வருவிக்கப்பட்டது.
- எனவே, புளிப்புச்சுவை கொண்ட வேதிச்சேர்மங்கள் பொதுவாக அமிலங்கள் எனப்படுகின்றன.
- ஸ்வீடன் நாட்டு வேதியியலாளர் அர்ஹீனியஸ் அமிலங்கள் பற்றிய ஒரு கொள்கையை முன் வைத்தார்.
- அவரின் கூற்றுப்படி, அமிலம் என்பது நீர்க்கரைசலில் $H^+$ அயனிகள் அல்லது $H_3O^+$ அயனிகளைத் தரும் வேதிப்பொருளாகும்.
- அனைத்து அமிலங்களும் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட இடப்பெயர்ச்சி செய்யத்தக்க ஹைட்ரஜன் அணுக்களைப் பெற்றுள்ளன. மேலும், அவற்றை நீரில் கரைக்கும்பொழுது ஹைட்ரஜன் அயனிகளை ($H^+$)அவை வெளியிடுகின்றன.
- எடுத்துக்காட்டாக, ஹைட்ரோகுளோரிக் அமிலம் (HCl), சல்பியூரிக் அமிலம் ($H_2SO_4$)மற்றும் நைட்ரிக் அமிலம்($HNO_3$)ஆகியவற்றை நீரில் கரைக்கும் பொழுது ஹைட்ரஜன் அயனிகளை ($H^+$) அவை கொடுக்கின்றன.
- ஹைட்ரோகுளோரிக் அமிலம் (HCl) $\xrightarrow{water}$ ஹைட்ரஜன் அயனி ($H^+$)+ குளோரைடு அயனி ($Cl^-$)
- சல்பியூரிக் அமிலம் ($H_2SO_4$) ஹைட்ரஜன் அயனி ($2H^+$) + சல்பேட் அயனி($SO_4^{2-}$)
- எனவே, நீரில் கரையும்போது ஹைட்ரஜன் அயனிகளை வெளியிடும் வேதிச்சேர்மங்கள் அமிலங்கள் என வரையறுக்கப்படுகின்றன.
- அனைத்து அமிலங்களும் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட ஹைட்ரஜன் அணுக்களைக் கொண்டவை.
- ஆனால் ஹைட்ரஜன் உள்ள அனைத்துப் பொருள்களும் அமிலங்கள் அல்ல.
- எ.கா மீத்தேன் ($CH_4$)மற்றும் அம்மோனியா ($NH_3$) ஆகியவை ஹைட்ரஜனைக் கொண்டுள்ளன.
- ஆனால் இவை நீர்த்த கரைசலில் ஹைட்ரஜன் ($H^+$) அயனிகளைத் தராது.

**காரங்கள்** 3

- குளிப்பதற்கும், துணிகளைத் துவைப்பதற்கும் நாம் சோப்புகளைப் பயன்படுத்துகிறோம்.
- சோப்புகளின் வழவழப்புத் தன்மைக்குக் காரணம் அவற்றிலுள்ள காரங்கள் ஆகும்.
- இவை தோலில் பட்டால் அரிக்கும் தன்மையையும், கசப்புச் சுவையையும் கொண்டவை,
- பலவகையான வெளுப்பான்கள், சோப்புகள், சலவை சோப்புகள், பற்பசைகள் மற்றும் பல பொருள்கள் காரங்களைக் கொண்டுள்ளன.

- அமிலங்கள் நீரில் கரைந்து ஹைட்ரஜன் அயனிகளைத் தருகின்றன. இதற்கு மாறாக, காரங்கள் நீரில் கரைந்து ஹைட்ராக்சைடு அயனிகளைத் தருகின்றன.
- எனவே, நீரில் ஹைட்ராக்சைடு அயனிகளைத் தரவல்ல வேதிப்பொருள்கள் பொதுவாக காரங்கள் என அழைக்கப்படுகின்றன.
- எடுத்துக்காட்டு, சோடியம் ஹைட்ராக்சைடு (NaOH)மற்றும் பொட்டாசியம் ஹைட்ராக்சைடு (KOH)
- சோடியம் ஹைட்ராக்சைடு (NaOH) $\xrightarrow{water}$ சோடியம் அயனி ($Na^+$)+ஹைட்ராக்சைடு அயனி ($OH^-$)
- பொட்டாசியம் ஹைட்ராக்சைடு (KOH) $\xrightarrow{water}$ பொட்டாசியம் அயனி ($K^+$)+ஹைட்ராக்சைடு அயனி ($OH^-$)
- நீரில் கரையும் காரங்கள் அல்கலிகள் என்று அழைக்கப்படுகின்றன.
- சோடியம் ஹைட்ராக்சைடு, பொட்டாசியம் ஹைட்ராக்சைடு, கால்சியம் ஹைட்ராக்சைடு மற்றும் அம்மோனியம் ஹைட்ராக்சைடு போன்ற காரங்கள் நீரில் அதிக அளவு கரைந்து ஹைட்ராக்சைடு அயனிகளைத் தருகின்றன. எனவே, இவை அல்கலிகள் என அழைக்கப்படுகின்றன.
- சில வேதிச்சேர்மங்களை நீரில் கரைக்கும் பொழுது ஹைட்ராக்சைடு அயனிகளைத் தருவதில்லை. ஆனால், அவையும் காரங்களாகும்.
- எடுத்துக்காட்டு : சோடியம் கார்பனேட், சோடியம் பை கார்பனேட், கால்சியம் கார்பனேட் போன்றவை.
- சோடியம் கார்பனேட் ($Na_2CO_3$)சலவைசோடா எனவும், சோடியம் பை கார்பனேட் ($NaHCO_3$) சமையல் சோடா எனவும், சோடியம் ஹைட்ராக்சைடு (NaOH) காஸ்டிக் சோடா எனவும், பொட்டாசியம் ஹைட்ராக்சைடு (KOH)காஸ்டிக் பொட்டாஷ் எனவும் வணிக ரீதியாக அழைக்கப்படுகின்றன.

**உப்புகள்** 3

- அமிலங்களுக்கும், காரங்களுக்குமிடையே நிகழும் நடுநிலையாக்கும் வினையின் மூலம் கிடைக்கும் விளை பொருள்களே உப்புகளாகும்.
- இவை நீரில் கரைந்து நேர் மற்றும் எதிர் அயனிகளை உருவாக்குகின்றன.

  அமிலம் + காரம் $\rightarrow$ உப்பு + நீர்

**உப்புகளின் வகைகள்**

**சாதாரண உப்புகள்**

- ஓர் அமிலம் மற்றும் காரம் இவற்றின் முழுமையான நடுநிலையாக்கலின் போது சாதாரண உப்பு கிடைக்கிறது.

  $NaOH + HCl \rightarrow NaCl + H_2O$

**அமில உப்புகள்**

- ஓர் உலோகமானது அமிலத்திலுள்ள ஹைட்ரஜன் அணுக்களின் பகுதியளவை வெளியேற்றுவதால் இவை உருவாகின்றன.
- பல காரத்துவ அமிலத்தை ஒரு காரத்தினால் பகுதியளவு நடுநிலையாக்கி இவை பெறப்படுகின்றன.

  $NaOH + H_2SO_4 \rightarrow NaHSO_4 + H_2O$

**கார உப்புகள்** 2

- இவை இரு அமிலத்துவ அல்லது மூன்று அமிலத்துவக் காரங்களிலுள்ள ஹைட்ராக்சைடு அயனிகளை ஓர் அமிலத்தால் பகுதியளவு வெளியேறச் செய்து பெறப்படுகின்றன

  $Pb(OH)_2 + HCl \rightarrow Pb(OH)Cl + H_2O$

**இரட்டை உப்புகள்**

- சமமான மூலக்கூறு எடைவிகித அளவுகளில் இரண்டு எளிய உப்புகளின் நிறைவுற்ற கரைசல்களைச் சேர்த்து படிகமாக்கும் போது இரட்டை உப்புகள் உருவாகின்றன.
- உதாரணமாக, பொட்டாஷ் படிகாரம் என்பது பொட்டாசியம் சல்பேட் மற்றும் அலுமினியம் சல்பேட்கலந்த கலவையாகும். $KAl(SO_4)_2.12H_2O$

**அமிலங்களின் பயன்கள்** 2

- நமது வயிற்றில் சுரக்கும் ஹைட்ரோகுளோரிக் அமிலம் உணவுப்பொருள்களின் செரிமானத்திற்கு உதவுகிறது.
- உணவுப் பொருள்கள் கெட்டுப்போகாமல் இருக்க வினிகர் (அசிட்டிக் அமிலம்) பயன்படுத்தப்படுகிறது.
- ஊறுகாய் போன்ற உணவுப் பொருள்கள் கெட்டுப்போகாமல் இருக்க பென்சாயிக் அமிலம் பயன்படுத்தப்படுகிறது.
- குளியல் சோப்புகள் மற்றும் சலவை சோப்புகள் தயாரிக்க உயர் கொழுப்பு அமிலங்களின் சோடியம் உப்புகள் அல்லது பொட்டாசியம் உப்புகள் பயன்படுகின்றன.
- சல்பியூரிக் அமிலம் வேதிப்பொருள்களின் அரசன் என்று அழைக்கப்படுகிறது. ஏனெனில் பல சேர்மங்கள் தயாரிப்பதற்கு இது பயன்படுகிறது. வாகன மின்கலங்களிலும் இது பயன்படுகிறது.
- $H_2SO_4$ மிகச் சிறந்த நீர் நீக்கியாகச் செயல்படுகிறது.
- $H_2SO_4$ பல்வேறு வகையான சலவை சோப்புகள், வண்ணப்பூச்சுகள் (பெயிண்டுகள்), உரங்கள் மற்றும் பல வேதிப்பொருள்கள் தயாரிக்கும் தொழிற்சாலைகளில் பயன்படுத்தப்படுகிறது.
- ஹைட்ரோகுளோரிக் அமிலம், நைட்ரிக் அமிலம் மற்றும் சல்பியூரிக் அமிலம் போன்றவை முக்கியமான ஆய்வகக் காரணிகளாகச் செயல்படுகின்றன.
- அனைத்து உயிரினங்களின் செல்களும் நியூக்ளிக் அமிலங்களை அடிப்படைப் பொருளாக கொண்டுள்ளன.
- விலங்குகள் டி–ஆக்ஸிரிபோ நியூக்ளிக் அமிலத்தையும் (DNA) தாவரங்கள் ரிபோ நியூக்ளிக் அமிலத்தையும்(RNA) கொண்டுள்ளன.
- ஹைட்ரோகுளோரிக் அமிலம், கழிவறைகளைத் தூய்மைப்படுத்தும் பொருளாகப் பயன்படுகிறது
- சிட்ரிக் அமிலம் உணவுப் பொருள்களைப் பதப்படுத்தவும், நுரைத்துப் பொங்கும் உப்புகள் தயாரிக்கவும் பயன்படுகிறது.
- நைட்ரிக் அமிலம் உரமாகப் பயன்படும் அம்மோனியம் நைட்ரேட் என்ற சேர்மத்தையும், சாயங்கள், வண்ணப் பூச்சிகள் மற்றும் மருந்துகளையும் தயாரிக்கப் பயன்படுகிறது.
- ஆக்ஸாலிக் அமிலம் குவார்ட்ஸ் படிகத்தில் ஏற்படும் இரும்பு மற்றும் மாங்கனீசு படிவுகளை சுத்தம் செய்யவும், மரப்பொருள்களைத் தூய்மையாக்கவும் மற்றும் கருப்புக்கறைகளை நீக்கவும்பயன்படுகிறது.

SURESH

- கார்பானிக் அமிலம் காற்று அடைக்கப்பட்ட பானங்களில் பயன்படுகிறது.
- டார்டாரிக் அமிலமானது ரொட்டிச் சோடாவின் ஒரு பகுதிப்பொருளாகும்.

**காரங்களின் பயன்கள்**

- குளியல் சோப்புகள் தயாரிக்க பொட்டாசியம் ஹைட்ராக்சைடு பயன்படுகிறது.
- சலவை சோப்புகள் தயாரிக்க சோடியம் ஹைட்ராக்சைடு பயன்படுகிறது.
- காகிதத் தொழிற்சாலை மற்றும் ஆடைகள் தயாரிக்கும் தொழிற்சாலைகளிலும், மருந்துகள் தயாரிக்கவும் சோடியம் ஹைட்ராக்சைடு பயன்படுகிறது.
- வெள்ளை அடிக்க கால்சியம் ஹைட்ராக்சைடு பயன்படுகிறது.
- வயிற்றில் உருவாகும் அமிலத்தன்மையை நடுநிலையாக்க அலுமினியம் ஹைட்ராக்சைடு மற்றும் மெக்னீசியம் ஹைட்ராக்சைடு போன்ற காரங்கள் பயன்படுகின்றன.
- உரங்கள், நைலான்கள், நெகிழிகள் மற்றும் இரப்பர்கள் தயாரிக்க அம்மோனியம் ஹைட்ராக்சைடு பயன்படுகின்றது.
- வயிற்றுக் கோளாறுக்கு மருந்தாக மெக்னீசியம் ஹைட்ராக்சைடு பயன்படுகிறது.
- துணிகளில் உள்ள எண்ணெய்க் கறைகளை நீக்குவதற்கு அம்மோனியம் ஹைட்ராக்சைடு பயன்படுகிறது.

**உப்புகளின் பயன்கள்** 2

**சாதாரண உப்பு-சோடியம் குளோரைடு**

- இது நம் அன்றாட உணவிலும், உணவைப் பாதுகாப்பதிலும் பயன்படுகிறது.

**சலவை சோடா – சோடியம் கார்பனேட் ($Na_2CO_3$)**

- இது கடின நீரை மென்னீராகப் பயன்படுகிறது.
- இது கண்ணாடித் தொழிற்சாலை, சோப்பு மற்றும் பேப்பர் தொழிற்சாலைகளில் பயன்படுகிறது.

**சமையல் சோடா – சோடியம் பை கார்பனேட் ($NaHCO_3$)**

- இது ரொட்டிச் சோடா தயாரிக்கப் பயன்படுகிறது. ரொட்டிச் சோடா என்பது சமையல் சோடாவும், டார்டாரிக் அமிலமும் சேர்ந்த கலவையாகும்.
- இது சோடா– அமில தீயணைப்பான்களில் பயன்படுகிறது.
- கேக் மற்றும் ரொட்டிகளை மென்மையாக மாற்றுகிறது.
- இது அமில நீக்கியில் உள்ள ஒரு பகுதிப்பொருள் இந்தக் கரைசல் காரத் தன்மை பெற்றிருப்பதால் வயிற்றிலுள்ள அதிகப்படியான அமிலத்தை நடுநிலையாக்குகிறது.

**சலவைத்தூள் - கால்சியம் ஆக்ஸிகுளோரைடு ($CaOCl_2$)**

- கிருமி நாசினியாகப் பயன்படுகிறது.
- பருத்தி மற்றும் லினன் துணிகளை வெளுக்கப் பயன்படுகிறது.

6) **Zn(s) + $Cu^{2+}$ (aq) $Zn^2$ (aq) + Cu(s). மேற்கண்ட ஆக்சிஜனேற்ற மற்றும் ஒடுக்க பகுதி (அரை) செல்களின் வினைகளை எழுதுக மற்றும் மின்வேதிகலத்தின் அமைப்பை தருக.**

**மின்வேதிக் கலன்** 2

- மின்வேதிக் கலன் என்பது வேதி ஆற்றலை மின்னாற்றலாகவும், மின்னாற்றலை வேதி ஆற்றலாகவும் மாற்றும் ஒரு அமைப்பாகும்.
- இதில் இரண்டு வெவ்வேறு மின்பகுளி கரைசல்களுடன் தொடர்பிலுள்ள இரண்டு தனித்தனி மின்முனைகள் உள்ளன.
- மின்வேதிக் கலன்கள் பொதுவாக பின்வரும் இரண்டு வகைகளாக பிரிக்கப்படுகின்றன.

**1. கால்வானிக் மின்கலன் (வோல்டா மின்கலன்)** 2

- இந்த மின்கலத்தில் தன்னிச்சையான வேதி வினையினால் மின்னோட்டம் உருவாகிறது.
- அதாவது, இந்த மின்கலம் வேதி ஆற்றலை மின்னாற்றலாக மாற்றுகிறது.
- பொதுவாக இவை சேமிப்பு மின்கலன்கள் என அஷீயப்படுகின்றன.

**2. மின்னாற்பகுப்புக்கலன்**

- இந்த மின்கலத்தில் வெளி மின்மூலத்திலிருந்து பெறப்படும் மின்னோட்டத்தைக் கொண்டு தன்னிச்சையற்ற வினை நிகழ்த்தப்படுகிறது.
- அதாவது, இந்த மின்கலன் மின்னாற்றலை, வேதி ஆற்றலாக மாற்றுகிறது.

**கால்வானிக் மின்கலன்**

- ஜிங்க் உலோக பட்டையை, காப்பர் சல்பேட் கரைசலில் வைக்கும்போது, கரைசலின் நீல நிறம் வெளுத்து, ஜிங்க் பட்டை மீது சிவப்பு – பழுப்பு நிறத்தில் காப்பர் படிகிறது, இதற்கு காரணம் பின்வரும் தன்னிச்சை வினையாகும்.
  $Zn_{(s)} + CuSO_{4\,(aq)} \rightarrow ZnSO_{4\,(aq)} + Cu_{(s)}$
- மேற்கண்ட வினையில் உருவாக்கப்படும் ஆற்றலானது, வெப்ப ஆற்றலாக சூழலுக்கு இழக்கப்படுகிறது.
- மேற்காண் ஆக்ஸிஜனேற்ற ஒடுக்க வினையில், ஜிங்க் ஆக்ஸிஜனேற்றமடைந்து $Zn^{2+}$ அயனிகளும், $Cu^{2+}$ அயனிகள் ஒடுக்கமடைந்து உலோக காப்பரும் உருவாகின்றன.
- இந்த அரை வினைகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.
  $Zn_{(s)} \rightarrow Zn^{2+}_{(aq)} + 2e^-$ (ஆக்ஸிஜனேற்றம்)
  $Cu^{2+}_{(aq)} + 2e^- \rightarrow Cu_{(s)}$ (ஒடுக்கம்)
- இந்த அரை வினைகளை தனித்தனியாக நடத்துதலே டேனியல் மின்கல கட்டமைப்பின் அடிப்படை ஆகும். இது இரண்டு அரை மின்கலங்களை கொண்டுள்ளது.

**ஆக்ஸிஜனேற்ற அரை மின்கலன்** 2

- படத்தில் காட்டியுள்ளவாறு முகவையிலுள்ள நீர்த்த ஜிங்க் சல்பேட் கரைசலில் ஜிங்க் உலோகப் பட்டை மூழ்க வைக்கப்பட்டுள்ளது.

**ஒடுக்க அரை மின்கலன்**

- படத்தில் காட்டியுள்ளவாறு முகவையிலுள்ள நீர்த்த காப்பர் சல்பேட் கரைசலில் காப்பர் உலோகப் பட்டை மூழ்க வைக்கப்பட்டுள்ளது.

**அரை மின்கலங்களை இணைத்தல்** 1.5

- ஜிங்க் மற்றும் காப்பர் பட்டைகள் வெளிப்புறமாக ஒரு கம்பி மூலம் இணைக்கப்படுகின்றன.
- இதனூடே ஒரு இணைப்பியும் (k) ஒரு மின் மூலமும் இணைக்கப்பட்டுள்ளன.
- (எடுத்துக்காட்டு : வோல்ட் மீட்டர்).
- எதிர்மின்முனைப் பகுதி மற்றும் நேர்மின்முனைப் பகுதிகளிலுள்ள மின்பகுளிக் கரைசல்கள், தலைகீழாக கவிழ்த்து வைக்கப்பட்டுள்ள Uவடிவ குழாய் மூலம்

இணைக்கப்பட்டுள்ளன. இந்த U வடிவ குழாயில், அகார் – அகார் ஜெல்லுடன் $KCl, Na_2SO_4$ போன்ற வினையுறா மின்பகுளிகள் கலந்த பசை வைக்கப்பட்டுள்ளது.

- இந்த வினையுறா மின்பகுளிகளின் அயனிகள் அரை மின்கலன்களிலுள்ள மற்ற அயனிகளுடன் வினைபுரிவதில்லை, மேலும் அவை மின்முனைகளில் ஆக்ஸிஜனேற்றமோ அல்லது ஒடுக்கமோ அடைவதில்லை.
- உப்புப்பாலத்தில் உள்ள கரைசல் வழிவதில்லை ஆனால், இந்த உப்புப்பாலத்தின் வழியே அயனிகள் அரை மின்கலத்திலிருந்து உள்ளேயோ அல்லது வெளியேயோ செல்ல முடியும்.
- இணைப்பி (k) மூலம் மின்சுற்றை மூடும்போது, எலக்ட்ரான்கள் ஜிங்க் பட்டையிலிருந்து காப்பர் பட்டைக்கு பாய்கின்றன.
- இதற்கு காரணம் அந்தந்த மின்முனைகளில் நிகழும் ஆக்ஸிஜனேற்ற ஒடுக்க வினைகளே ஆகும். அவை கீழே கொடுக்கப்பட்டுள்ளன.




**<u>நேர்மின்வாய் ஆக்ஸிஜனேற்றம்</u>** **1.5**

- எந்த மின்முனையில் ஆக்ஸிஜனேற்றம் நிகழ்கிறதோ அது, நேர்மின் முனை என்றழைக்கப்படுகிறது.
- டேனியல் மின்கலத்தின், ஜிங்க் மின்முனையில் ஆக்ஸஜனேற்றம் நிகழ்கிறது.
- அதாவது, ஜிங்க் ஆனது $Zn^{2+}$ அயனிகளாகவும், எலக்ட்ரான்களாகவும் ஆக்ஸிஜனேற்றமடைகின்றன.
- இந்த $Zn^{2+}$ அயனிகள் கரைசலுக்குள் நுழைகின்றன. மேலும், எலக்ட்ரான்கள் கம்பியின் வழியே வெளிச்சுற்றிற்கு பாய்கின்றன, பின்னர் அவை காப்பர் பட்டைக்குள் நுழைகின்றன.
- ஜிங்க் மின்முனையில் எலக்ட்ரான்கள் விடுவிக்கப்படுவதால், எதிர்குறியை (- ve) பெறுகிறது.

$Zn(s) \rightarrow Zn^{2+}(aq) + 2e^-$ (எலக்ட்ரான் இழப்பு – ஆக்ஸிஜனேற்றம்)

**<u>எதிர்மின்வாய் ஒடுக்கம்</u>** **2**

- முன்னரே விவாதித்தபடி, எலக்ட்ரான்கள் மின்சுற்று வழியே ஜிங்க் பட்டையிலிருந்து காப்பர் பட்டைக்கு பாய்கின்றன.
- இங்கு கரைசலிலுள்ள $Cu^{2+}$ அயனிகள் எலக்ட்ரான்களை ஏற்றுக்கொண்டு காப்பர் உலோகமாக ஒடுக்கமடைகின்றன, மேலும் இவை காப்பர் மின்முனையின் மீதே படிகின்றன.
- காப்பர் மின்முனை எலக்ட்ரான்களை உட்கொள்ளப்படுவதால் நேர்க்குறியை (+ve) பெறுகிறது.
- $Cu^{2+}(aq) + 2e^- \rightarrow Cu(s)$ (எலக்ட்ரான் ஏற்பு – ஒடுக்கம்)

**<u>உப்புப் பாலம்</u>** **2**

- இரண்டு அரை மின்கலன்களிலுள்ள மின்பகுளிக் கரைசல்கள் உப்புப் பாலத்தை பயன்படுத்தி இணைக்கப்படுகின்றன.
- ஜிங்க் மின்முனையின் நேர்மின்முனை ஆக்ஸிஜனேற்றத்தால் கரைசலில் $Zn^{2+}$ அயனிச் செஷ்வு அதிகரிக்கிறது என்பதை நாம் கற்றறிந்தோம். அதாவது, $SO_4^{2}$ அயனிகளுடன் ஒப்பிடும்போது அதிகளவில் $Zn^{2+}$ அயனிகளை கொண்டிருப்பதால் நேர்மின்முனைப்பகுதியானது அதிக நேர்மின்சுமையை பெறுகிறது.
- இதேபோல, எதிர்மின்முனைப் பகுதியில் $Cu^{2+}$ அயனிகள் காப்பராக ஒடுக்கப்படுவதால், அதிக எதிர்மின்சுமையை பெறுகிறது. அதாவது $Cu^{2+}$ அயனிகளுடன் ஒப்பிடும்போது $SO_4^{2-}$ அயனிகள் அதிகமாக உள்ளன.
- இரண்டு பகுதிகளிலும் மின்நடுநிலைத்தன்மையை பராமரிக்கும் பொருட்டு, வினையுறா எதிரயனிகள் Cl (உப்புப் பாலத்தில் வைக்கப்பட்டுள்ள KCl லிருந்து) உப்புப் பாலத்திலிருந்து நேர்மின்முனைப் பகுதிக்குள் நுழைகின்றன. அதே நேரத்தில் $K^+$ அயனிகள் உப்புப்பாலத்திலிருந்து எதிர்மின்முனைப்பகுதிக்குள் நகருகின்றன.

**<u>மின்சுற்று முழுமையடைதல்</u>** **1**

- எதிர்மின்சுமை கொண்ட ஜிங்க் மின்முனையிலிருந்து, நேர்மின்சுமை கொண்ட காப்பர் மின்முனையை நோக்கி வெளிச்சுற்றின் வழியே எலக்ட்ரான்கள் பாய்கின்றன.
- அதே நேரத்தில், எதிரயனிகள் நேர்மின்முனைப் பகுதியை நோக்கியும், நேரயனிகள் எதிர்மின்முனைப் பகுதியை நோக்கியும் நகருகின்றன.
- இதனால் மின்சுற்று முழுமையடைகிறது.

**<u>மின்முனைகள் அழிதல்</u>**

- டேனியல் மின்கலமானது செயல்பட, ஜிங்க் மின்முனையில் நிறை தொடர்ந்து குறைகிறது.
- ஆனால் காப்பர் மின்முனையின் நிறை தொடர்ந்து அதிகரிக்கிறது.
- எனவே ஜிங்க் மின்முனையானது முற்றிலுமாக $Zn^{2+}$ அயனிகளாக மாறும் வரையிலோ அல்லது மொத்த $Cu^{2+}$ அயனிகளும் உலோக காப்பராக மாறும் வரையிலோ மின்கலன் வேலை செய்யும்.
- டேனியல் மின்கலம் போலல்லாமல், சில நேர்வுகளில், வினைபடுபொருட்கள் அல்லது வினைவிளை பொருட்கள்

மின்முனைகளாக செயல்படுவதில்லை, அத்தகைய நேர்வுகளில் கிராஃபைட் அல்லது பிளாட்டினம் வினையுறா மின்முனைகளை பயன்படுத்தப்படுகின்றன.

- இவை மின்னோட்டத்தை வெளிச்சுற்றுக்கு கடத்துகின்றன.

**<u>கால்வானிக் மின்கலம் குறியீடு</u>** **1**

- கால்வானிக் மின்கலமானது மின்கல குறியீட்டின் மூலம் குறிபிடப்படுகிறது. எடுத்துக்காட்டாக டேனியல் மின்கலமானது பின்வருமாறு குறிப்பிடப்படுகிறது.

$Zn (s) | Zn^{2+} (aq) || Cu^{2+} (aq) | Cu (s)$

- மேற்காண் குறியீட்டில், ஒற்றை செங்குத்துக் கோடானது () நிலைமை எல்லையையும், இரட்டை செங்குத்து கோடானது () உப்புப் பாலத்தையும் குறிப்பிடுகிறது.
- நேர்மின்முனை அரை மின்கலமானது உப்புப்பாலத்திற்கு இடது புறத்திலும், எதிர்மின்முனை அரை மின்கலமானது உப்புப்பாலத்திற்கு வலது புறத்திலும் எழுதப்படுகின்றன.
- நேர்மின்முனை மற்றும் எதிர்மின்முனைகள் முறையே இடது ஓரத்திலும், வலது ஓரத்திலும் எழுதப்படுகின்றன.

**<u>எடுத்துக்காட்டு</u>**

- கால்வானிக் மின்கலத்தில் நிகழும் நிகர வினையானது கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

$2 Cr(s) + 3Cu^{2+} (aq) \rightarrow 2Cr^{3+}(aq) + 3Cu(s)$

- மின்கல குறியீட்டை பயன்படுத்தி மின்கலத்தை விளக்குக, மேலும் அரை வினைகளை எழுதுக.
- நேர்மின்வாய் ஆக்ஸிஜனேற்றம் : $2Cr (s) \rightarrow 2Cr^{3+} (aq) + 6e^-$
- எதிர்மின்வாய் ஒடுக்கம் : $3Cu^{2+} (aq) + 6e^- \rightarrow 3Cu(s)$
- மின்கலக் குறியீடு $Cr (s) | Cr^{3+} (aq) || Cu^{2+} (aq) | Cu(s)$

**7) a) கரிமச் சேர்மங்களின் வகைப்பாடுகளைப் பற்றி விளக்குக.**

**b) பல வகையான கரிமச் சேர்மங்களையும், அன்றாட வாழ்வில் அவற்றின் பயன்பாட்டையும் பற்றி விவாதிக்க.**

**c) எத்தனால் மற்றும் எத்தனாயிக் அமிலத்தின் பயன்களை தருக?**

**<u>a) கரிமச் சேர்மங்களின் வகைப்பாடுகளைப் பற்றி விளக்குக.</u>** **5**

**<u>கரிமச் சேர்மங்கள்</u>**

- சங்கிலித் தொடராக்கும் தன்மை, நான்கு இணை திறன் அமைப்பு, பிற தனிமங்களுடன் சேர்ந்து அதிக அளவில் சேர்மங்களை உருவாக்கும் தன்மை போன்ற கார்பனின் சிறப்பு பண்புகள் மற்ற தனிமங்களிலிருந்து கார்பனை வேறுபடுத்துகின்றன.
- இதனால் ஹைட்ரஜன், ஆக்சிஜன், நைட்ரஜன், சல்பர் போன்ற அனைத்து தனிமங்களுடனும் எளிதாக பிணைப்பை ஏற்படுத்தி சேர்மங்களை உருவாக்குகிறது.
- இச்சேர்மங்கள் பெரும்பாலும் சகப் பிணைப்பினால் தான் உருவாகின்றன. இச்சேர்மங்களை **கரிமச் சேர்மங்கள்** என்று அழைக்கலாம்.

**<u>I. கரிமச் சேர்மங்களை அவற்றின் கார்பன் சங்கிலி வடிவமைப்பைப் பொறுத்து வகைப்படுத்துதல்</u>**

- சங்கிலித் தொடராக்கத்திலான கார்பன் சேர்மங்களை வைத்து கட்டமைக்கப்பட்டது தான் கரிம வேதியியல்.
- கரிமச் சேர்மங்களில், கார்பன் அணுக்கள் மற்ற அணுக்களோடு சகப்பிணைப்பு மூலம் பிணைக்கப்பட்டிருக்கும்.
- இந்த சகப்பிணைப்பு ஒரு சங்கிலித் தொடரை உருவாக்கும்.
- இதனடிப்படையில் கரிமச் சேர்மங்களை இரு வகைகளாகப் பிரிக்கலாம்.




- கார்பன் அணுக்களின் அமைப்பு மற்றும் கரிமச் சேர்மங்களில் அவற்றின் பிணைப்பு ஆகியவற்றின் அடிப்படையில், கரிமச் சேர்மங்களை வகைப்படுத்துவதை விளக்குகிறது.

**<u>1. வளையமற்ற அல்லது திறந்த அமைப்புடைய சேர்மங்கள்</u>**

- இவற்றில் கார்பனும் ஹைட்ரஜனும் நேர்க்கோட்டு அமைப்பில் சங்கிலித் தொடரில் இணைகின்றன.
- அனைத்து கார்பன் அணுக்களும் ஒற்றைப்பிணைப்பில் அமைந்திருந்தால், அது நிறைவுற்ற சேர்மம் என்று அழைக்கப்படுகிறது.
- ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட இரட்டை பிணைப்பு அல்லது முப்பிணைப்பு அமைந்திருந்தால் அது நிறைவுறா சேர்மம் என்று அழைக்கப்படுகிறது.

| $CH_3-CH_2-CH_3$ | $CH_3-CH=CH_2$ |
|---|---|
| **புரப்பேன்** | **புரப்பீன்** |
| நிறைவுற்ற சேர்மம் | நிறைவுறா சேர்மம் |

**<u>2. வளையச் சேர்மங்கள்</u>**

- கரிமச் சேர்மங்களின் கார்பன் சங்கிலித் தொடர் மூடியிருந்தால் அவை வளையச் சேர்மங்கள் என்று அழைக்கப்படுகின்றன.
- ஒரு சங்கிலித் தொடரில் கார்பன் அணுக்கள் மட்டும் அமைந்திருந்தால் அவை கார்போ (ஓரின) வளையச் சேர்மங்கள் என அழைக்கப்படுகின்றன.
- கார்பன் அணுக்களோடு ஆக்சிஜன், நைட்ரஜன், சல்பர் போன்ற மற்ற சில அணுக்களும் சங்கிலித் தொடரில் இணைந்திருந்தால் அவை பல்லின வளையச் சேர்மங்கள் என அழைக்கப்படுகின்றன.
- கார்போ வளையச் சேர்மங்களை அலிசைக்களிக் சேர்மங்கள் மற்றும் அரோமேட்டிக் சேர்மங்கள் என இரண்டாகப் பிரிக்கலாம்.

- அலிசைக்கிளிக் சேர்மங்கள் நிறைவுற்ற அல்லது நிறைவுறாத, ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட பென்சீன் வளையங்களை பெற்றிருக்கும். (வளையத்தில் இரண்டு கார்பன் அணுக்களுக்கு இடையில் ஒன்றுவிட்ட இரட்டைப் பிணைப்பு இருக்கும்.)




## II. வினைச் செயல் தொகுதியின் அடிப்படையில் கரிமச் சேர்மங்களின் வகைப்பாடு

- குறைவான வினை திறன் கொண்ட கார்பன், ஹைட்ரஜன் அணுக்களை பயன்படுத்தியே கரிமச் சேர்மங்களின் கட்டமைப்பு அமைந்துள்ளது.
- ஆனால் இத்தகைய கரிமச் சேர்மங்களுடன் மேலும் சில அணுக்களை சேர்த்தால் பிற சேர்மங்களுடன் வினைபுரியும் தன்மை அதிகரிக்கும்.
- இது சேர்மங்களின் வேதியியல் பண்புகளிலும் பிரதிபலிக்கும். ஓர் சேர்மத்தின் வேதிப் பண்புகளுக்கு காரணமான ஓர் அணு அல்லது அணுக்கள் அடங்கிய தொகுதியே அச்சேர்மத்தின் வினைச் செயல் தொகுதியாகும்.
- ஒரு கரிமச் சேர்மத்தின் வேதி பண்புகள் அனைத்தும் அதன் வினைச் செயல் தொகுதியால் உறுதிப்படுத்தப்படுகின்றன.
- ஆனால் அச்சேர்மத்தின் இயற்பியல் பண்புகள் மூலக்கூறின் எஞ்சிய பகுதியால் உறுதிப்படுத்தப்படுகின்றன.
- கார்பன்களுக்கிடையே இருக்கும் பிணைப்புக்களின் எண்ணிக்கையும் (C=C, C C) வேதியியல் பண்பை தீர்மானிக்கும். –OH, –CHO, –COOH ஆகியவை சில வினைச் செயல் தொகுதிகள் ஆகும்.
- உதாரணமாக ஈத்தேன் என்பது ஒரு ஹைட்ரோகார்பன். இதன் மூலக்கூறு வாய்ப்பாடு $C_2H_6$.
- இதில் இருக்கும் ஒரு ஹைட்ரஜனை எடுத்துவிட்டு ஒரு OH தொகுதியை சேர்க்கும் போது நமக்கு ஆல்கஹால் கிடைக்கிறது.
- –OH என்ற வினைத் தொகுதியை தவிர மீதமுள்ள அமைப்பை R என எடுத்துக் கொண்டால் ஆல்கஹாலை R - OHஎன்ற வாய்ப்பாட்டால் குறிப்பிடலாம்.




- ஒரே வினை செயல் தொகுதியை வைத்து உருவாக்கப்படும் கரிமச் சேர்மங்களை ஒரே வகையைச் சார்ந்தவை எனக் கருதலாம்.
- பல்வேறு சேர்மங்களின் கரிமச் சேர்மங்களின் வகைகள் மற்றும் வினைச் செயல் தொகுதிகள் வகைப்படுத்தப்பட்டுள்ளது.

**வினைச் செயல் தொகுதியின் அடிப்படையில் கரிமச் சேர்மங்களின் வகைப்பாடு**

| சேர்மம் | வினைச்செயல்தொகுதி | பொதுவான வாய்ப்பாடு | உதாரணம் |
|---|---|---|---|
| ஆல்கஹால் | –OH | R-OH | எத்தனால், $CH_4CH_2OH$ |
| ஆல்டிஹைடு | O<br>\|\|<br>- C - H | R-CHO | அசிட்டால்டிஹைடு,$CH_3CHO$ |
| கீட்டோன் | O<br>\|\|<br>- C - | R–CO-R | அசிட்டோன், $CH_3COCH_3$ |
| கார்பாக்சிலிக் அமிலம் | O<br>\|\|<br>- C - OH | R-COOH | அசிட்டிக் அமிலம், $CH_3COOH$ |

## b) பல வகையான கரிமச் சேர்மங்களையும், அன்றாட வாழ்வில் அவற்றின் பயன்பாட்டையும் பற்றி விவாதிக்க. 5

**அன்றாட வாழ்வில் கரிமச் சேர்மங்கள்**

- மனித வாழ்வையும் கரிமச் சேர்மங்களையும் பிரிக்க இயலாது.
- பிறப்பு முதல் இறப்பு வரை உள்ள அனைத்து நிலைகளிலும் கரிமச் சேர்மங்கள் மனிதனுக்கு பயன்படுகின்றன.
- பல வகையான கரிமச் சேர்மங்களையும், அன்றாட வாழ்வில் அவற்றின் பயன்பாட்டையும் நாம் காண்போம்.

**1. ஹைட்ரோ கார்பனின் பயன்கள்**

- எரிபொருள் – உதாரணமாக LPG, பெட்ரோல், மண்ணெண்ணெய்
- பல முக்கியமான செயற்கை பொருட்களின் மூலப்பொருட்கள்
- பல படியாக்கல் பொருட்கள், உதாரணமான டயர், நெகிழி புட்டிகள்

**2. ஆல்கஹால்களின் பயன்கள்**

- கரைப்பான் மற்றும் புரைத்தடுப்பான்-பல முக்கியமான செயற்கை பொருட்களின் மூலப்பொருட்கள்

**3. ஆல்டிஹைடுகளின் பயன்கள்**

- பார்மால்டிஹைடு, கிருமிநாசினியாக பயன்படுகிறது.
- பல முக்கியமான செயற்கை பொருட்களின் மூலப்பொருட்கள்

**4. கீட்டோன்களின் பயன்கள்**

- கரைப்பான்
- கறை நீக்கி

**5. ஈதர்களின் பயன்கள்**

- மயக்க மூட்டி
- வலி நிவாரணி

**6. எஸ்டர்களின் பயன்கள்**

- எல்லா சமையல் எண்ணெய்களிலும் லிப்பிடுகளிலும் எஸ்டர் உள்ளது.

**c) எத்தனால் மற்றும் எத்தனாயிக் அமிலத்தின் பயன்களை தருக?** **5**

**I. எத்தனால், $CH_3CH_2OH$**

- எத்தனால் பொதுவாக ஆல்கஹால் என்று குறிப்பிடப்படுகிறது.
- அனைத்து விதமான ஆல்கஹால் பானங்களிலும் சில இருமல் மருந்துகளிலும் எத்தனால் உள்ளது.

**பயன்கள்**

- எத்தனால், மருத்துவமனைகளில் காயங்களைத் துடைத்து எடுக்கும் புரைத் தடுப்பானாக பயன்படுகிறது.
- வாகனங்களிலுள்ள குளிர்விப்பானில் தண்ணீர் உறைவைத் தடுப்பதில் பயன்படுகிறது.
- பூஞ்சைகள் மற்றும் பாக்டீரியா போன்ற நுண்ணுயிரிகளை அழிக்க கைகளைத் தூய்மையாக்கும் கிருமி நாசினிகளில் பயன்படுத்தப்படுகிறது.
- காயங்களில் கிருமி தொற்று ஏற்படாமல் பாதுகாக்கிறது.
- மருந்துகள், எண்ணெய்கள், கொழுப்புப் பொருள்கள், வாசனைப் பொருள்கள், சாயங்கள் போன்றவற்றைக் கரைக்கும் கரைப்பானாக பயன்படுகிறது.
- மெத்தில் ஆல்கஹால் கலந்த சாராயம் (95% எத்தனால் மற்றும் 5% மெத்தனால்), பெட்ரோல் மற்றும் எத்தனால் கலந்த கலவை (ஆற்றல் ஆல்கஹால்), இயல்புத் தன்மை இழந்த ஆல்கஹால் (எத்தனால் மற்றும் பிரிடின் கலந்தவை) இவை தயாரிப்பதில் பயன்படுகிறது.
- உணவுப் பொருட்களின் சலவையை கூட்டுவதற்கு பயன்படுகிறது. உதாரணமாக வெண்ணிலாச் சாறு. இது ஓர் பொதுவான உணவு சுவையூட்டி. இவை ஆல்கஹால், நீர் கலந்த கரைசலில் வெண்ணிலா விதைகள் வினைக்குட்படுத்தப்பட்டு தயாரிக்கப்படுகிறது.

**II. எத்தனாயிக் அமிலம் $CH_3COOH$**

- எத்தனாயிக் அமிலம் அல்லது அசிட்டிக் அமிலம் என்பது கார்பாக்சிலிக் அமில தொகுதியில் முக்கியத்துவமான ஒன்று.

**பயன்கள்**

- நீர்த்த அசிட்டிக் அமிலமானது (வினிகர்) உணவு சேர்க்கையாகவும், சுவையூட்டியாகவும் மற்றும் உணவு பதப்படுத்தியாகவும் பயன்படுகிறது.
- நெகிழி தயாரிப்பில் பயன்படுகிறது.
- சாயங்கள், நிறங்கள் மற்றும் வண்ணப் பூச்சுகள் தயாரிக்கப் பயன்படுகிறது.
- துணிகளில் அச்சுப் பதிக்க பயன்படுகிறது.
- ஆய்வக கரணியாக பயன்படுகிறது.
- இரப்பர் பாலைக் கெட்டிப்படுத்த பயன்படுகிறது.- வாசனைப் பொருட்கள் மற்றும் மருந்துகள் தயாரிக்கப் பயன்படுகிறது.

**8) கார்போஹைட்ரேட்டுகள் வரையறு? அதன் வகைப்பாடு மற்றும் முக்கியத்துவத்தைக் குறிப்பிடுக.**

**கார்போஹைட்ரேட்கள்:** **5**

- கார்போஹைட்ரேட்டுகள் என்பவை அனைத்து உயிரினங்களிலும் மிக அதிகளவில் காணப்படும் கரிம சேர்மங்கள் ஆகும்.
- இவற்றில் பெரும்பாலனவை இனிப்பு சுவை கொண்டவைகளாக இருப்பதன் காரணத்தால் சாக்கரைடுகள் (சர்க்கரை எனும் பொருள்படும், 'Sakcharon' எனும் கிரேக்க சொல்லிலிருந்து வருவிக்கப்பட்டது) எனவும் அழைக்கப்படுகின்றன.
- இவை நீரேற்றமடைந்த கார்பன்கள் என கருதப்படுகின்றன, மேலும் இவை நீரில் காணப்படும் அதே விகிதத்தில் ஹைட்ரஜன் மற்றும் ஆக்சிஜன் அணுக்களை கொண்டுள்ளன.
- வேதியியலாக இவை பாலிஹைட்ராக்ஸி ஆல்டிஹைடுகள் அல்லது கீட்டோன்கள் ஆகும்.
- இவற்றின் பொது வாய்ப்பாடு $C_n(H_2O)_n$ (சில பொதுவான எடுத்துக்காட்டுகள்: குளுக்கோஸ் (மோனோ சாக்கரைடு), சுக்ரோஸ் (டைசாக்கரைடு) மற்றும் ஸ்டார்ச் (பாலிசாக்கரைடு)
- பச்சை தாவரங்களில் ஒளிச்சேர்க்கையின்போது கார்போஹைட்ரேட்கள் தொகுக்கப்படுகின்றன.
- ஒளிச்சேர்க்கை எனும் சிக்கலான செயல்முறையில் கார்பன் டையாக்சைடு மற்றும் நீர் ஆகியவற்றை குளுக்கோஸ் மற்றும் ஆக்ஸிஜன் ஆக மாற்ற தேவையான ஆற்றலை சூரிய ஒளிவழங்குகிறது.
- அதன் பின்னர் குளுக்கோஸ் மற்ற கார்போஹைட்ரேட்களாக மாற்றமடைகிறது. இது விலங்குகளால் உண்ணப்படுகிறது.

$$6CO_2 + 6H_2O \xrightarrow{\text{சூரியஒளி}} C_6H_{12}O_6 + 6O_2$$

**வகைகள்** **5**

- கார்போஹைடிரேட்டுகள் இருபெரும் பகுதிகளாக வகைப்படுத்தப்படுகின்றன.

1. சர்க்கரை
2. சர்க்கரை இல்லாதவை அல்லது பலபடி சர்க்கரைகள்




**1. சர்க்கரைகள்**

- இவை நீரில் கரையும் தன்மையுள்ள இனிய சுவை கொண்ட படிகங்கள்.

**அ) மோனோ சாக்கரைடுகள்:**

- மேனோ சாக்கரைடுகள் என்பவை மேலும் எளிய சர்க்கரைகளாக நீராற்பகுக்க முடியாத கார்போஹைட்ரேட்கள் ஆகும். இவை எளிய சர்க்கரைகள் எனவும் அழைக்கப்படுகின்றன.
- மோனோ சாக்கரைடுகள் $C\text{-}_n(H_2O)_n$ எனும் பொது மூலக்கூறு வாய்ப்பாட்டை பெற்றுள்ளன.
- பல மோனோ சாக்கரைடுகள் கண்டறியப் பட்டிருந்தாலும் இவற்றில் ஏறத்தாழ 20 மோனோசாக்கரைடுகள் மட்டுமே

இயற்கையில் காணப்படுகின்றன. குளுக்கோஸ் ஃபிரக்டோஸ், ரிபோஸ், எரித்ரோஸ் ஆகியன சில பொதுவான எடுத்துக்காட்டுகளாகும்.

- மோனோ சாக்கரைடுகளை அவற்றிலுள்ள வினை செயல்தொகுதி (ஆல்டோஸ்கள் அல்லது கீட்டோஸ்கள்) மற்றும் சங்கிலியிலுள்ள கார்பன் அணுக்களின் எண்ணிக்கையின் (டிரையோஸ்கள், டெட்ரோஸ்கள், பென்டோஸ்கள் , ஹெக்ஸோஸ்கள் போன்றவை) அடிப்படையில் மேலும் வகைப்படுத்தப்படுகின்றன.
- கார்பனைல் தொகுதியானது ஆல்டிஹைடு தொகுதியாக இருந்தால் அந்த சர்க்கரை, ஆல்டோஸ் எனவும், கார்பனைல் தொகுதியானது கீட்டோன் தொகுதியாக இருந்தால் அந்த சர்க்கரை, ஆல்டோஸ் எனவும் அறியப்படுகின்றன.
- பொதுவாக மோனோ சாக்கரைடுகள் மூன்று முதல் எட்டு கார்பன் அணுக்களை பெற்றுள்ளன.

**மோனோ சாக்கரைகளின் பல்வேறு வகைகள்**

| சங்கிலியில் உள்ள கார்பன் அணுக்களின் எண்ணிக்கை | வினைச் செயல் தொகுதி | சர்க்கரையின் வகை | எடுத்துக்காட்டு |
|---|---|---|---|
| 3 | ஆல்டிஹைடு | ஆல்டோட்ரையோஸ் | கிளிசரால்டிஹைடு |
| 3 | கீட்டோன் | கீட்டோட்ரையோஸ் | டைஹைட்ராக்ஸிஅசிட்டோன் |
| 4 | ஆல்டிஹைடு | ஆல்டோடெட்ரோஸ் | எரித்ரோஸ் |
| 4 | கீட்டோன் | கீட்டோடெட்ரோஸ் | எரித்ரலோஸ் |
| 5 | ஆல்டிஹைடு | ஆல்டோபென்டோஸ் | ரிபோஸ் |
| 5 | கீட்டோன் | கீட்டோபென்டோஸ் | ரிபுலோஸ் |
| 6 | ஆல்டிஹைடு | ஆல்டோஹெக்ஸோஸ் | குளுக்கோஸ் |
| 6 | கீட்டோன் | கீட்டோஹெக்ஸோஸ் | ஃபிரக்டோஸ் |

**குளுக்கோஸ்:**

- குளுக்கோஸ் ஒரு எளிய வகை சர்க்கரை ஆகும். இது நமக்கு முதன்மையான ஆற்றல் மூலமாகவிளங்குகிறது.
- இது முக்கியமான மற்றும் மிக அதிகளவில் காணப்படும் சர்க்கரை ஆகும்.
- இது தேன், திராட்சை மற்றும் மாம்பழம் போன்ற இனிப்புச்சுவையுடைய பழங்களில் காணப்படுகிறது.
- மனித இரத்தத்தில் ஏறத்தாழ 100 mg/dl குளுக்கோஸ் இருப்பதால், இது இரத்த சர்க்கரை எனவும் அறியப்படுகிறது. சுக்ரோஸ், ஸ்டார்ச், செல்லுலோஸ் போன்றவற்றில் குளுக்கோஸ் ஒன்றிணைந்த வடிவத்தில் அமைந்துள்ளது.

**ஃபிரக்டோஸ்**

- ஃபிரக்டோஸ் என்பது பொதுவாக அறியப்பட்ட மற்றொரு மோனோ சாக்கரைடு ஆகும்.
- இது குளுக்கோஸை போன்று அதே மூலக்கூறு வாய்ப்பாட்டை கொண்டுள்ளது.
- இது இடஞ்சுழி திருப்புத் திறனைக் கொண்ட கீட்டோஹெக்ஸோஸ் ஆகும்.
- இது பழங்களில் மிக அதிகளவு காணப்படுவதால் பழச் சர்க்கரை எனவும் அழைக்கப்படுகிறது.

**ஆ) ஒலிகோசர்க்கரைகள்:**

- நீராற்பகுத்தலில், இவை இரண்டிலிருந்து பத்து ஒற்றைச் சர்க்கரை மூலக்கூறுகளைக் கொடுக்கின்றன.
- இவ்வாறு உண்டாகும் ஒற்றை சர்க்கரை மூலக்கூறுகளின் எண்ணிக்கையைப் பொறுத்தும், இவை வகைப்படுத்தப்படுகின்றன.

**டைசாக்கரைடுகள்**

- டைசாக்கரைடுகள் என்பவை நீராற்பகுப்படைந்து இரண்டு மோனோசாக்கரைடு மூலக்கூறுகளை தரும் சர்க்கரைகள் ஆகும்.
- இந்த வினையானது பொதுவாக நீர்த்த அமிலம் அல்லது நொதியினால் வினையூக்கப்படுகிறது.
- டைசாக்கரைடுகள் $C_n(H_2O)_{n-1}$. எனும் பொது வாய்ப்பாட்டினைக் கொண்டுள்ளன.
- டைசாக்கரைடுகளில் உள்ள இரண்டு மோனோ சாக்கரைடு அலகுகள் 'கிளைக்கோஸிடிக் பிணைப்பு' எனும் ஆக்சைடு பிணைப்பினால் பிணைக்கப்பட்டுள்ளன.
- இந்த பிணைப்பானது ஒரு மோனோசாக்கரைடின், ஆனோமர் கார்பனில் உள்ள ஹைட்ராக்ஸில் தொகுதியானது மற்றொரு மோனோசாக்கரைடிலுள்ள ஹைட்ராக்ஸில் தொகுதியுடன் வினைபுரிவதால் உருவாகிறது.
- எடுத்துக்காட்டு: சுக்ரோஸ், லாக்டோஸ், மால்டோஸ்

**சுக்ரோஸ்**

- சுக்ரோஸ் என்பது உணவுச் சர்க்கரை என அறியப்படுகிறது. இது மிக அதிகளவில் காணப்படுகிறது.
- கரும்புச் சாறு மற்றும் சர்க்கரைவள்ளிக் கிழங்கு ஆகியவற்றிலிருந்து இது அதிகளவில் பெறப்படுகிறது.
- தேனீக்கள் போன்ற பூச்சிகள் இன்வர்டேஸ் எனப்படும் நொதியை கொண்டுள்ளன. இந்த நொதியானது, சுக்ரோஸ் நீராற்பகுப்படைந்து குளுக்கோஸ் மற்றும் ஃபிரக்டோஸ் கலவையை உருவாக்கும் வினைக்கு வினையூக்கியாக செயல்படுகிறது.
- உண்மையில் தேன் என்பது குளுக்கோஸ் ஃபிராக்டோஸ் மற்றும் சுக்ரோஸ் ஆகியவற்றின் கலவையாகும்.
- சுக்ரோஸ் மூலக்கூறானது நீராற்பகுத்தலின்போது சம அளவில் குளுக்கோஸ் மற்றும் ஃபிராக்டோஸ் அலகுகளை தருகின்றன.
- சுக்ரோஸ் $\xrightarrow{\text{இன்வர்டேஸ்}}$ குளுக்கோஸ் + பிரக்டோஸ்

**லாக்டோஸ்:**

- லாக்டோஸ் பாலூட்டிகளின் பாலில் காணப்படும் ஒரு டைசாக்கரைடு ஆகும். எனவே இது பால் சர்க்கரை எனவும் குறிப்பிடப்படுகிறது.
- இது நீராற்பகுத்தலில் காலாக்டோஸ் மற்றும் குளுக்கோஸ் ஆகியவற்றை தருகிறது.

**மால்டோஸ்:**

- மாவு பொருளிலிருந்து பிரித்தெடுக்கப்படுவதால் இது மால்டோஸ் எனும் பெயர் பெற்றுள்ளது.
- இது பொதுவாக மால்ட் சர்க்கரை என்றழைக்கப்படுகிறது.
- முளைகட்டிய பார்லி அரிசியிலிருந்து பெறப்படும் மாவுப் பொருளானது மால்டோஸ் சர்க்கரையின் முக்கிய மூலமாக விளங்குகிறது,
- அமைலேஸ் எனும் நொதியால் ஸ்டார்ச் செரிக்கப்படும்போது மால்டோஸ் உருவாக்கப்படுகிறது.

**2. சர்க்கரை இல்லாதவை (அ) பாலிசாக்கரைடுகள்:**

- பாலிசாக்கரைடுகள் கிளைகோஸிடிக் பிணைப்புகளால் ஒன்றாக பிணைக்கப்பட்டுள்ள அதிக எண்ணிக்கையிலான மோனோ சாக்கரைடு அலகுகளை கொண்டுள்ளன.
- மேலும் இவை கார்போஹைட்ரேட்களின் மிகப்பொதுவான வடிவங்களாகும், இனிப்புச் சுவையை பெற்றிருக்காத காரணத்தினால் பாலிசாக்கரைடுகள், சர்க்கரை அல்லாதவை என்றழைக்கப்படுகின்றன.
- இவைகள் நேர்க்கோட்டு சங்கிலி மற்றும் கிளைச் சங்கிலி மூலக்கூறுகளை உருவாக்குகின்றன.
- பாலிசாக்கரைடுகள் அவற்றிலுள்ள உட்கூறு மோனோ சாக்கரைடு அலகுகளைப் பொருத்து ஓரின பாலிசாக்கரைடுகள் மற்றும் பல்லின பாலிசாக்கரைடுகள் என இரண்டு வகைகளாக வகைப்படுத்தப்படுகின்றன.
- ஓரின ஒரு வகை மோனோ சாக்கரைடுகளாலும், பல்லின பாலிசாக்கரைடுகள் ஒன்றுக்கு மேற்பட்ட வகையிலான மோனோ சாக்கரைடுகளாலும் உருவாக்கப்படுகின்றன.
- எடுத்துக்காட்டு: ஸ்டார்ச். செல்லுலோஸ் மற்றும் கிளைக்கோஜன் (ஓரினபாலிசாக்கரைடுகள்): ஹைலுரானிக் அமிலம், ஹெபாரின் (பல்லின பாலிசாக்கரைடுகள்).

**அ) ஸ்டார்ச்**

- ஸ்டார்ச் தாவரங்களில் ஆற்றல் சேமிப்பாக பயன்படுகிறது. உருளைக்கிழங்கு, மக்காச்சோளம், கோதுமை மற்றும் அரிசி ஆகியன ஸ்டார்ச்சின் முக்கிய மூலங்களாகும்.
- இது (1, 4) கிளைக்கோஸிடிக் பிணைப்புகளால் பிணைக்கப்பட்டுள்ள குளுக்கோஸ் மூலக்கூறுகளாலான பலபடியாகும்.
- ஸ்டார்ச்சை நீரில் கரையும் அமைலேஸ் மற்றும் நீரில் கரையா அமைலோபெக்டின் என இரண்டுகூறுகளாக பிரிக்க இயலும் ஸ்டார்ச் ஆனது ஏறத்தாழ 20% அமைலேஸ் மற்றும் 80% அமைலோபெக்டினைக் கொண்டுள்ளது.

**ஆ) செல்லுலோஸ்** 5

- செல்லுலோஸ், தாவர செல்சுவர்களில் காணப்படும் மிக முக்கிய பகுதிக்கூறாகும், பஞ்சு தூய செல்லுலோஸ் ஆகும். நீராற்பகுத்தலில் செல்லுலோஸ் ஆனது D- குளுக்கோஸ் மூலக்கூறுகளை தருகின்றன.
- செல்லுலோஸ் ஒரு நேர்கோட்டு சங்கிலி பாலிசாக்கரைடு, இதில் குளுக்கோஸ் மூலக்கூறுகள்.
- (1, 4) கிளைக்கோஸிடிக் பிணைப்புகளால் பிணைக்கப்பட்டுள்ளன.
- காகிதம் தயாரிப்பில் செல்லுலோஸ் மிக அதிகளவில் பயன்படுகிறது. செல்லுலோஸ் இழைகள், ரேயான் வெடிபொருள், (வெடி பஞ்சு- செல்லுலோஸின் நைட்ரோஏற்றம் பெற்ற எஸ்டர்) மற்றும் பல வகைகளில் பயன்படுகிறது.
- மனிதர்கள் செல்லுலோஸை உணவாக பயன்படுத்த இயலாது, ஏனெனில் நம் செரிமான அமைப்பு செல்லுலோஸை நீராற்பகுக்க தேவையான நொதிகளை (கிளைக்கோஸிடேஸ்கள் அல்லது செல்லுலேஸ்கள்) கொண்டிருக்கவில்லை.

**இ) கிளைக்கோஜன்**

- கிளைக்கோஜன் விலங்குகளில் காணப்படும் சேமிப்பு பாலிசாக்கரைடு ஆகும். இது விலங்குகளின் கல்லீரல் மற்றும் தசைகளில் காணப்படுகிறது. கிளைக்கோஜன் விலங்கு ஸ்டார்ச் எனவும் அழைக்கப்படுகிறது.
- இது நீராற்பகுப்படைந்து குளுக்கோஸ் மூலக்கூறுகளைத் தருகிறது. கிளைக்கோஜனின் அமைப்பானது அதிக கிளைகளையுடைய அமைலோபெக்டினின் அமைப்பை ஒத்துள்ளது.
- கிளைக்கோஜனில் ஒவ்வொரு 8-14 குளுக்கோஸ் அலகுகளிலும் கிளைகள் உருவாகின்றன ஆனால், அமைலோபெக்டினில் 24-30 அலகுகளில் கிளைகள் உருவாகின்றன.
- மனித உடலில் உள்ள அதிகப்படியான குளுக்கோஸ் ஆனது கிளைக்கோஜனாக மாற்றப்பட்டு சேமிக்கப்படுகிறது.

**கார்போஹைட்ரேட்களின் முக்கியத்துவம்:**

- கார்போஹைட்ரேட்கள் தாவரங்கள் மற்றும் விலங்குகளில் பரவலாக காணப்படுகின்றன, அவை ஆற்றல் மூலங்களாகவும், கட்டமைப்பு பலபடிகளாகவும் செயலாற்றுகின்றன.
- கார்போஹைட்ரேட் மனித உடலில் கிளைக்கோஜன் ஆகவும், தாவரங்களில் ஸ்டார்ச் ஆகவும் சேமிக்கப்படுகிறது.
- தாவரங்களின் செல் சுவரின் முக்கிய பகுதிப்பொருளான செல்லுலோஸ் போன்ற கார்போஹைட்ரேட்கள் காகிதம், மரச் சாமான்கள் மற்றும் பருத்தி உடைகள் ஆகியவற்றை பெற பயன்படுகிறது.
- எளிய சர்க்கரையான குளுக்கோஸ் ஆனது உடனடி ஆற்றல் மூலமாக செயல்புரிகிறது.
- ரிபோஸ் சர்க்கரைகள், நியூக்ளிக் அமிலங்களின் முக்கிய பகுதிப் பொருட்களில் ஒன்றாகும்.
- ஹைராலுனேட் (கிளைக்கோஸமினோகிளைக்கேன்கள்) போன்ற மாற்றமடைந்த கார்போஹைட்ரேட்டுகள் விலங்குகளின் உடலில் அதிர்வேற்பிகளாகவும், உயவுப் பொருளாகவும் பயன்படுகிறது.